Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 40 ரூபா • தீபம் 162 • 04.11.2018

சூரியன் பதிப்பகம்

சூரியன் பதிப்பகம் தற்போது புதிய முகவரியில்
காகிததாதிகள் விநியோகத்தர்கள்
புதிய கச்சேரி அருகாமை,
523, திருநகர் வீதி, கிளிநொச்சி 077-2882142



## “கஜேந்திரன் வெளிநாட்டிலிருந்து எப்படி திரும்பினாரென்று தெரியும்”

### சுரேஸ் பிரேமச்சந்திரன் ‘சுளீர்’



## என்னை ஏன் அப்படி செய்தார்கள்?

## வடமாகாணசபை எப்பவும் ஜாலிதான்!

## பாதரின் ஒப்புதல் வாக்குமூலம்!

## தொடரும் கல்முனை மாநகரசபை களேபரங்கள்!



# பிரதமர் மாற்றம்

## பின்னணியில் நடந்தது என்ன?





தீபாவளி வாழ்த்துக்கள்



அபிராமி சூ சென்ரர்
ABIRAMI SHOE CENTRE
155,156 MODERN MARKET,
POWER HOUSE ROAD, JAFFNA.
T.P : 021-2223525


New
V.M.K
JEWELLERY
வீ.எம்.கே. ஜூவல்லரி
Dealers in 22kt. Gold Jeweller
Manufacturers of Gold Jewels
No: 80/30 Kasthuriar Road, jaffna
Tel: 021 222 2515 / 021 720 1117
Kandy Road, Chavakachcheri
Tel: 021 227 1616 / 077 784 9369
மின்னிடும் பொன் நகைகளின் தங்கக் களஞ்சியம்...


TOPAZ Mall (Pvt) Ltd.
TOPAZ
No.01 Shop in Jaffna
ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்
We are Specialist in
Wedding suits, Wedding Sarees, Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items
TOPAZ
No 72, Grand Bazaar
Jaffna
Tel 021 222 4743
Fax 021 222 7645
TOPAZ TAILORING
No 80/24, Kasthuriyar Road
Jaffna
Tel 021 222 4643
TOPAZ MALL
No 195, Power House Road
Jaffna
Tel 021 222 4933
021 221 9933
Email : topazagn@gmail.com
coustomer is king


TILKO hotels
TILKO
JAFFNA CITY HOTEL
TILKO JAFFNA CITY HOTEL
Mob : 077 780 393, 0777 696 443
Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 5969, Fax: 021 222 7294
e-mail: tilko.tilak@gmail.com Web: www.cityhoteljaffna.com

# எப்பவும் நாங்கள் ஜாலிதான்!

ஜஸ்மினி

இதோ, கண்ணைமூடித் திறக்க வடமாகாணசபையின் ஆயுள் காலம் முடிகிறது. நல்லது, கெட்டது, குத்து, வெட்டு, ஒட்டு... என ஐந்து வருடத்தை ஒரு மாதிரியாக ஓடி முடித்து விட்டார்கள். வடமாகாண சபையென்றாலே, உடனே நினைவுக்கு வருவது என்ன?

அவர்கள் செய்த அபிவிருத்தியா... அரசியல் முயற்சிகளா? இல்லை. உள்ளே நடக்கும் குத்துவெட்டுத் தானே உடனே நினைவிற்கு வரும். ஒவ்வொரு அமர்வும் ஒவ்வொரு பிக்பாஸ் சீசன். அமர்வுக்கு அமர்வு யாராவது ஒருவர் சைட் டிஷ்ஷாக சிக்குவார். ஓடவும் முடியாது, ஒளியவும் முடியாது என அவரைப் போட்டு கும்மியடிப்பார்கள்.

இப்படி செம என்ரரெயின்ற் மென்றாக ஐந்து வருடத்தை கடத்தியவர்கள், வெளியில் வந்து என்ன செய்வார்கள்? ஒரு ஜாலி கற்பனை.



காவல்துறை பாதுகாப்பும் இருக்க வேண்டும். இது குறித்து முதலமைச்சரும், அவைத்தலைவரும் கவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். எமது மக்களை அழித்த, இனப்படுகொலை செய்த அரசிடம் இவற்றை இரந்து கேட்க நாம் தயாராக இல்லையென்பதையும் மக்களிடம் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

**ப.சி.சிக்னேஸ்வரன்**

(பத்திரிகை அறிக்கை) மாகாண சபையின் பதவிக்காலத்தின் பின் மக்கள் அமைப்பை கட்டியெழுப்ப இருப்பதாக கூறியிருந்தேன். வெகுஜன போராட்டங்களின் மூலம் அதை செய்ய திடசங்கற்பம் பூண்டுள்ளோம். மத்தியின் மனநிலை மாறவும், தமிழ் தேசிய கூட்டமைப்பில் மாற்று தலைமை ஏற்படவும் அது உதவும். எமது போராட்டத்தை இனிவரும் நாட்களில் தீவிரப்படுத்தவுள்ளோம். முதலமைச்சராக இருந்த போதே வாராந்தம் கேள்வி பதில் வெளியிட்டேன். இனி நாளாந்த கேள்வி பதில் மூலம் வெகுஜன போராட்டத்தை தீவிரப்படுத்தவுள்ளோம்.

**மி.பவராசா**

(பத்திரிகை அறிக்கை) இலங்கையில் எல்லா மாவட்டங்களிலும் மழை பெய்து கொண்டிருக்கிறது. பல மாவட்டங்களில் தேவைக்கு அதிகமான மழை பெய்து, நீர்த்தேக்கங்களை திறந்துகூட விட்டிருக்கிறார்கள். எந்தெந்த நீர்த்தேக்கத்தில் இருந்து எவ்வளவு நீரை திறந்து விட்டார்கள் என்ற விபரம் என்னிடம் உள்ளது. இங்கே என்ன நடக்கிறது? மழை பெய்யவில்லை. இதை கவனிக்க வேண்டிய முதலமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார்? வினைத் திறனில்லாதவர்களின் கையில் நிர்வாகத்தை கொடுத்து விட்டு, மழையில்லையென்றால் என்ன நடக்கும்? சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும். அடுத்த முறையாவது மக்கள் சரியானவர்களின் கையில் அதிகாரத்தை கொடுக்க வேண்டும்.

**எம்.பே.விவாஜிலிங்கம்**

(உதவியாளரிடம்) வல்வெட்டித் துறை நகரசபை உறுப்பினர்கள் எல்லோருக்கும் ஒரு லெற்றர் போடுங்கள். உடனடியாக சபையில் இனஅழிப்பு தீர்மானத்தை நிறைவேற்றுவோம். வடக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, வல்வெட்டித்துறையில் பொது நினைவுத்தூபி அமைப்பதா இல்லையா என்ற சர்ச்சைக்கு ஐ.நாவே ஒரு தீர்ப்பை தரட்டும். அது எல்லா இயக்கங்களிற்குமான நினைவுத்தூபி என சில மாற்று கட்சிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். இல்லை... அது பன்னிரண்டு வேங்கைகளின் நினைவிடம்தான் என்பதை உறுதியாக சொல்லிக் கொள்கிறேன். தேவையெனில் இன்ரபோல் ஊடாகவும் இதை நிரூபித்து காட்டுவேன் என்ற அறிக்கையையும் தயார் செய்யுங்கள்.

**மே.குயந்தன்**

(தொலைபேசியில்) மச்சி... சும்மாயிருக்க பொழுதே போகலையே. நான் சில விசயங்களை ஓப்பினாக பேசப்போறன். நீங்கள் எல்லாம் சப்போர்ட் பண்ணினால், எங்காவது உள்ளூராட்சிசபையில் எதிர்க்கட்சி மீது ஒரு நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிப்பம். அடுத்த எதிர்க்கட்சி யார் என்ற விபரத்தையும் சேர்ந்து, குடுத்து விடலாம். ஒரு ட்ராப்ற் ரெடி பண்ணினால் சரி.கிவஞானத்தாரிடமே குடுத்து விடலாம். மார்ட்டின் ரோட்டுக்கு வாறியா? சாவகச்சேரியில் நான் ஒரு பாராட்டு விழா எனக்கு செய்ய சொல்லியிருக்கிறன். உங்க ஏரியாவிலும் ஒன்று ஏற்பாடு செய்யலாமா?

**கசுபதிப்பிள்ளை**

(கூட்டத்தில்) அன்பான மக்களே, மாகாணசபைக்குள் எவ்வளவோ களேபரங்கள் நடந்தன. அவை மோதல் மட்டுக்கும் போயுமிருந்தன. அப்போதெல்லாம், எல்லாம் வல்ல எம்பெருமானிற்கு பிடித்த இசையெனும் வேள்வியை நான் மாகாணசபைக்குள் மூட்டினேன். நந்தவனத்திலோர் ஆண்டி முதலான பல பாடல்களை பாடி மாகாணசபையை சாந்தப்படுத்தினேன். இந்த ஓய்வுகாலத்தில் என் இசை ஞானத்தை மேலும் வளர்த்து வருகிறேன். அடுத்த சபையிலும் கலகக்காரர்கள் வருவார்கள். தமிழர்களின் ராச்சியத்தில் அடிதடி நடந்தது என்ற அவப்பெயர் ஏற்படாமல் இருக்க, என்னை அடுத்த முறையும் தெரிவுசெய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**இனந்தி சுசிதரன்**

(கூட்டத்தில்) மாகாணசபை கலைந்தாலும் அவைத்தலைவர் பதவியில் நீடிக்கிறார். அதேசிறப்புரிமை அமைச்சர்களிற்கும் இருக்க வேண்டும். காவல்துறை பாதுகாப்பும் இருக்க வேண்டும். இது குறித்து முதலமைச்சரும், அவைத்தலைவரும் கவனம் செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். எமது மக்களை அழித்த, இனப்படுகொலை செய்த அரசிடம் இவற்றை இரந்து கேட்க நாம் தயாராக இல்லையென்பதையும் மக்களிடம் சொல்லி வைக்க விரும்புகிறோம். ஆகவே கடிதம் மூலம் அவற்றை அனுப்பி வைக்கலாமென நினைக்கிறோம்.

**ப.மர்வேஸ்வரன்**

(கூட்டத்தில்) எங்களது அமைச்சு என்ன செய்தது என்று எதிர் தரப்பிலுள்ளவர்கள் கேட்கிறார்கள். அவர்களிற்கு நான் ஒன்றைத்தான் கூற விரும்புகிறேன். நாங்கள் பதவியேற்பதற்கு முன்னர் எங்கள் அமைச்சைப்பற்றி எத்தனை பத்திரிகை செய்திகள் வந்தன? நாங்கள் அமைச்சு பதவியை எடுத்த பின் எத்தனை பத்திரிகை செய்திகள் வந்தன? ஏதோ அங்கே நடந்ததால்தானே எங்கள் காலத்தில் அதிகமாக பத்திரிகை செய்திகள் வந்தன. அப்படியிருக்க, இயங்காத அமைச்சு என எப்படி கூறலாம்?


**சா.வஜதீப்ன்**

நான் பேச வேணும்... இனப் பிரச்சனை பற்றியும் பேச வேணும். எல்லா பிரச்சனை பற்றியும் பேச வேணும். ஆனால் இந்த மாகாணசபை குரூப்புகளிற்குள் சிக்கக்கூடாது. எல்லா குரூப்புடனும் இருக்கிற மாதிரியும் தெரிய வேணும். சி.எம் குரூப்புடன் இருக்கிற மாதிரியும் தெரிய வேணும். எங்க, எப்பிடி கூட்டம் போடலாம்.

**உதவியாளர்**

அதுக்கு நீங்கள் அநுராதபுரத்திற்கு அங்காலதான் கூட்டம் போட வேணும்.

# பிரதமர் மாற்றம்
## பின்னணியில் நடந்தது என்ன?





ஒரு சாதாரண நாளாகத்தான் கடந்து கொண்டிருந்தது ஒகஸ்ட் 26ம் திகதி.

ஆனால் இரண்டு இடங்களில் மட்டும், மிகமிக இரகசியமாக அரசியல் மாற்றமொன்றிற்கான முஸ்தீபுகள் நடந்து வந்தன. ஜனாதிபதி மைத்திரி, மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் தலைமையிலேயே அந்த இரகசிய முயற்சிகள் நடந்தன!

எதிர்பாராத விதமான புதிய பிரதமர் பதவியேற்பு இதன் பின்னரே இடம்பெற்றது.

சேரவே முடியாதென எதிர்பார்க்கப் பட்ட மைத்திரி மஹிந்த தரப்புக்கள் எப்படி கைகோர்த்தன? இதன் பின்னணியில் என்ன நடந்தது?

இவற்றைப்பற்றிய ஒருரிப்போர்ட்டே இது.

மைத்திரி மஹிந்த இணைய வேண்டிய உட்கட்சி நெருக்கடி சமீப காலங்களாக அதிகரித்துக் கொண்டே வந்திருந்தது. இணைவு இரண்டு தரப்பிற்குமே அவசியமாக இருந்தது. விகித வித்தியாசம் இருந்ததே தவிர, இரண்டு தரப்பின் அரசியல் எதிர்காலத்திற்கும் தவிர்க்க முடியாமல் இணைய வேண்டியிருந்தது. இதற்காக சமீப காலங்களில் இரகசிய பேச்சுக்கள் நடந்தும் வந்தன.

இந்த பின்னணியிலேயே அண்மை யில் ஏற்பட்ட சில சம்பவங்கள் இரண்டு தரப்பையும் திடீரென ஒட்ட வைத்துள்ளது.

ரணிலை பதவி நீக்கம் செய்யும் முடிவை நோக்கி மைத்திரியை விரைந்து தள்ளியது, நாமல் குமார வெளிப்படுத்திய கொலை சதி முயற்சியென அவரே பகிரங்கமாக கூறியிருந்தார். அதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. இந்த சதி முயற்சி குறித்த முழுமையான ரிப்போர்ட் மைத்திரியின் கைக்கு சென்றபோது, அவர ஆடிப்போய் விட்டாராம்.

கொலைசதிமுயற்சியில்பொன்சேகா நெருக்கமாக தொடர்புபட்டிருந்தார் என எம்.பிக்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி குறிப்பிட்டது ஊடகங் களிலும் வெளியாகியிருந்தது. ஐ.தே.கவின் உயர்மட்டம் இந்த விவகாரத்தில் தொடர்புபட்டிருந்ததை முதற்கட்ட விசாரணை அறிக்கையில் காணக்கிடைக்கவில்லை. பொலிஸ் திணைக்களம் ஐதேக வசமுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சின் கீழ் இருப்பதால், அந்த விபரங்கள் இல்லாமல் செய்யப்பட்டதில் அரசியல் அழுத்தங்கள் இருந்ததாக ஜனாதிபதி தரப்பு நம்புவதாக தெரிகிறது.

ஏற்கனவே பொருந்தாத திருமணமாக கசப்பிலிருந்து கூட்டரசு, சத்தமில்லாமல் மணமுறிவு பெற்ற பின்னணி இதுதான்.

இந்த இடத்தில் உத்தியோகப்பற்றற்ற தகவல் ஒன்றையும் குறிப்பிட வேண்டும். புதிய பிரதமரை நியமிப் பதற்கு முன்னதாக, இரண்டு தரப்பும் புரிந்துணர்வு உடன்படிக்கை யொன்றில் கைச்சாத்திட்டதாக தகவல் ஒன்றுள்ளது.

கடந்த சில மாதங்களாகவே மஹிந்த அணியில் முன்வரிசைக்கு வந்த பசில், இந்த நகர்விலும் முக்கிய பங்காற்றியிருக்கிறார். எதிர்தரப்பி லிருந்து உறுப்பினர்களை இழுத் தெடுத்து பெரும்பான்மையை நிரூபிப்பது, கட்சிகளுடன் பேச்சு நடத்துவது என அனைத்தையும் அவர்தான் கவனித்து வந்தார்.

புதிய அமைச்சரவை 29ம் திகதி மாலையில் பதவியேற்பதற்கு முன்பாக நடந்த பல்டிகளை இதில் குறிப்பிட வேண்டியதில்லை. வாசகர்கள் அறிந்திருப்பார்கள். காலையில் மஹிந்தவிடம், இரவில் ரணிலிடம், மறுநாள் மஹிந்தவிடம் என எம்பிக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். மலையக எம்.பிக்கள் வடிவேல் சுரேஷ், வே.இராதாகிருஷ்ணன், அரவிந்த குமார் சமூகவலைத்தளங்களில் கிழித்து தோரணம் கட்டி தொங்க விடப்பட்டனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முடிவு எப்படியிருக்கும் என்பதுதான் ஆரம்பத்திலிருந்தே பலரதும் கேள்வியாக இருந்தது. இரண்டு கட்சி களுமே கூட்டமைப்பின் முடிவிற்காக காத்திருந்தன. காரணம், இரண்டு கட்சிகளுமே 100 வரையான எம்.பி களின் ஆதரவை வைத்திருந்தன. கூட்டமைப்பின் ஆதரவை பெறும் கட்சி மாத்திரமே அரசமைக்க முடியும் என்ற நிலைமையிருந்தது. கூட்டமைப்பின் எம்.பிக்களுடன் தனித்தனியாகவும் இரண்டு பிரதான கட்சிகளும் பேச்சில் ஈடுபட்டன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழு கூட்டம் நடந்த போது, பல எம்.பிக்கள் தம்முடன் இரண்டு பிரதான கட்சிகளிடமிருந்தும் அழைப்பு வருவதை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளனர். கிழக்கில் இருவர், வன்னியில் ஒருவர் என தமிழ் தேசிய கூட்டமைப்பில் மூவரை குறிவைத்தே மஹிந்த தரப்பிலிருந்து காய்கள் நகர்த்தப்பட்டன. எனினும், கூட்டமைப்பு முகாமிலிருந்து யாரும் பிடிகொடுக்கவில்லை.

இதற்குள் மஹிந்த தரப்பில் இந்த அரசியல் மாற்ற முயற்சிகளில் முன்வரிசையில் செயற்பட்ட பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் ஓரிரு தினங்களில் பின்வரிசைக்கு சென்றனர். வெளிப்படையான முயற்சிகள் எதிலும் ஈடுபடவில்லை. அவர்கள் அமெரிக்க குடியுரிமையை கொண்டவர்கள். அமெரிக்க குடியுரிமையை கொண்ட அவர்கள் இருவரும், அரசியல் மாற்ற முயற்சியில் ஈடுபட்டால் சிக்கலை சந்திக்க வேண்டியதாகுமென்ற செய்தி அமெரிக்க தரப்பிலிருந்து கொடுக்கப்பட்டதாகவும் ஒரு தகவல் பரவியது.

இந்தியா, மேற்கு நாடுகள் அனைத்திற்கும் இந்த திடீர் அரசியல் மாற்றம் பயங்கர அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் கொடுத்திருந்தது. குறிப்பாக நாடாளுமன்றத்தை முடக்கி வைத்திருந்தது சர்வதேச சமூகத்திற்கு உவப்பாக இருக்கவில்லை. குதிரை பேரத்தின் மூலம், மஹிந்த தரப்பு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளும் அவகாசத்தை ஏற்படுத்தவே, நாடாளுமன்ற அமர்வை தள்ளி வைத்ததாக அவை கருதின. புதிய அரசாங்கம் இந்தியாவை தொடர்புகொள்ள முயன்றபோதும், இந்தியா தொடர்பை ஏற்படுத்த விரும்பவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்த பின்னரே தொடர்பை ஏற்படுத்துவோமென்பது

தொடர்ச்சி 9-ம் பக்கம்...



# இதை சொல்லியே ஆகணும்!

# பாதரின் ஒப்புதல் வாக்குமூலம்!

மக்களே, இந்த விசயத்தை கட்டாயம் உங்களிடம் சொல்லியே ஆகணும்.

அதாவது, இன்று நடக்கும் போராட்டங்களை கவனித்து பாருங்கள். அது யாருக்கு எதிராக நடக்கிறது என்ற சந்தேகம் உங்களிற்கு எப்பொழுதாவது ஏற்பட்டிருக்கிறதா?

அரசியல்கைதிகள் -விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோரின் கதி, நிலவிடுவிப்பு என்பவற்றிற்காக நடக்கும் போராட்டங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பை குற்றம்சாட்டும், எதிர்த்து கோசமிடும் போக்கு வலுவடைந்து வருகிறது.

இந்த இடத்தில் முக்கியமான சம்பவமொன்றை குறிப்பிட வேண்டும்.

12ம் திகதி முதலமைச்சரின் அலுவலகத்தில் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் ஒரு கூட்டம் நடந்தது. அரசியல் கைதிகளிற்காக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் அருட்தந்தை சக்திவேல், யாழ்ப்பாணத்தில் இருந்தபடி பத்திரிகைகளிற்கு கட்டுரைகள் எழுதும் ஒரு சிலர்தான்தான் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதனால், பரந்துபட்டளவில் வெகுஜன அமைப்புக்களை அணிதிரட்ட முடியவில்லை. முதலமைச்சர், ஈ.பி.ஆர்.எல்.எவ், மற்றும் அவர்களுடன் தொடர்பில் உள்ள ஓரிரு அமைப்புக்கள்தான் கூட்டத்திற்கு சென்றிருந்தன.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு சிறிதுநேரம் முன்பாகத்தான் புளொட்டிற்கு அறிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனும், கஜதீபனும் சென்றிருந்தார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் கூட்டத்திற்கு போகவில்லை. முன்னணிக்கு என்ன கோபம் தெரியவில்லை.

அந்த கூட்டத்தில் மறுநாள் (13) அநுராதபுரத்திற்கு நேரில் சென்று உண்ணாவிரதத்தை முடித்து வைக்கும்படி தமிழ் அரசியல்கைதிகளிடம் கோரிக்கை வைப்பதென தீர்மானிக்கப்பட்டது. அன்றைய கூட்டத்தின் முக்கியமான இன்னொரு விசயத்தை பற்றி வெளியில் தகவல் வரவில்லை.

கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் ஒரு பகுதியினர் கூட்டமைப்பை குற்றம்சாட்டுவதிலேயே குறியாக இருந்திருக்கிறார்கள். கூட்டமைப்பின் எம்.பி சித்தார்த்தன், மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் போயிருந்தது அவர்களிற்கு வசதியாக போய்விட்டது. பொதுஅமைப்புக்களின் போராட்டத்திற்கு கூட்டமைப்பினர் வருவதில்லையென்பது அவர்களின் முக்கிய குற்றச்சாட்டு. மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் அதற்கு "இதுவரை நடந்த போராட்டங்களில் கலந்துகொண்ட கூட்டமைப்புபிரமுகர்களிற்கு என்ன நடந்தது? அவர்களிற்கு எதிராக உங்கள் ஆட்கள் தானே கூச்சலிட்டு, எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். பிறகும் அவர்கள் உங்கள் போராட்டத்திற்கு வரவில்லையென்று எப்படி குற்றம்சுமத்துவீர்கள்?" என்ற சாரப்பட சூடாக கேட்டுள்ளார்கள்.

இந்த கேள்வி அவர்களை சங்கடப்படுத்தியது. "எங்கள் போராட்டங்களிற்குள்ளும் தவறு நடந்திருக்கிறது. சிலர் எதிர்ப்பு தெரிவித்தது பிழையானது. அதை திருத்தி வருகிறோம். விரைவில் அனைத்து தவறையும் திருத்தி விடுவோம்" என்ற சாரப்பட அருட்தந்தை பா.சக்திவேல் பதிலளித்தார்.

பொதுஅமைப்புக்கள் என்றபெயரில் அண்மையில்நடந்தபோராட்டங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிரான கோசங்களை ஒரு குழு எழுப்பிவருகிறது. அரசியல்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அண்மையில் வவுனியாவில் நடந்த பேரணியிலும், மாவை சேனாதிராசாவிற்கு அருகில் வந்து கூட்டமைப்பிற்கு எதிராக சிலர் கோசமிட்டிருந்தனர். பொது அமைப்புக்களின் போராட்டத்தில் இப்படி ஒரு குழு தொடர்ந்து செயற்படுவது முறையல்ல. பொதுஅமைப்புக்கள்,தமிழ்சிவில்அமைப்புக்கள்என்ற பெயரில் நடக்கும் போராட்டங்களை அவதானிக்கும்போது ஒரு குழப்பம் வருகிறது. இந்த போராட்டங்கள் யாருக்கு எதிரானவை?

அடக்குமுறைக்கு உள்ளாக்குபவர்களிற்குஅரச, பாதுகாப்பு தரப்புக்களிற்கு எதிரானதா? அல்லது, தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் ஒரு தரப்பிற்கு எதிரானதா?

தமிழ் சிவில் சமூகம், பொது அமைப்புக்கள் என்ற பெயரில் இயங்குபவர்கள் அனேகர் தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்ந்த அரசியல் நிலைப்பாட்டிற்கு நெருக்கமாக செயற்படுபவர்கள். அந்த கருத்து நிலைப்பாட்டில் இருந்து, தமக்கு உடன்பாடில்லாத கருத்து நிலைப்பாடுடைய் இன்னொரு தரப்பின் மீதுதமிழ்தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாக இந்த போராட்டங்களை பயன்படுத்த எத்தனிக்கிறார்கள்.

கூட்டமைப்பு அல்ல, எந்த தரப்பின் மீதும் விமர்சனங்களை வைக்கலாம். யாருமே விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. ஆனால் நிலம் விடுவிக்கப்படாததற்கும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதி தெரியாததற்கும் கூட்டமைப்பையே குற்றம்சொல்வது எப்படியான அரசியல்?

அரசியல் தீர்வுக்கான முயற்சியில் சாத்தியமென நம்பும் ஒரு வழிமுறையை கூட்டமைப்பை தற்போது கையாள்கிறது. சுதந்திரத்தின் பின்னரான தமிழர்களின் அரசியல் போராட்டத்தில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு தரப்பு தலைமைதாங்கி போராட்டத்தை வழிநடத்தியது. 1970களின் இறுதிவரை தலைமைதாங்கிய மிதவாத தலைவர்களின் போக்கில் அதிருப்தியடைந்த இளைஞர்கள் 1980களின் தொடக்கத்திலிருந்து போராட்டத்தை தமது கைகளில் எடுத்தார்கள். அவர்களின் வழியையும் சிலர் விமர்சிக்கத்தான் செய்தார்கள். ஆனால், அரங்கத்தை அவர்களால் எடுத்துக் கொள்ள முடியவில்லை. அதற்கு என்ன காரணம்?

இதற்கான பதில் சிக்கலான கம்பசூத்திரமல்ல. மிக எளியது. அந்த இளைஞர்களை விட அர்ப்பணிப்பாக, அவர்களின் வழியை விட சாத்தியமான வழியை விமர்சகர்கள் வைக்கவில்லை. விமர்சகர்களின் வழிமுறையை சாத்தியமானதாக மக்கள் கருதவில்லை. இவ்வளவுதான் விசயம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் வழிமுறையில் அனைத்து கட்சிகளும், மக்களும் உடன்பட வேண்டுமென்ற அவசியமும் கிடையாது. மாற்று வழிகளும், அபிப்பிராயங்களும் இருக்கலாம். அப்படியான வழிமுறைகளுள்ள தரப்புக்கள் தமது வழிமுறைகளை முன்வைத்து, வழிமுறைகளின் மூலம் போராடுவதே நியாயமானதும், சரியானதுமாகும்.

தமிழர்களிடம் இப்போது பல கட்சிகள் உள்ளன. ஒவ்வொன்றும் மற்றைய தரப்பின் பலவீனத்தையும், அவர்களின் வழிமுறைகளிலுள்ள குறைகளையும் சுட்டிக்காட்டுவதையும் மட்டுமே அரசியலாக செய்கிறார்கள்.

இந்த வகையான அரசியலை செய்தால் தமிழர்களிற்கு விடிவு கிடைக்காது.

கிட்டத்தட்ட 200 கிலோமீற்றர்கள் தூரத்தை நடந்தே கடந்திருக்கிறார்கள் யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்கள். வெய்யில், மழை, பனி, பசி, உடல் வலி, விமர்சனம், பாராட்டு, நெகிழ்ச்சியென ஏராளமானவற்றை கடந்து நடந்து முடித்திருக்கிறார்கள். சிறைகளிலுள்ள அரசியல்கைதிகளை விடுவிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக எல்லா தரப்புக்களாலும் முன்வைக்கப்படுகிறது. ஆனால் செயல்பூர்வமான ஒரு போராட்டத்தை அதுவும், எல்லோரையும் திரும்பிப்பார்க்க வைக்கும் ஒரு அகிம்சை வழியிலான போராட்டத்தை நடத்தி முடித்துள்ள யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர்களிற்கு டபிள் லைக்ஸ்!

கிழக்கு பல்கலைகழக விரிவுரையாளர் போதநாயகியின் மரணம், முழு தமிழர்களையும் உலுப்பி விட்டுள்ளது. அவர் பட்டிருக்க கூடிய வலிகளும், அவஸ்தைகளும் சமூக வலைத்தளங்களில் அதிகம் பேசப்பட்டு, ஒரு தமிழ் பெண்ணாக எல்லோருடைய சகோதரியுமாக, கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், புதிய சர்ச்சையொன்று ஏற்பட்டுள்ளது. போதநாயகி விவகாரத்தை கவனப்படுத்தியது அவரது நண்பிகளும், பெண் செயற்பாட்டாளர்களுமே. அவர்கள் அண்மையில் போதநாயகியின் வீட்டிற்கு சென்றிருந்தார்கள். வடமாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மினையும் அழைத்து சென்றிருந்தார்கள். இதனால் கோபமடைந்த உள்ளூர் அரசியல்வாதியொருவர், பெண் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தியிருக்கிறார். "முஸ்லிம்களை எதற்கு அழைத்து வந்தீர்கள்?" என அவர் கொந்தளித்தாராம். போதநாயகியின் இறப்பிற்கு காரணம் ஒரு சிங்களவரோ, முஸ்லிமோ அல்ல. போதநாயகிகளின் சொல்ல முடியாத வலிகளிற்கும் சிங்களவர்களோ, முஸ்லிம்களோ காரணமல்ல. போதநாயகிகள் தனியே தமிழர்களிற்குள்தான் இருக்கிறார்கள் என்பதுமல்ல. இது எல்லா இன, மத, மொழி பெண்களிற்குமான பிரச்சனை. இதை இன,மத பிரிவிற்குள் சுருக்குவது அபத்தம். பாவம் போதநாயகி, உள்ளூர் அரசியல்வாதிகளே, அவரை உங்கள் அரசியலுக்குள் சுருக்கி விடாதீர்கள்!



# 'வெளிநாட்டிலிருந்த கஜேந்திரன் எப்படி திரும்பி வந்தாரென்பதும் எங்களிற்கு தெரியும்'

## சுரேஸ் பிரேமச்சந்திரன் சாட்டையடி

**நேர்காணல்: எஸ்.நிதர்சன்**

முன்னாள் முதலமைச்சரின் அரசியல் அணியில் இணைந்திருப்பார்கள் என்று கருதப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பும் இப்போது கீரியும் பாம்புமாகி விட்டார்கள். வாரத்திற்கொரு பத்திரிகையாளர் சந்திப்பு வைத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐ தாக்குவதையே முன்னணி வாடிக்கையாக வைத்திருக்கிறது. ஆனால், மறுபக்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ் தரப்பு வாய் திறக்காமல் இருக்கிறது. இந்த பிரச்சனைகள் ஏன் வந்தன, முன்னணியின் குற்றச்சாட்டுக்களிற்கான பதில் என்னவென்பதை அறிய ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனையே நேரில் சந்தித்தோம்.

**கேள்வி: முதலமைச்சர் தலைமையிலான மாற்றுத் தலைமை வகிக்கக் கூடிய அணியுடன் இணைந்து செயற்படத் தயார் என நீங்கள் கூறியிருக்கின்ற நிலையில் அந்த அணியில் நீங்கள் இருந்தால் தாங்கள் வரத் தயாரில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறியுள்ளதே?**

பதில்: வேறு யாரும் இருந்தால் நாங்கள் வர மாட்டோம், கொள்கை ரீதியாக அவர்கள் தவறானவர்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுகின்ற இந்தவசனங்கள் எல்லாம் மிக மிக சிறுபிள்ளைத்தனமான வாதங்கள். ஏனெனில் முன்னணியோ அல்லது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அவர்கள் யாராக இருந்தாலும் கூட தமிழ் மக்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான ஒரு முழுமையான வரைபடத்தை இதுவரை அவர்கள் வெளியிடவில்லை.

அதாவது தாங்கள் இதனை எவ்வாறு செய்யப் போகின்றோம் என்று கூறவில்லை. அதிலும் உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் என்ன செய்யப் போகின்றோம், எவ்வாறு உரிமைகளை வென்றெடுக்கப் போகின்றோம், வெறுமனே சுமந்திரன் மீதும் சம்மந்தன் மீது குற்றச்சாட்டுக்களை வாசிப்பது மாத்திரமல்ல. மாற்று வழி முறைகள் என்ன என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். அந்த மாற்று வழிமுறைகள் தெளிபடுத்தாமல் தான் இன்னுவரை அவர்கள் குற்றச் சாட்டுகளை சுமத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்பொழுது இன்னுமொரு படி மேலே சென்று தாங்கள் மாத்திரம் தான் சரியானவர்கள், கொள்கை வாதிகள், ஏனைய எல்லோருமே துரோகிகள் என்ற தொனியில் இருந்து இவர்கள் பேசுவது அநாகரிகமான அசிங்கமான ஒருநிலைப்பாடு. அவர்கள் முன்வைக்கக் கூடிய கேள்விகள் பலவற்றுக்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கின்றேன். தேவை ஏற்பட்டால் இன்னுமொரு தடவை கூட நான் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

ஒரு விடயத்தை நாங்கள் மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தக் கட்சியினுடைய செயலாளர் கஜேந்திரன் முன்னர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து யுத்த காலத்தில் வெளிநாட்டிற்குச் சென்று யார் மூலம் திரும்ப இந்த நாட்டிற்குள் வந்தாரென்பதும், அவரது சகோதரன் வெள;ளைவானில் கடத்தப்பட்டு யாருடைய உதவியுடன் அவர் உயிருடன் திரும்பி வந்தாரென்பதும், எந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் அவர்கள் உறவுகளை வைத்திருந்தார்கள். என்பதும் உள்ளிட்ட பல விடயங்கள் எங்களுக்கு வெளிப்படையாகத் தெரியும்.

ஆனால் நாங்கள் இவை எதனையும் பற்றி பேசவில்லை. தமிழ்மக்களுடைய பிரச்சனைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்வது மாத்திரம்தான் எமது நோக்கம். ஆகவே நாங்கள் வேறு வேறு கொள்கையில் பிறழ்வுபட்டுப் போகின்றோம் என்று இவர்கள் பேசுவதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 1979 ஆம் ஆண்டு தொடங்கியது. முதலாவது வடகிழக்கு மாகாண சபையில் தொடங்கி, இன்றுவரை எல்லா தேர்தல்களிலும் போட்டியிட்டிருக்கின்றோம்.

பாராளுமன்றத்திலும் நாங்கள் பல அங்கத்தவர்களை வைத்திருந்திருக்கின்றோம். இன்றும் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக இருக்கின்றோம். தொடர்ச்சியாக இந்த மக்களுக்காக நாங்கள் குரல் கொடுத்து வருகின்றோம் இன்றும் கூட பாராளுமன்றத்தில் எங்களுடைய கட்சியின் சிவசக்தி ஆனந்தன் ஒருவர் மாத்திரம் தான் கபடத் தனங்களை பற்றி பேசுகிறார்.

இவ்வாறான நிலையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஏதோ கொள்கைப் பற்றற்றவர்கள் என்ற தோரணையில் பேச முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களுக்கு நாற்பது வருட கால அரசியல் அனுபவம் இருக்கின்றது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெறுமனே ஒரு பாராளுமன்ற ஆசனத்தை மட்டும் நம்பி வந்த கட்சி அல்ல. அதுவொரு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு அரசிலுக்கு வந்த கட்சி. தமிழ் மக்களுக்கு என்ன தேவையோ அவற்றைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய கட்சி.

அது மாத்திரமல்ல பிரபாகரன் இருந்த காலத்தில் அன்றிருந்த பல பிரச்சனைகள் தொடர்பாக நாங்கள் அவர்களுடன்பேசிஒருகூட்டமைப்பை உருவாக்க வேண்டுமென்ற கலந்துரையாடல்களைக் கூட நடாத்தியிருக்கின்றோம். அந்தக் கலந்துரையாடல்கள் என்பது கஜேந்திரகுமாருக்கும் அல்லது கஜேந்திரனுக்கும் கூட நடந்ததோ தெரியாது. இன்று அரசியல் பேசக் கூடிய இந்த இருவரும் அன்று எங்கு போயிருந்தார்கள்.

வெறுமனே ஒருவர் பல்கலைக்கழக மாணவராகவும் மற்றையவர் வெளிநாட்டில் கற்றவராகவும் இருந்தார்களே தவிர இவர்கள் மற்றும்படி விடுதலைப் போராட்டத்தில் என்ன பங்களிப்பைச் செலுத்தியிருக்கின்றார்கள். பல்கலைக் கழகத்தில்மாணவர் அணித்தலைவராக இருந்ததென்பதைத் தவிர ஆயுதப் போராட்டத்தில் இவரோ இவரது குடும்பத்தினரோ என்ன பங்களிப்பைச் செலுத்தியிருக்கின்றார்கள்.

ஆனால் நாங்கள் மிக ஆரம்பத்தில் இருந்தே ஒரு ஆயுதப் போராட்டத்தில் அங்கம் வகித்து ஓர் அரசியல் போராட்டத்தில் அங்கம் வகித்து பல்வேறுபட்ட தரப்புக்களுடன் பேசி போராட்டத்தை முன்கொண்டு சென்றதில் மிகப் பெரிய பங்கு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே எங்களை நோக்கி விரல் நீட்டுவதற்கான எந்தவித யோக்கியமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிற்கோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்று சொல்பவர்களுக்கோ நிச்சயமாகக் கிடையாது.

நாங்கள் அமைதியாக கூட்டாகச் சேர்ந்து தமிழ் மக்களுடைய உரிமை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

களை பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு ஒரு விரிவான கூட்டாகச் செய்ய முடியுமோ அவ்வாறு சேர்ந்து செய்ய வேண்டுமென்று தான் நாங்கள் யோசிக்கின்றோம். அது அவர்களுக்கு சரியில்லாது விட்டால் அது குறித்து அவர்கள் முடிவு எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து, நாங்கள் தமிழ் மக்கள் பேரவையில் இருக்கக் கூடாதென்று கூறுவதற்கோ அல்லது முதலமைச்சருடைய ஒரு அணியில் நாங்கள் இருக்கக் கூடாதெனக் கூறுவதற்கோ இவர்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. யோக்கியமும் கிடையாது.

இவர்கள் தங்களை மிகப் பிரமாண்டமாக சக்தியாக அவர்கள் யோசிப்பார்களாக இருந்தால் நிச்சயமாக மீண்டும் ஒருமுறை மக்கள் அவர்களுக்கு அதற்கான பாடத்தைக் கற்பித்துவிடுவார்கள். அதற்குப் பிறகு தாங்கள் யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

**கேள்வி: உங்கள் மீதும் உங்கள் கட்சி மீதும் முன்னணி தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகின்றது. விக்னேஸ்வரன் தலைமையில் உருவாகும் அணிக்குள் ஏன் இந்த பிளவு?**

**பதில்:** முதலமைச்சர் ஆரம்பிக்கக் கூடிய கூட்டு முன்னணியில் நாங்கள் வரலாம், சித்தார்த்தன் போன்றவர்கள் வரலாம,; அல்லது முதலமைச்சர் சொன்னது போன்று தமிழரசுக் கட்சியினரும் வரலாம். கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் வரலாம் வேறு யாரும் வரலாம் என்று விக்னேஸ்வரனே சொல்லியிருக்கின்றார்.

அவ்வாறான கூட்டு முன்னணி உருவானால் எதிர்காலத்தில் முதலமைச்சர் அரசியலில் இருந்து விலகினாலோ அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுக் கொண்டாலோ அதற்குப் பிறகு அந்தத் தலைமைத்துவம் தங்களிடம் வராமல் வேறு யாரிடமாவது போய்விடலாம் என்பதே அவர்களுடைய மிகப் பெரிய பிரச்சனை. இதனையே அவர்கள் ஊடகங்களுக்கும் சொல்லியிருக்கின்றனர்.

எதிர்காலத்தில் தங்களிடம் தலைமைத்துவம் வராமல் போய்விடும் என்பதனை விட வேறு எந்தப் பிரச்சனைகளும் நிச்சயமாக அவர்களுக்கு கிடையாது. ஆகவே சுரேஸ்பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் வரக் கூடாது, ஏனைய எவரும் வரக் கூடாது. நாங்கள் மாத்திரம் தான் முதலமைச்சருடன் போக வேண்டும். முதலமைச்சர் ஒரு ஐந்து வருட காலத்திற்குப் பிற்பாடு அவர் ஓய்வு பெற்றுவிட்டால் தலைமைத்துவம் தங்களிடம் இருக்கும். ஆகவே அவரை வைத்துக் கொண்டு தங்களது பிழைப்பை எப்பிடி செய்து கொள்வது இது தான் அவர்களின் நோக்கம்.


இந்த விசயத்தை நேரடியாக மக்களுக்குச் சொல்ல இயலாத காரணத்தினால் எங்களுக்கு மேல் அர்த்தமில்லாத உப்புச்சப்பில்லாத குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் ஒரு ஊடக செய்தியில் கூட மிக ஆக்ரோசமாக அவர் பேசுகின்றதை நான் தொலைக் காட்சியில் பார்த்தேன். ஆனால் அந்த ஆக்ரோசத்தில் உண்மைகள் எதுவும் இல்லை என்பது தான் நிதர்சனமானது.

**கேள்வி: உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் சபைகளை அமைக்கின்ற போது வவுனியாவில் நீங்கள் தென்னிலங்கை கட்சிகளுடன் கூட்டிணைந்து தவறு என்றும் உங்கள் மீது தொடர்ந்தும் குற்றச் சாட்டுக்களை முன்னணியினர் வைத்துள்ளனரே?**

**பதில்:** இதற்கு பலமுறை பதிலளித்து விட்டேன். ஆனால் அவர்கள் ஒரே பல்லவியைத் தான் தொடர்ந்து பாடிக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையாகவே அதுவொன்றும் ஒரு புதிய விசயமல்ல. யாழ்ப்பாண மாநகர சபைக்கு மணிவண்ணனை நகரபிதா ஆக்க வேண்டுமென்று அவரைத் தேர்தலில் நிறுத்தினார்கள். அப்பொழுது நிச்சயமாக அவர்கள் ஈபிடிபி அல்லது தமிழரசுக் கட்சியிடமிருந்து தங்களுக்கு தேவையான அளவிற்கு ஆதரவு கிடைக்குமென்று நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

அதற்கு முன்பாக அவர்கள் இரகசியக் கூட்டமொன்றையும் நடத்தி அந்த ரகசியக் கூட்டத்தில் ஈபிடிபியின் ஆதரவு கிடைக்குமென கஜேந்திரன், கஜேந்திரகுமார் போன்றவர்கள் எல்லோரும் பேசியிருந்தார்கள். அங்கு வேறு ஒரு சிலர் அப்படிப் போவது தவறு என்று அதனை எதிர்த்தும் இருந்தார்கள். ஆனாலும் பிறகு மாநகர முதல்வருக்கான தேர்தல் நடாத்தப்பட்டது.

அத் தேர்தலில் மணிவண்ணண் தோல்வியடைந்தார். ஏனெனில் ஈபிடிபியோ தமிழரசுக் கட்சியோ அவர்களுக்கு வாக்களிக்கவில்லை. அதன் காரணமாகத் தோல்வியடைந்தார்கள். அவ்வாறு தோல்வியடைந்ததற்குப் பிற்பாடு அவர்கள்



இப்பொழுது எங்கள் மேல் குற்றச் சாட்டுக்களைச் சுமத்துகின்றார்கள். ஆனால் அவர்கள் கேட்டது போன்ற இதே அடிப்படையில் ஈபிஆர்எல்எப் கட்சியும் இரண்டு இடங்களில் தவிசாளருக்காக போட்டியிட்டது.

எங்களுக்கு குறைந்தளவிலான எண்ணிக்கையான இடங்கள் தான் அங்கு இருந்தது. நாங்கள் வெல்ல மாட்டோம் என்பதும் உறுதியான நிலையாக இருந்தது. ஆனால் நாங்கள் வேறு கட்சிகளுக்கு வாக்களிக்கத் தயாராக இருக்கவில்லை. ஆகவே அந்தவொரு சூழ்நிலையில் நாங்களும் தேர்தலில் நிற்பது என்றும் யாரிடமும் வாக்குகக் கேட்டுப் போவதில்லை என்றும் யாராவது விரும்பினால் எங்களுக்கு வாக்களிக்கலாம் என்ற நிலை தான் இருந்ததது.

நெடுங்கேணியில் நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம். அதேபோல வவுனியா நகர சபைக்கு வாக்களித்தார்கள். அதில் அற்ப சொற்ப நிலையில் நாங்கள் வெற்றியடைக் கூடிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது. இதனுடைய பொருள் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன், தமிழரசுக் கட்சியுடன்; சேர்ந்து விட்டோமென்பது அல்ல.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு ஒரு பொருள் இருக்க வேண்டும். நீங்கள் என்ன மாதிரி யாழ் மாநகர சபையில் போட்டியிட்டிர்களோ அதே போன்று தான் நாங்களும் இரண்டு சபைகளில் போட்டியிட்டோம் என்பதும் ஒரு சபையில் உங்களைப் போன்றே நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம் என்பதும் இன்னொரு சபையில் நாங்கள் வென்றோம் என்பதும் தான் நடந்த விடயங்கள்.

நீங்கள் கூறிய அதே பாணியில் யாருடனும் டீல் மேற்கொள்ளவில்லை. அரசியல் ரீதியாக விசயங்களை விளங்கிக் கொள்ளக்கூடிய, சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்கப் போகிறோம் என்று சொல்லி போய் வரக் கூடிய ஒரு நபர் முன்வைக்கக்கூடிய குற்றச் சாட்டுக்களாக இவற்றை நான் பார்க்கவில்லை.

**கேள்வி: தமிழ் மக்கள் பேரவையின் திர்வுத் திட்டம் தயாரிப்பதில் தாங்களே முக்கிய பங்காற்றியதாக முன்னணி கூறுகிறதே?**

**பதில்:** பேரவை ஒரு தீர்வுத் திட்டத்தை தயாரிப்பதற்கு ஒரு உபகுழு நிறுவப்பட்டது. அந்த உபகுழுவில் எங்களது கட்சி சார்பில் நானும், காங்களிரஸ் கட்சி சார்பில் கஜேந்திரகுமாரும், புளொட் சார்பில் ஒருவரும் இருந்தார். இதனை விட பல சட்டத்தரணிகளும், பல்கலைக்கழக பேராசிரியர்களும் இருந்தனர்.

இப்படிப் பல பேர்களைக் கொண்டதாகத் தான் இந்தக் குழு இருந்தது. இந்தக் குழு பல நாட்கள் கூடிப் பேசி பல ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதன் பிற்பாடு தான் ஒரு தீர்வுத் திட்டம் முழுமையாகக் கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்வுத் திட்டத்தை பேரவையின் உப குழு உருவாக்கிய தீர்வுத் திட்டமே தவிர இது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடைய தீர்வுத் திட்டம் அல்ல. இதில் கஜேந்திரகுமார் என்ற தனிநபர் ஒரு வகையிலீன பங்களிப்பை செலுத்தியிருக்கின்றார்.

அதேபோன்று ஏனைய பல பேரும் தங்களது பங்களிப்பையும் செலுத்தியிருக்கின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட்டும் பங்களிப்பை செலுத்தியுள்ளது. இந்த தீர்வுத் திட்டத்திற்கான உரித்து என்பது பேரவை உருவாக்கிய உப குழுவிற்கே. இதற்கு எந்தவொரு தனிநபரும் உரிமை கோருவது அழகான விடயமல்ல. ஆகவே அந்த அடிப்படையில் அது எல்லோரும் சேர்ந்து உருவாக்கிய தீர்வுத் திட்டம் என்பதே சரியானது.

**கேள்வி: விக்னேஸ்வரன் தலைமையில் உருவாகும் அணியில், ஈ.பி.ஆர்.எல்., தமிழ் தேசிய மக்கள் முன்னணி போன்ற பல கட்சிகள் இருக்குமென முன்னர் கூறப்பட்டது. இப்பொழுது அந்த கட்சிகளிற்குள்ளேயே மோதல் வந்திருக்கிறது. இனியும்,இந்த கட்சிகள் ஒன்றிணையும் வாய்ப்புள்ளதா?**

**பதில்:** இந்தக் கூட்டுக்கள் தொடர்பில் வெளியாகிய கருத்துக்களுக்கு ஏற்கனவே பல பதில்களை சொல்லியிருக்கின்றோம். ஆனால் இப்பொழுது மிக மேலதிகமாக தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்ற போக்கு இருக்கின்றது. ஆகவே அவர்கள் எவ்விதமான கூட்டில் இணையப் போகின்றார்கள் அல்லது இணையாமல் இருக்கப் போகின்றார்கள் எப்பது தொடர்பில் அவர்கள் தீர்மானிக்க வேண்டும். அது அவர்கள் எடுக்கப் போகின்ற முடிவுகளில் தங்கியுள்ளது. அவர்கள் யாருடன் இருக்க வேண்டும், யாருடன் இருக்கக் கூடாதென்பது பற்றி அவர்கள் எடுக்கின்ற முடிவு. அது நான் எடுக்கும் முடிவு அல்ல.

முதலமைச்சர் ஒரு கூட்டு முன்னணியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அவருடன் இணைந்து பணியாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதனை நாங்கள் முதலமைச்சருக்கும் சொல்லியிருக்கின்றோம். அதனை முதலமைச்சரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். ஆகவே அதற்கு மேலதிகமாக இவர்கள் போடுகின்ற நிபந்தனைகள் என்னைப் பொறுத்தவரையில் ஒரு உப்புச்சப்பற்ற தேவையற்ற நிபந்தனைகளாகவே எனக்குப்படுகின்றது.

இந்த நிபந்தனைகளைப் போடக் கூடிய அளவிற்கு அவர்கள் ஒரு பலமான அமைப்பும் அல்ல. பலமான கட்சியும் அல்ல. அந்தத் தேவை் இன்று வந்திருப்பது சரியானதும் அல்ல. ஆகவே அவ்வாறான சில விடயங்கள், அதாவது இவர்களை விலத்த வேண்டும் அவர்களை விலத்த வேண்டுமென்றெல்லாம் சொல்வது அல்லது இவர்கள் கொள்கை முடிவுகளில் பங்குபற்றக் கூடாதென்று சொல்வதெல்லாம் சரியானது அல்ல. ஆகவே இவர்களுடைய கொள்கை என்ன என்பதே என்னிடமுள்ள கேள்வி.

இவர்கள் தமது கொள்கை அடிப்படையில் எவ்வாறு இனப் பிரச்சனைக்கான தீர்வைக் காணப் போகின்றோம் என்று கூற வேண்டும். உரிமைப் போராட்டத்தை எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றோம். எவ்வளவு காலத்திற்குள் நாங்கள் தீர்வை எட்டுவோம் என்பதையெல்லாம் உள்ளடக்கி வெளிப்படையாக உங்கள் கொள்கைகளையும் கூறி விட்டு அதற்குப் பிற்பாடு நாங்கள் கொள்கைவாதிகளா இல்லையா என்பது பற்றி பிற்பாடு பேசுவது சரியாக இருக்குமென்று நினைக்கின்றேன்.

ஏனென்றால் இன்று வரை நீங்கள் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துபவர்களாக இருக்கின்றீர்களே தவிர உங்களது கொள்கைகளை எப்படி நிறைவேற்றுவதென்பது தொடர்பிலான வேலைத் திட்டங்கள் பற்றி இதுவரை நிங்கள் பேசவில்லை. ஆகவே இனிமேலும் இவ்வாறு நீங்கள் பேசிக் கொண்டிருக்காமல் உங்களது கொள்கைகளைக் கூறுங்கள். அந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைக் கூறுங்கள். உங்களது கொள்கைகளில் இருந்து ஏனையோர் எவ்வாறு மாறுபடுகின்றார்கள், நீங்கள் சரியான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றீர்களா என்று பார்த்ததற்குப் பிற்பாடு அவர்களுடைய சரி பிழைகளைப் பற்றி நாங்கள் பேசலாம்.

சியா

# ஒரு பத்திரிகையாளருக்கு பயந்ததா சவுதி?

ஒக்ரோபர் 02.

துருக்கியின் அத்தாதுர்க் விமான நிலையம். இளம் மற்றும் நடுத்தர வயதுடைய ஆண்கள் குழுவொன்று சவுதி அரேபியாவிலிருந்த வந்திறங்கியது. மொத்தம் பதினைந்து பேர். அப்போது விமானநிலைய பணியாளர்கள் யாரும் அவர்களை ஒரு கவனிக்கத்தக்க விசயமாக கருதவில்லை. ஆனால் இன்று முழு உலகமும் அவர்களை பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறது. உலகத்தின் முக்கிய உளவு அமைப்புக்கள் எல்லாம் விமானநிலையத்தில் அவர்கள் வந்திறங்கிய போது பதிவான சிசிரிவி கமரா காட்சிகளையே ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆம்.

பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலை (இன்னும் அப்படி சொல்ல முடியாதென்று சொல்பவர்களும் இருக்கலாம்) விவகாரத்தில், சவுதி அரேபியாவை குற்றம்சாட்டும் முக்கிய ஆதாரங்களில் அந்த சிசிரிவி காட்சிகளும் அடக்கம்.

"ஜமால்கொலையில்சவுதி அரேபியா தொடர்புபட்டிருந்தது தெரிந்தால் நான் அதிகளவில் கோபப்படுவேன். எதிர்பாராதளவில் சவுதியை தண்டிப்பேன்" என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பகிரங்கமாகவே அறிவித்துள்ளார்.

அத்தாதுர்க் விமான நிலைய கஸ்டம்ஸ் அறிக்கையின்படி அதில் வந்தவர்களில் ஒருவர் எலும்பு அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் கருவியை கைவசம் வைத்திருந்தார். அவர்கள் வந்திறங்கிய அன்றுதான் ஜமால் கஷோகி காணாமல் போயிருந்தார்.



தூதரகத்திற்குள் ஜமால் நுழையும் சிசிரிவி காட்சி



சவுதியிலிருந்து வந்த குழு


ஜமால் கஷோகி




யார் இந்த ஜமால் கஷோகி?

ஊடகவியலாளர்கள் காணாமல் போவது அடிக்கடி நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் கஷோகி உலக அளவில் தலைப்பு செய்தியாக மாற என்ன காரணம்?

அதற்கு, கஷோகியை பற்றி தெரிந்து கொள்ளுங்கள். ஒரு காலத்தில் சவுதி அரச குடும்பத்தின் ஆலோசகராக இருந்தவர், பின் சவுதி அரசாங்கத்திற்கு எதிராக திரும்பினார். அதற்கு பிறகு அவர் சவுதியிலிருந்து வெளியேறினார்.

இஸ்லாமியர்களின் புனித நகரமான மதினாவில் 1958 ஆம் ஆண்டு பிறந்தவர் ஜமால். அமெரிக்காவில் உள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தில் வணிக மேலாண்மை பயின்றவர்.

பின் சவுதி அரேபியா திரும்பியவர், பத்திரிகையாளராக தம் பணியை தொடங்கினார். ஆப்கனில் சோவியத் ஊடுருவியபோது அது தொடர்பான செய்திகளை உள்ளூர் ஊடகத்தின் சார்பாக சேகரித்தார். ஒசாமா பின் லேடனின் எழுச்சியை நேரில் கண்டவர் ஜமால். 1980 90 ஆகிய காலகட்டங்களில் பல முறை ஒசாமாவை நேர்காணல் கண்டிருக்கிறார். முதல் வளைகுடா யுத்தம் குறித்து பல செய்திகளை அங்கிருந்து வழங்கி இருக்கிறார்.

1990 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவுக்கு திரும்பினார். 1999 ஆம் ஆண்டு அரப் நியூஸ் எனும் ஆங்கில செய்திதாளில் துணை ஆசிரியராக பொறுப்பேற்றார்.

2003 ஆம் ஆண்டு அல் வாடன் நாளிதழுக்கு ஆசிரியராக பொறுப்பேற்றார். ஆனால், சவுதி அரசின் ஒரு திட்டத்தை விமர்சித்ததற்காக அங்கிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டார். அங்கிருந்து லண்டன் சென்றார். சில காலம் அங்கே வசித்தவர் வோஷிங்டன் சென்று சவுதி அரேபியா முன்னாள் உளவுத்துறை தலைவருக்கு ஊடக ஆலோசகராக பணியாற்றினார்.

மீண்டும் 2007 ஆம் ஆண்டு, 'அல் வாடன்' நாளிதழலில் பணிக்கு சேர்ந்தவர், சில சர்ச்சைகளால் மீண்டும் அங்கிருந்து வெளியேறினார்.

அரபு வசந்த எழுச்சிப் பின் 2011 ஆம் ஆண்டு, பல நாடுகளில் இஸ்லாமிய குழுக்கள் அதிகாரம் அடைந்தன. அவர்களுக்கு தன் ஆதரவை வழங்கினார் ஜமால். கட்டார் அரசின் ஆதரவில் இயங்கும் 'அல் ஜசீரா'வுக்கு எதிராக சவுதி ஆதரவில் அல் அரப் தொலைக்காட்சி 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது அதன் தலைமை பொறுப்பை ஏற்றார். ஆனால், 2015 ஆம் ஆண்டு பஹ்ரைனில் ஒளிப்பரப்பை தொடங்கிய 24 மணி நேரத்திலேயே தன் ஒளிப்பரப்பை நிறுத்தியது அந்த தொலைக்காட்சி. அதற்கு பஹ்ரைனின் எதிர்க்கட்சி தலைவரை பேச அழைத்ததுதான் காரணம்.

சவுதியின் விவகாரங்கள் குறித்து காத்திரமாக எழுதும் செய்தியாளராக பார்க்கப்பட்டார் ஜமால்.

ஜமால் 2017 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் சவுதியைவிட்டு வெளியேறி அமெரிக்கா சென்றார். கைது செய்யப்படுவோம் என்ற பயத்தில் பலர் சவுதியைவிட்டு வெளியேறுவதாக வோஷிங்டன் போஸ்டில் செப்டம்பர் மாதம் எழுதிய முதல் பத்தியில் குறிப்பிட்டு இருந்தார்.

அவர் சவுதி யை கடுமையாக விமர்சித்தார். அதன் முடி இளவரசரை ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ஒப்பிட்டர்.

அவர் காணாமல் போனதை குறிப்பிடுவதற்காக, வழக்கமாக பத்தி எழுதும் இடத்தில் ஜமால் பெயரை மட்டும் போட்டு வெற்றிடம் விட்டது வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை.

எப்படி காணாமல் போனார்?

தனது முன்னாள் மனைவியை விவாகரத்து செய்துவிட்டதாக சான்றிதழ் வாங்க ஒக்ரோபர் 02ம் திகதி சவுதி தூதரகத்திற்கு சென்றார். ஹெடிஸ் என்ற துருக்கி பெண் ஒருவரை திருமணம் செய்து கொள்ள அவர் முடிவெடுத்திருந்தார். தூதரகத்திற்கு சென்றபோது ஹெடிசும் கூடவே சென்றிருந்தார்.

துர்தரகத்திற்கு வெளியே ஹெடிஸ் 11 மணி நேரங்கள் காத்திருந்தும் ஜமால் வரவில்லை. உள்ளே செல்லும் முன், செல்பேசியை வெளியே கொடுப்பது அவசியம் என்பதால், ஜமால் செல்பேசி இல்லாமல்தான் உள்ளே சென்றார்.

"ஜமால் இறக்கவில்லை. அவர் கொல்லப்பட்டார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை"

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

என. தனது ட்விட்டரில் ஹெடிஸ் பதிவிட்டுள்ளார். அதிகாரப்பூர்வ அறிவிப்புக்கு காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜமால் காணாமல் போய்விட்டார் என்ற செய்தி பரவிய சில நிமிடத்திலேயே உலகளவில் முக்கியத்துவம் பெற்றது. துருக்கிய உளவுத்துறை துரிதகதியில் செயற்பட்டது. அவர்களின் முயற்சியில் முதற்கட்ட ஆதாரங்கள் கிடைத்தன.

தூதரகத்திற்கு பாதுகாப்பு அளித்துவந்த காவல்துறை அதிகாரிகளை விசாரித்ததில், பாதுகாப்பு கமராக்களை பார்வையிட்டதில் ஜமால் தூதரகத்திற்குள் நுழைந்ததற்கான ஆதாரம் கிடைத்தது. ஆனால் வெளியேறிய பதிவொன்றும் கிடையாது. ஆனால், தூதரக கார்கள் சில உள்ளேவும் வெளியேவும் சென்றதாகவும், வேறு சில நபர்கள் உள்ளேயும் வெளியேயும் சென்று வந்துள்ளனர்.

ஆரம்பத்தில் இந்த தகவலை சவுதி மறுத்தது. பின்னர் துருக்கி மேலும் ஆதாரங்களை கண்டுபிடித்தது.

அத்தாதுர்க் விமான நிலையத்தில் வந்திறங்கிய பெனிட்ரேஷன் டீம் ஜமால் கஷோகியை விசாரணை செய்து, துண்டு துண்டாக வெட்டி கொலை செய்துள்ளதாக தருக்கி உளவுத்துறை சந்தேகிக்கிறது. அந்த டீம் திரும்பி சென்றும் விட்டார்கள். அவர்கள் துருக்கியிலுள்ள துணைதூதரகத்திற்கு வந்தது, வெளியே சென்றதற்கான வீடியோ ஆதாரங்களையும் துருக்கி வெளியிட்டது.

ஜமால் காணாமல் போய் பத்து நாளின் பின் 12ம் திகதி சவுதி துணைதூதரகத்தில் ஜமால் சிதத்திரவதை செய்யப்பட்டு, அடித்துக் கொல்லப்பட்டார் என சில வீடியோ, ஓடியோ ஆதாரங்களை துருக்கி வெளியிட்டது. அவை பெரும்பாலும் நம்பத்தக்க ஆதாரங்கள். ஜமால் பற்றிய விசாரணைகளிற்கு ஆரம்பத்தில் ஒத்துழைக்க மறுத்த சவுதி, உலகளவில் ஏற்பட்ட கொந்தளிப்பையடுத்து தூதரகத்திற்குள் தேடுதல் நடத்தலாம் என்றது. சவுதி அரசகுடும்பத்தின் மூத்த இளவரசரை துருக்கிக்கு அனுப்பி சமரச முயற்சியிலும் ஈடுபட்டது.


தூதரக்த்திற்கு வெளியில் காத்திருந்த ஹெடிஸ்

விமர்சகர்களை இலக்கு வைத்து படுகொலை செய்யும் முறையை ஸ்ராலின் அறிமுகம் செய்தார். ஹிட்லர் ஐரோப்பா முழுதும் செய்து முடித்தார். இஸ்ரேல் அதனை அபிவிருத்தி செய்து ஒரு டிபார்ட்மெண்டாகவே பேணியது. இப்போது அதனை மன்னர் சல்மானின் மகன் இளவரசர் மொஹம்மத் பின் சல்மான் ஆரம்பித்துள்ளார். இவர் மேற்கத்திய ஊடகங்களால் சிறந்த சீர்திருத்தவாதியாக பாராட்டப்பட்டவர் என்பதுடன், ட்ரம்ப் நிர்வாகத்தாலும் அமெரிக்க நிதியியல் உயரடுக்காலும் உபசரிக்கப்பட்டவர். அரச குடும்ப உறுப்பினர்கள், முக்கிய வணிக பிரமுகர்கள் மற்றும் சில பத்திரிகையாளர்கள் உள்ளடங்கலாக இவர்களுக்கு எதிராக ஒரு மூர்க்கமான அடுக்குமுறையைத் தொடங்கியுள்ளார் சல்மான்.

சவூதி அரேபியாவின் க்டுமையான முடியாட்சி நீண்டகாலமாக மத்திய கிழக்கு முழுவதற்குமான அரசியல் பிற்போக்குத்தனத்தின் அச்சாணியாக இருந்து வந்துள்ளது. அந்த ஆட்சி வழமையாக அரசியல் எதிர்ப்பாளர்கள் மற்றும் அமைதியான வழியில் போராடியவர்களின் தலைகளைத் துண்டித்துள்ளது. (2017 இல் மட்டும் வாளுக்குப் பலியானவர்கள் 150 பேர்).

ஜமால் கஷோகி சவுதி அரேபியாவின் உயர்மட்டத்துடன் தொடர்புகளை பேணியவர். அரண்மனை விருந்துகளில் இவரை மிஸ்பண்ணவே முடியாது. கஷோகி பின்னாளில் அமெரிக்க சார்பில் சல்மானை அழுத்தம் கொடுக்கும் ஒருவராக இவர் செயற்பட்டார், வோஷிங்டன் போஸ்டின் முதன்மை நிருபர்களில் ஒருவராக அடையாளப்படுத்தப்பட்டதும் அதனால்தான் என்று கூறுவோரும் உள்ளனர்.

மொஹம்மத் பின் சல்மானின் அந்தரங்க வாழ்க்கை, அவரது கொள்கைகள் பற்றிய விமர்சனங்களும் தான் இந்த கொலைகளிற்கு காரணமாயின. அரச குடும்ப பிளவுகள் பற்றிய இவரது ஆய்வுகள் சல்மானை ஆத்திரப்படுத்தின. யெமன் மீதான சவுதியின் வலிந்த யுத்தத்தை கடுமையாக விமர்சனம் செய்தார்.

கஷோகி மர்மத்தில் தமது பங்கை இதுவரை சவுதி ஏற்கவில்லை. தூதரகத்திற்கு வந்தவர் வெளியேறி விட்டார், அவரை பற்றி தகவலிற்காக ஆர்வமாக இருக்கிறேன் என இளவரசர் மொஹம்மத் பின் சல்மான் கூறினார். அவரது மூத்த சகோதரர் ஒருபடி மேலே போய், “அவர் விமர்சகர் என்றாலும் எம்மோடு தொடர்பிலிருந்த நண்பர். அவருக்கு நாம் தீங்கிழைப்போமா?“ என்கிறார்.

ஆனால், கஷோகி சவுதி தூதரகத்திற்கு சென்றது, அங்கு 15 பேர் கொண்ட கும்பல் நுழைந்தது, அவர்களால் தாக்கப்பட்டது, தரையில் வீழ்வது, தாக்குபவர்கள் அரபுமொழி பேசுவது, தாக்குதலாளிகள் துருக்கியை விட்டு வெளியேறிய ஆதாரங்களை துருக்கி வெளியிட்டு விட்டது.

சில நிமிடங்களோ, மணித்துளிகளோ தூதரகத்தில் இருந்து விட்டு கஷோகி வெளியேறி விட்டார் என சவுதி கூறியது. அதற்கான ஆதாரத்தைதூதரக சிசிரிவி காட்சியை வெளியிடாத வரை சந்தேகநபர் சவுதிதான்!


---

4-ம் பக்க தொடர்ச்சி...

இந்தியாவின் நிலைப்பாடு.

30ம் திகதி இரா.சம்பந்தனிற்கும், மஹிந்த ராஜபக்சவிற்குமிடையிலான சந்திப்பு முடிந்த பின்னர், தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் உறுதியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்த கூட்டம் முடிந்ததும், மஹிந்த தரப்பிலிருந்து கூட்டமைப்பின் பிரமுகர்களை தொலைபேசியில் அழைத்து, என்ன பேசப்பட்டதென அறிவதில் ஆர்வம் காட்டினார்கள். கூட்டமைப்பின் தலைமையை, தம்மை நோக்கி தள்ளும்படி சில உறுப்பினர்களிற்கு ஆலோசனையும் வழங்கினார்களாம்!

நாடாளுமன்றத்தை தொடர்ந்தும் முடக்கி வைத்திருப்பது மைத்திரிக்கு முடியாத விடயமாக இருந்தது. இந்தியா, மேற்கு நாடுகள் எதிர்பார்த்ததை விட சற்று அதிகமாகவே இந்த விசயத்தில் தலையிட்டு, அழுத்தம் கொடுத்தன. உள்சுற்று பேச்சுக்களில், சில தடைகள் பற்றிய எச்சரிக்கை வழங்கப்பட்டதாகவும் தகவல். 31ம் திகதி ஜனாதிபதி, சபாநாயகரிற்கு இடையிலான சந்திப்பிற்கு முன்னதாக, சபாநாயகர் மேற்குநாட்டு தூதர்கள் சந்தித்தார்கள். மேற்கு நாடுகள் அவசரப்பட்டு தடை போன்ற தீவிரமான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டாமென சபாநாயகர் கோரிக்கை விடுத்திருந்தார்.



பின்னர் ஜனாதிபதி சபாநாயகர் சந்திப்பின் போது, வரும் செவ்வாய் கிழமையளவில் நாடாளுமன்றத்தை கூட்டும் முடிவிற்கு ஜனாதிபதி வந்துள்ளதாக தெரிகிறது. ஆனால், அன்றும் வாக்கெடுப்பு நடக்காது. ஜனாதிபதியின் அக்கிராச உரை மட்டுமே இடம்பெறும்.

ஆக, குதிரை பேரம் முடியும் வரை நாடாளுமன்றம் கூடுவதற்கு வாய்ப்பில்லை.

இது இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் விமர்சனத்திற்குரிய கால கட்டமாக இருக்குமென்பது மட்டும் நிச்சயம்.

தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com




# #metoo
# என்னை ஏன் இப்படி செய்தார்கள்?
## 13 வயதுக் குழந்தையின் கேள்வியால் பிறந்த இயக்கம்


'நம் சமூகத்தில் பாலியல் விழிப்புணர்வும் அதுதொடர்பான சரியான கல்வி முறையும் இல்லை, அதனால்தான் பெண்களுக்கு எதிரான பல வன்கொடுமைகள் தொடர்ந்து அதிகமாக நடக்கின்றன' என்பது பலரின் கருத்தாக இருக்கிறது. 'வெறும் கல்வி மட்டும்போதாது பெற்றோர்களும் சரியான முறையில் தங்களின் பிள்ளைகளுக்கு பாலியல் தொடர்பான புரிதலை ஏற்படுத்த வேண்டும்' என்பது இன்னும் சிலரின் கருத்தாக இருக்கிறது. இது இரண்டுமே மறுக்கமுடியாதது என்றாலும், இன்றைய சூழலில் சமூகம்தான் குழந்தைகளை வளர்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. நம்மை சுற்றி சமூகத்தில் ஒரு தவறு நிகழ்கிறது என்றால் [illegible]நத் தடுப்பதற்கான வழி, முயற்சி, தண்டனை என்பது அந்தத் தவறுகளை முதலில் வெளியே சொல்வதுதான்.

ஒரு குற்றத்தை வெளியே சொல்லும்போதே அதற்கான பாதி நீதி கிடைத்துவிடுகிறது.

ஒரு காலம் வரையில் பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாவதை வெளியே சொல்ல வேண்டும் என்றால் காவல் நிலையம், நீதிமன்றம் என்று செல்லவேண்டும். அதனால் மானம் மரியாதையை எல்லாம் போய்விடும் என்றே சில தலைமுறைகள் நமக்கு முன் மடிந்துவிட்டது. ஆனால், இன்றைய நவீன உலகில் சமூக வலைதளம் மூலமாக எந்தத் தவறையும் எளிதாக ஆவணம் படுத்தமுடிகிறது. அப்படி பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை ஆவணம் செய்ய எளிதாக இருக்கும் வழிதான் மீ டு (#me too) எனும் ஹாஷ் டேக். இந்த ஹாஷ் டேக் எப்படி வந்தது, இதை யார் முதலில் ஆரம்பித்தது, உலகளவில் இருந்து இந்தியா, இலங்கை என்று இது எப்படி பயணப்பட்டது என்பதை பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்.

2006ஆம் ஆண்டு ஆபிரிக்க வம்சாவழியான அமெரிக்கப் பெண்ணான 'தரானா புக்' எனும் சமூக செயற்பாட்டாளர் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளை வைத்து ஒரு ஆவணம் செய்வதற்காக முதன்முதலில் இந்த மீ டு எனும் ஹாஷ் டேக்ஐ உபயோகம் செய்துள்ளார். ஏன் இந்த சொற்தொடரை உபயோகம் செய்ய வேண்டியதாய் இருந்தது என்பதையும் விளக்கியிருக்கிறார்.

பதிமூன்று வயது குழந்தையொன்று 'நான் வன்கொடுமைக்கு ஆளானேன். இதற்கெல்லாம் காரணம் என்ன, ஏன் இப்படி நடக்கிறது' என்று 'தரானா புக்'கிடம் கேட்டுள்ளார். அதற்கு பதில் அளிக்க முடியாமல் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு பிறகு அந்தக் குழந்தைக்கு 'மீ டு' (எனக்கும் இப்படித்தான்) என்று பதில் அளித்துள்ளார். அதனால் அந்த சொற்தொடர்தான் இதற்கு சரியானது எனறு முடிவு செய்துள்ளார். அதன் பின் நியூயோர்க் நகரத்தில் மீ டு இயக்கத்தை அவர் துவங்கினார். அதன் பின் இந்த ஹாஷ் டேக் சமூக வலைதளங்களில் 10 ஒக்டோபர் 2017ல் இருந்து வைரலானது.




முதலில் ஹாலிவுட் சினிமா தயாரிப்பாளர் ஹார்வி வெய்னஸ்டேய்ன் என்பவர் மீது 80க்கும் மேற்பட்ட பெண்கள் புகார் செய்துள்ளனர். அதன் பின் இந்தியாவில் ராயா சர்கார் எனும் சட்டக்கல்லூரி மாணவி கடந்த ஆண்டு அவரின் கல்வி நிறுவனத்தில் பெண்களுக்கு எதிராக நேர்ந்த வன்கொடுமைகளை வெளிக்கொண்டுவந்தார். ஆனால் தற்போது பாலிவுட் நடிகை தனுஸ்ரீ தத்தா, இயக்குனரும் நடிகருமான நானா படேகர் மீது தெரிவித்த பாலியல் வன்கொடுமைக்குப்பின் மீ டு ஹாஷ் டேக் இந்தியா முழுக்க பிரபலமாகியிருக்கிறது.

தமிழகத்தில் பாடகி சின்மயி முதலில் யூட்யூப் விமர்சகர் பிரஷாந்த் மெசேஜ் மூலமாக தொந்தரவு செய்ததாக தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவு செய்தார். அதனைத் தொடர்ந்து பாடலாசிரியர் வைரமுத்து சுவிட்சர்லாந்தில் நடந்த ஒரு இசை நிகழ்ச்சியின்போது பாலியல் தொந்தரவு தந்ததாக புகார் செய்தார். அதன்பின் மீ டு ஹாஷ் டேக் தமிழகத்தில் பிரபலமானது. அப்படியே இலங்கைக்கும் எட்டிப்பார்த்தது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இலங்கை கிரிக்கெட் அணி தலைவராக இருந்த சமயத்தில் மும்பை ஹோட்டல் ஒன்றில் தன்னுடன் அத்துமீறினார், அவரது காலை உதைந்தேன் என விமானப்பணிப்பெண் ஒருவர் பதிவிட்டார். ஐபிஎல் போட்டிகளின் பொது லசித் மலிங்க தன்னை அறைக்குள் பூட்டி அத்துமீறினார் என இன்னொரு இளம்பெண் பதிவிட்டார். இவர்கள் இருவரும் இந்திய பெண்கள். இலங்கை தமிழ் பெண்ணொருவர், தமிழ் சினிமா நடன இயக்குனர் ஒருவர் மீது புகார் பதிவிட்டார்.

எதிர்மறையாக எப்போதோ நடந்த வன்கொடுமைகளைப் பற்றி இப்போது பேசுவதற்கு காரணம் என்னவென்று இப்போது பலர் கேள்விகளை எழுப்புகிறார்கள். 'பாதிக்கப்பட்டபோது வெளியே சொல்வதற்கு ஏற்ற வகையில் ஏதும் இல்லை. ஆனால் இப்போது சமூகவலைதளம் எனும் ஒரு ஆயுதம் இருக்கிறது' என்று பெண்கள் பதில் அளித்துள்ளனர். இந்நிலையில் பெண்களுக்கு ஆதரவாக பிரபல நடிகையான ஐஸ்வர்யாராய் 'பெண்கள், தங்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமைகளை தைரியமாக வெளியே சொல்ல சமூகவலைதளம் பெரும் உதவிகரமாக உள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

இத்தனை காலமாய் பெண்கள் தங்கள் மனதில் வைத்துப் புழுங்கிய நிலை மாறி வெளியே வந்து சுவாசிக்கின்றனர், பேசுகின்றனர். அதை முற்றிலுமாக கொச்சைப் படுத்தி நிராகரிக்காமல் உண்மையை உணர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அரிய வாய்ப்பான இந்த 'மீ டூ'வை தவறாகப் பயன்படுத்தி இத்தனை காலமாக இடித்துத் திறக்கப்பட்ட இந்த இரும்புக் கதவை பெண்களே மூடிவிடக்கூடாது.




# மாற்றி யோசிப்போமா?

சி.கே.குமரவேல்

இது ஸ்டார்ட் அப்களுக்கான காலம். அரசு உத்தியோகம், தனியார் கம்பெனிகளில் கை நிறைய சம்பளம் என்று கனவுகண்ட காலமெல்லாம் போய், 'எனக்கென ஒரு விஷயத்தை நானே உருவாக்குகிறேன். அந்த விஷயத்தை உலகுக்கு விற்பதன் மூலம் கோடி கோடியாகச் சம்பாதித்துக் காட்டுகிறேன்' என பல ஆயிரம் இளைஞர்கள் துணிந்து இறங்கும் காலம். சுருக்கமாக, இளைஞர்கள் எல்லோருமே மாத்தி யோசிக்கும் காலம் இது.

இது மாத்தி யோசிப்பதற்கான காலம் மட்டுமல்ல, மாத்தி யோசிப்பவர்களுக்கு மட்டுமேயான காலம் என்பேன். ஓர் உதாரணம் சொன்னால், நான் இப்படிச் சொல்வதன் அர்த்தம் சட்டெனப் புரியும்.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை, அமெரிக்காவில் எல்லோரும் மாய்ந்து மாய்ந்து டாக்ஸிகளை வாங்கி, வாடகைக்கு விட்டார்கள். பெருகிவரும் மக்களின் தேவைக்கேற்ப வாடகை கார்கள் மூலம் ஓரளவுக்கு நல்ல லாபம் கிடைக்கவே செய்தது. ஆனால், புதிது புதிதாக கார்களை வாங்க வேண்டியிருந்தது. புது கார்களை வாங்க, வங்கிகளில் கடன் வாங்க வேண்டியிருந்தது. வங்கிகளில் கடன் வாங்க சொத்துகளை அடமானம் வைக்க வேண்டியிருந்தது. இத்தனை பாடுபட்டுக் கடன் வாங்கி, வண்டி ஒழுங்காக ஓடவில்லை என்றால், அதாவது தொழில் சரியாக நடக்கவில்லை என்றால், கஷ்டப்பட்டுச் சேர்த்த சொத்து அல்லவா பறிபோகும்?

ஆனாலும், வேறு வழி தெரியாமல், இந்த ஒரு வழியையே எல்லோரும் பின்பற்றி வந்தார்கள். இந்த ஆட்டு மந்தைச் சிந்தையிலிருந்து ஒரே ஒரு மனிதர் மட்டும் மாற்றி யோசித்தார். அவர் பெயர்தான், கொர்ரட் கம்ப் (Garrett Camp). கம்ப்யூட்டர் ஆசாமி. எல்லா விஷயங்களிலும் கம்ப்யூட்டரைப் புகுத்தி என்ன புதுமைகளைச் செய்ய முடியும் என்று யோசிப்பதில் கொர்ரட் கில்லாடி. அதாவது, மாத்தி யோசிப்பதில் மன்னர். கொர்ரட் அப்படி என்ன யோசித்தார்?

ஒரு வாடகை கார் நிறுவனம். ஆனால், அதற்கென சொந்தமாக ஒரு கார்கூட இல்லை. காரே இல்லை என்கிறபோது டிரைவர்கள் இருப்பார்களா என்ன? அவர்களும் இல்லை. கார் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே, கடன் வாங்க வேண்டியதில்லை. காரும் இல்லை, கார் டிரைவரும் இல்லை என்ற பிறகு எப்படித்தான் வாடகை கார் கம்பெனியை நடத்துவது? மாத்தி யோசிப்பதன் மூலம் அருமையாக் நடத்த முடியும் என்று கண்டுபிடித்தார் கொர்ரட். எப்படி?

கம்ப்யூட்டர் மற்றும் செல்போன் மூலம் ஒரு நெட்வொர்க்கினை அமைத்தார். வாடகை கார் வேண்டும் என்கிறவர்களின் அழைப்பு (Call) முதலில் வரும். அந்த அழைப்பினை ஏற்று, அவருக்குச் சேவை செய்ய (கார் ஓட்ட) மறுமுனையில் பல டிரைவர்கள் தயாராக இருப்பார்கள். அந்த டிரைவர்களில் யார் அந்த அழைப்பினை முதலில் ஏற்றுக் கொள்கிறாரோ, அவர் அந்தப் பணியைச் செய்ய வேண்டும். எவ்வளவு தூரம், எத்தனை மணித் துளிகள் என எல்லா விஷயங்களும் செல்போனில் உள்ள ஜி.பி.எஸ் மூலம் கம்ப்யூட்டரில் பதிவாகும். காரில் பயணித்த பயணி, பயணம் செய்து முடித்தவுடன் அதற்கான தொகை உள்ளிட்ட தகவல்கள் கம்ப்யூட்டர் மூலம் செல்போனுக்குச் செல்லும். அந்தத் தொகையைப் பயணி கொடுத்துவிட்டால், முடிந்தது கதை.

இதில் இரண்டு விஷயங்கள் கட்டாயம் வேண்டும். முதலில், பயணிகள் தங்களுக்கு கார் தேவை என அழைக்க வேண்டும். அதற்குப் பஞ்சமே இல்லை. உலகம் முழுக்க ஒவ்வொரு நிமிடமும் பல லட்சம் பேருக்கு எங்காவது செல்ல கார் தேவைப்படுகிறது. வாடகை காருக்காக அவர்கள் அலையத் தேவையில்லை. கட்டணத்தைப் பேரம் பேசத் தேவையில்லை. ஒரே ஒரு முறை செல்போனில் அழைத்தால் போதும்; அடுத்த சில நிமிடங்களில் கார் வந்து நிற்கும். வாடகை கார் வேண்டும் எனக் கேட்கிற பயணிகளுக்கு இதற்குமேல் என்ன வேண்டும்?

இரண்டாவது, காரும், டிரைவர்களும் தேவை. சொந்தமாக கார் வைத்திருக்கும் டிரைவர்கள் உலகம் முழுக்க பல லட்சம் பேர் இருக்கிறார்கள். எப்போதடா வேலை வரும் என்று அவர்கள் காத்தும் கிடைக்கிறார்கள். வேலை கிடைக்காத நாள்களில் அவர்களுக்கு வருமானம் கிடைக்காது. எனவே, வேலை கிடைக்க வேண்டும் என்கிற பிரார்த்தனை அவர்களின் மனதில் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கும். ஒரு செல்போன் மூலம் 'இங்கிருந்து இங்கு செல்லத் தயாரா' என ஓர் அழைப்பு வந்தால், யெஸ் (அல்லது நோ) சொல்லிவிடலாம். ஆக, எந்த டிரைவரும் இன்று வேலை கிடைக்குமோ, கிடைக்காதோ என்று யோசிக்கத் தேவையே இல்லை.

ஆக, ஒரு கம்ப்யூட்டர், ஒரு செல்போன் என்கிற இரண்டை மட்டும் வைத்துக்கொண்டு, ஊபர்கேப் என்கிற பெயரில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார் கொர்ரட். மாத்தி யோசித்ததன் மூலம் கிடைத்த அற்புதமான ஐடியா. பவர்ஃபுல்லான இந்த ஐடியாவைப் பார்த்துப் பூரித்துப் போனார் டிராவிஸ் கலானிக் (Travis Kalanick) என்கிற அமெரிக்க பிஸ்னஸ்மேன். இவரும்ஒருகம்ப்யூட்டர் ஆசாமி என்பதால், கொர்ரட்டின் ஐடியா அவருக்குச் சட்டெனப் புரிந்தது. இருவரும் சேர்ந்து, ஊபர்கேப்பை ஊபர் என்று மாற்றினார்கள். இன்று, ஊபர் உலகம் முழுக்க பல நாடுகளில் செயல்படுகிறது. இதன் மதிப்பு (Valuation) சுமார் 70 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்கிறார்கள். இத்தனைக்கும் இந்த நிறுவனத்துக்கென ஒரு வாடகை கார்கூட சொந்தமாக இல்லை. மாத்தி யோசித்ததன் மூலம் கிடைத்த வெற்றியைப் பார்த்தீர்களா?

இதுமாதிரி மாத்தி யோசிக்கும் இளைஞர்கள் தான் இன்றைய பிஸ்னஸ் உலகில் வெற்றிக் கொடியை உச்சத்தில் பறக்க விடுபவர்களாக இருக்கிறார்கள். அப்படி மாத்தி யோசிக்கும் இளைஞர்களை உருவாக்குவதே இன்றைக்கு நமது உச்சபட்சத் தேவையாக இருக்கிறது.

இன்றைக்கு நாம் புத்தாக்கம், புத்தாக்கம் (Innovation) என்று பேசிக் கொண்டிருக்கிறோமே, அது வேறு ஒன்றுமில்லை, மாத்தி யோசிப்பதுதான். இன்றைய திகதியில் எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, புதுமை படைக்கவில்லைஎனில், மடிந்து அழிந்துபோவது தவிர, வேறு வழியில்லை. மாத்தி. யோசித்து, புதுமை படைப்பதன் மூலம் சாம்பலிலிருந்து ஃபீனிக்ஸ் பறவைபோல மீண்டும் எழுந்துவர முடியும். ஆனால், மாத்தி யோசிக்கிற திறமையும், தகுதியும் இன்றைக்கு நம் இளைஞர்களிடம் இருக்கிறதா என்பதுதான் முக்கியமான கேள்வி.

இன்றைக்கு நம் இளைஞர்களிடம் என்ன திறமை இல்லை? படிப்பில் கெட்டிக்காரர்களாக இருக்கிறார்கள். ஒழுக்கத்தில் அவர்கள் அளவுக்கு வேறு எந்த நாட்டு இளைஞர்களும் நிச்சயம் வர மாட்டார்கள். மாத்தி யோசித்து, புதுமைகளைப் படைப்பதில்கூட மன்னர்களாக இருக்கிறார்கள். ஆனால், என்ன புண்ணியம்? யாரோ ஒருவரிடம் சம்பளத்துக்குத் அறிவையும் திறமையையும் உடல் உழைப்பையும் விற்றால் போதும் என்று நினைக்கிறவர்களாகவே இருக்கிறார்கள்? இதனால்ஓர்இளைஞனின் அற்புதமான சிந்தனைத்திறன் மூலம் விளைந்த லாபம், வேறு ஒருவரின் பைகளை நிரப்புகிறது. சம்பளப் பணத்தைப் பார்த்துத் திருப்தி அடையும் அந்த இளைஞன், தனது எஜமானரைப் பெரும் செல்வந்தனாக்குகிறான்.

சம்பளத்துக்காக உழைப்பதில் தவறு எதுவுமில்லை. சிலருக்கு அதுவே சௌகர்யமாக இருக்கும். ஆனால், அதை மட்டுமே செய்ய நினைத்தால், மணி அடித்தால் சோறு கிடைக்கும். வாழ்க்கையில் மகத்தான பேரோ, கை நிறையப் பணமோ கிடைக்காது.

தமக்கும், தன்னோடு சேர்ந்த பல ஆயிரம் பேருக்கும் வேலை தந்து, செல்வத்தைச் சேர்க்க உதவுவதுதான் பிசினஸ். இந்த பிசினஸில் ஜெயிக்க வேண்டுமெனில், உங்களுக்கே உங்களுக்கென மாத்தி யோசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதை எப்படிச் செய்வது என்பதைச் சொல்லவே இந்தத் தொடர். தொடர்ந்து படியுங்கள்!

*(மாத்தி யோசிப்போம்)*




சமூகத்திலுள்ள பெரும்பாலானவர்களை போல ஒவ்வொரு ஐந்து நிமிடமும் தன்னை அறியாமலேயே வாட்ஸ்ஆப், சமூக ஊடகங்கள் சார்ந்த நோட்டிபிகேஷனை கைபேசியில் பார்ப்பவர்களில் பத்திரிகையாளரான நானும் ஒருவன். ஆனால், கடந்த நான்குஐந்து தினங்களாக, "Ms XYZ mentioned you in their tweet" என்பது போன்ற நோட்டிபிகேஷன் எனக்கும் வந்திருக்குமோ என்ற பயத்தில் கைபேசியை கையில் எடுப்பதற்கே தயங்குகிறேன்.

என்னை போன்ற ஆயிரக்கணக்கான ஆண்கள் ட்விட்டரில் பூதாகரமாகி வரும் #MeToo-வில் தாங்களும் சிக்கி விடுவோமோ என்ற பயத்தில் கடந்த ஒரு வாரமாக வாழ்ந்து வருகிறோம்.

ஆண்களின் பாலியல் அத்துமீறல்களை பெண்கள் ட்விட்டரில் #MeToo என்ற ஹாஷ்டேக்கை பயன்படுத்தி வெளிக்கொணரும் நிகழ்வு கடந்த ஒருவருடத்திற்கு முன்பு ஹாலிவுட்டில் தொடங்கி, பிறகு பாலிவுட்டை அடைந்து, தற்போது இந்திய ஊடகங்களையே வந்தடைந்திருக்கிறது. பல வகைகளில் தங்களிடம் அத்துமீறிய ஆண்களின் செயல்பாட்டை பல தசாப்தங்களாக மனதில் மூடி வைத்திருந்த பெண்கள், கடைசியாக தற்போது முழு மனவுறுதியுடன் அதை ட்விட்டரில் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

ஆனால், சட்டரீதியாக பார்க்கும்போது தற்போது வெளிவந்துள்ள குற்றச்சாட்டுகளில் எத்தனை உண்மையான குற்றச்சாட்டுகள் என்பதில் தெளிவில்லாமல் பலர் சமூக ஊடகங்களில்போரிட்டுவருகிறார்கள்.

ட்விட்டரில் எழுத்துகள் மூலமாகவும், படங்கள் மூலமாகவும், ஸ்கிரீன் ஷொட்டுகள் மூலமாகவும் வெளிவந்துள்ள பல்வேறு குற்றச்சாட்டுகளை நான் மறுக்கிறேன் என்றோ, எதிர்த்து பேசுகிறேன் என்றோ இதற்கு அர்த்தமல்ல. ஆனால், சில விடயங்களில் மற்றொரு கோணமும் இருக்கும். இந்த இயக்கம் தனிப்பட்ட முறையில் பெண்கள் தங்களுக்கு வேண்டாதவர்களை பழித்தீர்த்துக்கொள்வதற்காக தவறான வழியில் பயன்படுத்தபடுமோ என்ற அச்சமும் எழுந்துள்ளது.

#BelieveWomen, #BelieveSurvivors போன்ற ஹாஸ்டேக்குகள் மூலம் இதுபோன்ற கேள்விகளை எழுப்புவதற்கும், குற்றச்சாட்டுகளை உறுதி செய்வதற்கும் வழியே இல்லை.

என்னுடைய ட்விட்டர் செய்தியோடையில் பலரும் #MeToo இயக்கத்தை செம்மையாகவும், நீர்த்துப் போகாமலும், நேர்மையுடனும் தொடர்ந்து செயல்பட வைப்பதற்கு வலியுறுத்துகின்றனர்.

#MeToo வாயிலாக குற்றச்சாட்டுக்குள்ளான ஒருவர், தன் மீதமான குற்றச்சாட்டுகள் குறித்து மறுப்பு கூட தெரிவிக்காமல், "இன்றைய கால கட்டத்தில் பெண்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்வினையாற்றுவதென்பது வீண் செயல். ஏனெனில், பெண்கள் என்ன கூறுகிறார்களோ அதுஞ்." என்ற பதிலோடு முடித்துக்கொண்டார்.

இது ஏற்படுத்திய விளைவு என்ன?

#MeToo வாயிலாக வெளிவந்த குற்றச்சாட்டுகள் குறித்து பல ஊடக நிறுவனங்களில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமின்றி, பல ஊடகங்களின் ஆசிரியர்கள் பதவி விலகினர், சிலர் தாங்கள் பல வருடங்களுக்கு முன்னர் அத்துமீறிய பெண்களிடம் குற்றத்தை ஒப்புக்கொண்டு, மன்னிப்பு கேட்க முயன்று வருகிறார்கள்.

### நான் பயப்பட வேண்டுமா?

நீங்கள் இதுவரை பெண்ணொருவரை தொந்தரவு செய்துள்ளீர்களா? என்ற கேள்விக்கு உங்களது அடிமனது கூறும் பதில் இதற்கு போதுமானது.

இந்த கடுமையான சூழலை எப்படி கடந்து செல்வது?

முதலில் இந்த #MeToo என்பதை ஆண்களை மையமாக கொண்ட ஒன்றாகமட்டும் ஆக்கிவிட வேண்டாம். இதன் பிறகும் உங்களுக்கு பயமிருந்தால், பெண்களின் உலகத்திற்கு வாருங்கள். ஆம், தங்களது வாழ்க்கையின் பெரும் பகுதியை பெண்கள் இப்படித்தான் கழிக்கிறார்கள்.

இரண்டாவதாக, #MeToo இயக்கம் சமூக வலைதளங்களை ஆக்கிரமித்துள்ள அளவையும், இதுபோன்ற ஏற்றுக்கொள்ளமுடியாத நடத்தைகள் சமூகத்தில் எப்படி ஆழ வேரூன்றியுள்ளது என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்.




மூன்றாவதாக, இனியாவது பெண்களிடம் தவறாக நடந்துகொண்ட உங்களது நண்பர்களை புகழ்வதை, பாராட்டுவதை நிறுத்திவிட்டு, அதன் வீரியத்தை யோசித்து பாருங்கள்.

உங்களது ஆண் நண்பர்கள் குழுவில், பைத்தியக்காரத்தனமாக பேசும் விடயங்கள் எப்படி ஒரு பெண்ணுக்கு வாழ்நாள் முழுவதும் பயத்தை உண்டாக்கும் நிகழ்வாக மாறுகிறது என்பது குறித்து பெரும்பாலானவர்கள் புரிந்துகொள்வதில்லை.

இனி பெண்களிடம் தவறாக நடந்து கொள்ளும் உங்களது நண்பர்களை ஆதரிப்பதை நிறுத்துங்கள், இல்லையெனில் நீங்களும் அந்த குற்றத்திற்கு துணை போனவராக கருதப்படுவீர்கள்.

கிட்டத்தட்ட கடந்த ஒருவாரமாக பரபரப்பை உண்டாக்கி இருக்கும் இந்த விவகாரம், ஆண்களின் செயல் மற்றும் பேச்சுரீதியிலான நடத்தையில் சுயவிழிப்பை உண்டாக்கியுள்ளது. பணியிடத்தை பெண்களுக்கு பாதுகாப்பானதாக்கும் முயற்சியில் இது ஒரு படி முன்னேறியதை காட்டுகிறது.

ஆனால், இந்த #MeToo இயக்கம் ஆண்கள்ள தனிமைப்படுத்தி, மோசமான நிலைக்கு இட்டுச்செல்லும் ஒன்றாக மாறாது என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். ஆண்கள் தங்களது நிகழ்கால செயல்பாடுகள் எதிர்காலத்தில் பிரச்சனைகளை உண்டாக்கலாம் என்று உணர்வதை போன்று, ட்விட்டுகள் நீக்கப்படலாம், ஆனால் ஸ்கிரீன் ஷொட்டுகள் அப்படியே இருக்கும் என்பதை பெண்களும் உணர வேண்டும்.

## ஆட்டோ சங்கரின் கதை

# நான் திருட்டுத்தனமா பாலை கறந்தேன், அவன் கழுத்தை அறுத்து ரத்தத்தைக் கறந்தான்!


### இந்தியாவை உலுக்கிய சீரியல் கில்லரின் மரண வாக்குமூலம்: 06

அவ்வளவு சாராயத்தோட கோட்டைக்குப் போன மொத ஆள் நானாகத்தான் இருக்கும். கோட்டையிலே போய் யாரை பார்த்தேன் தெரியுமா? முனு ஆதியை! முனு ஆதியைப் பற்றி பின்னாடி சொல்றேன்.

நான் இப்ப வேணா இத்தனை பழிகளை சுமந்துக்கிட்டிருக்கேனே தவிர அப்போல்லாம் மாசு மருவற்றவன். அப்படி இருந்தும் இப்ப ஏன் இந்த கஷ்டம்? எங்கே பிசகு நடந்துச்சு? புரியல...புரியாது. அதுதானே வாழ்க்கை. உண்மைன்றது கற்பனையைவிட வேடிக்கையாவும் விபரீதமாகவும் எத்தனையோ தடவை தோற்றம் தருவது! என் வாழ்க்கையிலேயே அதற்கு எவ்வளவோ உதாரணங்கள்!

சாராய வியாபாரமும் அமோகமா நடந்துச்சு... என் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமா வளர்ந்துகிட்டே போச்சு. கல்லா கட்டி, 4 ஷிப்ட் போட்டு வியாபாரம் செய்யவேண்டிய அளவுக்குப் பெருகிப்போச்சு. முப்பத்தைஞ்சு லிட்டர் கேன் வாங்கி எடை கட்டினா நாலு மடங்கு லாபம் பார்க்கலாம். எழுநூறு ரூபா சரக்குக்கு ரெண்டாயிரத்து எண்ணூறு வரை சம்பாதிக்கலாம்...





நல்ல சரக்குக்கு அடையாளம்... கையை சாராயத்துக்குள்ளே முக்கி தீயிலே காட்டினதும் குப்புன்னு கையை சுத்தி தீப்பிடிக்கும். ஆனா கையிலே சுடாது... அந்த நல்ல சரக்கிலே நாலு பங்கு தண்ணீர் சேர்த்து ஒரு கேனை நாலு கேன் ஆக்குவதற்குப் பேர்தான் 'எடை கட்டுவது' சும்மா பேருக்கு அப்பப்ப ரெய்டு வருவாங்க. அதுவும் முதல் நாளே என்கிட்டே வந்து இன்ஸ்பெக்டர் தலைமலை சொல்லிடுவாரு... தலைமலைன்னு சொன்னதும் ஒரு விஷயம் ஞாபகத்துக்கு வருது. போலீஸைப் பத்தி சரியா புரிய வைக்க இதைவிட நல்ல சம்பவத்தைச் சொல்ல முடியாதுன்னு நினைக்கிறேன்.

ஒரு நாள் ஸ்டேஷனுக்கு அவரைப் பார்க்கப் போனப்ப, லாக்அப் ரூமிலே தலைமலையும், கூட நாலு போலீஸ்காரங்களுமா சேர்ந்து ஒரு ஆளை நையப்புடைச்சுக்கிட்டிருந் தாங்க... ஸ்டேஷன்ல இது வழக்கமா நடக்கிற விஷயம்தான்னு கண்டுக்காம வந்துட்டேன் முதல்நாள். ரெண்டாவது நாளும் அந்த ஆளை, ஆள்மாற்றி ஆள் பந்தாடிக்கிட்டு இருந்தாங்க... உடம்பெல்லாம் ரத்தம் ஒழுக அவனைப் பார்க்கவே பரிதாபமா இருந்துச்சு.

"இனிமே ஒழுங்கா இருப்பியா?"ன்னு ஆள் மாற்றி ஆள் கேள்வி கேட்டுக் கிட்டே அக்கக்கா கழற்றினாங்க. ஆள் செத்துடுவானேன்னு பயமாப்போச்சு. மூன்றாவது நாளும் அவன் தொடர்ந்து அடி வாங்கறதைப் பார்த்துட்டு என்னன்னு விசாரிச்சேன்... "எதாவது ரௌடித்தனம் பண்ணினானா?'

"ம்ஹூம்... அதெல்லாமில்லை! இவனும் ஒரு சாராய வியாபாரிதான். நல்லா சம்பாதிச்சுக்கிட்டிருந்தான். எங்களுக்கு மாமூல் தந்துக்கிட்டி ருந்தான். இப்ப திடீர்னு வந்து 'இனிமே நான் சாராய வியாபார மெல்லாம் பண்ண மாட்டேன். திருந்திட்டேன்'றான். அதற்குத்தான் இந்த ஸ்பெஷல் பூஜை"

எனக்கு திக்குன்னு ஆயிருச்சு. எவ்வளவுதான் பணம் கொடுத்தாலும் போலீஸ் ஜாதிக்கு நன்றி மறந்துடும். பாவம் அந்த வியாபாரி. இந்த இன்ஸ்பெக்டருக்கு எவ்வளவு பணம் கொடுத்திருப்பான்... அதையெல்லாம் சுத்தமா மறந்துட்டு இப்ப மாமூல் வரலைன்னதும் இப்படி அடிச்சு நொறுக்குகிறாரே... கொஞ்சம்கூட நெஞ்சிலே ஈரமே இருக்காதோ?

திருந்தினால் கூட, திருந்த விட மாட்டேன்றாரே. இப்ப எனக்கு மரியாதை தந்தாலும் எதிர்காலத்திலே நான் மனசு மாறினாலும் இந்த கதிதான்! போலீஸ்காரங்களை ரொம்ப நெருங்கினாலும் போச்சு. ரொம்ப பகைச்சாலும் போச்சு. மனசுக்குள்ள ஒரு எச்சரிக்கை விளக்கு எரிஞ் சது. அடிவாங்கின அந்த ஆளோட ஏரியா இது கிடையாது. அவன் பெயில்ல போயிரக்கூடாதுன்றதுக்காக ஒவ்வொரு ஸ்டேஷன்லயும் மூணு நாளைக்கு மேலே வச்சுக்காம இடம் மாற்றிக்கிட்டே இருந்தாங்க. ஒவ்வொரு ஸ்டேஷன்லேயும் மண்டகப்படிதான்!

மாதா மாதம் திருவான்மியூர்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

நான் ஸ்டேஷனுக்குப்போய் மாமூல் கட்டின நிலைமாறி, என்னைத்தேடி வரும்படி வச்சேன். வீடு தேடி வர ஒவ்வொரு போலீஸ்காரரும், ஐ.ஜி.க்குத் தர்ற மரியாதையை எனக்குத் தந்தாங்க. சோபாவிலே கால் மேல கால் போட்டு தர்பாரா உட்கார்ந்திருப்பேன். இடப்பக்கம் வாள் சொருகிக்காத இளவரசன் கணக்கா செம பந்தா! கையிலே விஸ்கி கிளாஸ் வேற... கைகட்டி, வாய் பொத்தி நிப்பாங்க சுகுமாரும், மற்ற போலீஸும். திருவான்மியூர்லே கொடிகட்டிப் பறந்தேன்.

சாராயத்தை ஒரு இடத்திலே கொடுத்துட்டு வியர்வையும் களைப்புமா திரும்பி வந்திருந்தேன். தம்பி மோகன் வந்து, யாரோ எனக்காக ரொம்ப நேரமா காத்திருப்பதாகச் சொன்னான். போய்ப் பார்த்தேன். அவன் எழுந்து நின்றான். அப்ப மெட்ராஸ்லே இருந்த பெரிய பெரிய தாதாக்கள் பேரெல்லாம் சொன்னான். பேரைக் கேட்டாலே நான் மிரளுகிற பெயர்கள். அவர்களெல்லாம் தனக்கு மிகவும் நெருக்கமென்றான்.

"நீங்க என்னைப் பார்க்க வந்திருக்கிற காரணம்?"

"இந்த வட்டாரத்திலேயே நீங்கதான் பெரிய சாராய வியாபாரின்னு சொன்னாங்க... அதான் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்! நான் உங்களுக்கு ரொம்ப உபயோகப்படுவேன்!"

"எப்படி?"

அவன் சொன்ன பதில்கள்ல எனக்கு செம அதிர்ச்சி. கொஞ்சம்கூட எதிர்பாராத மிருகத்தனமான யோசனைகள் சொன்னான் அவன்.

"இப்படி மனிதாபிமானமில்லாம இருக்கீங்களே"ன்னு சொல்லிட்டு சிரிச்சேன். நான் செய்த சாராய வியாபாரம் ஒன்றும் புனிதமான பணி இல்லே! அதே சமயம் சன்னமா ஒரு தொழில்தர்மம் வச்சிருந்தேன் நான்.

ரெண்டு பேரோட குணமும் பொல்லாததுதான்! அதே சமயம் நான் திருட்டுத்தனமா மாட்டுகிட்டேயிருந்து பாலை கறந்தேன்... அவன் கழுத்தை அறுத்து ரத்தத்தைக் கறந்தான்னு சொல்லலாம். விரிவா எல்லாத்தையும் பின்னாலே சொல்றேன். பேரைக்கேட்டேன். "பாபு"ன்னு சொல்லி சிரிச்சுகிட்டே கை குலுக்கினவன் மெல்ல "என் மேலே ஒரு கொலைக் கேஸ்... நடந்துக்கிட்டிருக்கு" என்றானே பார்க்கலாம். பதறிப்போனேன்.

"கொ...கொலை....கேஸா?" எனக்குக் குலை நடுங்கியது.

பின்னாளில் என் மீதே ஆறு கொலைகள் பண்ணினதா கேஸ் வரப்போகுது, அதற்கு இந்த பாபுதான் அப்ரூவராகி எனக்கெதிரா சாட்சி சொல்லுவான்னு அப்ப சுத்தமா எதிர்பார்க்கல!




முண்டாசுபட்டி என்ற முழுநீள காமெடி படத்தை கொடுத்த அதே டீம், அதில் இருந்து மாறுபட்டு, பக்கா கிரைம் திரில்லர் ஜானரில் கொடுத்திருக்கும் படம். சினிமா இயக்குனராகும் கனவுடன் இருக்கும் விஷ்ணு விஷால், தனது முதல் படைப்பாக, சைக்கோ திரில்லர் படம் உருவாக்க, உலகம் முழுவதும் உள்ள வித்தியாசமான சைக்கோ கில்லர் கரக்டர்களை பற்றி படித்து தெரிந்து கொண்டு, பிறகு அதை வைத்து கதை தயார் செய்து, படத்துக்கான தயாரிப்பாளரை தேடி அலைகிறார். அவரது முயற்சி பலனளிக்காத நிலையில், தனது தந்தை பார்த்த பொலிஸ் வேலையில் சேர்கிறார். அவர் வேலையில் சேர்ந்த நேரம், முகம் தெரியாத சைக்கோ, பள்ளி மாணவிகளை கடத்தி சென்று, அவர்களை மிகக் கொடூரமான முறையில் கொன்று பொது இடங்களில் வீசுகிறான். இதனால் பொலிஸ் துறையே தடுமாறுகிறது.

சின்னதாக ஒரு க்ளூ கூட கிடைக்காத நிலையில், சினிமா திரைக்கதைக்காக தான் சேகரித்த சைக்கோ அனுபவத்தை கொண்டு, நிஜ சைக்கோவை விஷ்ணு விஷால் எப்படி கண்டுபிடிக்கிறார் என்பது கிளைமாக்ஸ்.

ஏற்கனவே அறிமுகமான கலைஞர்கள் நடித்திருந்தாலும், படத்தின் திரைக்கதையும், அதன் மின்னல் வேகமும், திடீர் திடீரென்று வரும் திருப்பங்களும் ஹாலிவுட் தரத்துக்கு நிகரானது. கொடூரமான முறையில் கொலைசெய்யும் சைக்கோ உருவாகும் விதம் மற்றும் அவனைப் பிடிக்க ஹீரோ ஒரு சின்ன நூலை பிடித்துக்கொண்டு நெருங்கும் திரைக்கதை, ரசிகர்களை பதற வைக்கிறது. ஒரு சைக்கோ வாத்தியார் ஒரு மாணவியை பாலியல் டார்ச்சர் செய்யும்போது, அதே நேரத்தில் இன்னொரு இடத்தில் மற்றொரு சைக்கோ இருப்பதாக காட்டுகிறார்கள்.

இப்படி ஒவ்வொரு காட்சிக்கு உள்ளேயும் அதன் இன்னொரு முகம் காட்டப்படும் யுக்தி, கிளாஸ். ஜிப்ரானின் பின்னணி இசை, காட்சிகளுக்கு தொடர்ச்சியாக பரபரப்பு கூட்டியிருக்கிறது. பி.வி.சங்கரின் ஒளிப்பதிவு, ஒவ்வொரு படுகொலையையும் உடம்பை ஜில்லிட வைக்கும் விதத்தில், அதிபயங்கரமாக பதிவு செய்திருக்கிறது. முறைப்பும், எந்தவித பில்டப்பும் இல்லாத யதார்த்தமான பொலிசாக வரும் விஷ்ணு விஷாலின் நடிப்பு கச்சிதம். விருப்பமின்றி பொலிஸ் வேலையில் சேர்ந்து, ஈகோ பிடித்த உயரதிகாரி சூசனுக்கு தலைகுனிந்து சேவகம் செய்வதில் இருந்து, மூன்று படுகொலைகளின் அடுத்தடுத்த முடிச்சை அவிழ்த்துக்கொண்டே அந்த கொலையாளியை கொஞ்சம் பயத்துடனும், கொஞ்சம் தைரியத்துடனும் நெருங்குவது வரையிலான அவரது நடிப்பில் நல்ல முதிர்ச்சி. கிளைமாக்ஸில், மேஜிக் தெரிந்த சைக்கோவுடன் அவர் மோதுகின்ற சண்டை காட்சி, ஹைலைட். அமலா பால் பொறுப்பான ஆசிரியையாக வந்து மனம் கவர்கிறார். அவரது அரவணைப்பில் உள்ள பேபி மோனிகா, திடீரென்று சைக்கோவிடம் சிக்கித் தவிப்பது பரிதாபம். படுகொலை செய்யப்பட்ட மாணவிகள் மூவருமே தேவதை மாதிரி பேரழகு. அவர்கள் கொல்லப்பட்ட விதத்தை விவரிக்கும்போது, மனசு பதறி துடிக்கிறது. குறிப்பாக, விஷ்ணு விஷாலின் அக்கா வினோதினியின் மகளாக வரும் அபிராமி காட்சி. காமெடி செய்யும் முனீஸ்காந்த், காளி வெங்கட் இருவரும் சீரியஸான பொலிசாக வந்து, தங்கள் பங்கை சிறப்பாக செய்திருக்கின்றனர்.

கொடூரமான சைக்கோ யூகிக்க முடியாத தோற்றத்தில் இருந்தாலும், அந்த இரண்டு கரக்டர்களின் உருவாக்கமும் மற்றும் அதில் நடித்து இருப்பவர்களும், 'யார் இவர்கள்?' என்று கேட்க வைக்கின்றனர். தெனாவட்டு பொலிஸ் அதிகாரி வேடத்தில் சூசன் வெளுத்துக்கட்டுகிறார். கொடூரமான கொலைகளை பற்றி விஷ்ணு விஷாலை தவிர மற்ற பொலிஸ் அதிகாரிகள் சீரியஸாக விசாரிக்காதது ஏன்? கொல்லப்படும் எல்லா மாணவிகளும் ஹீரோவுக்கு அறிமுகமானவர்களாகவே இருப்பது எப்படி? கணக்கு வாத்தியாரின் கொடூரமான முகத்தையும், சைக்கோவின் கொடூரமான கொலையையும் இலைமறை காயாக காட்டியிருக்கலாம். எனினும் இந்த ராட்சசன், உண்மையிலேயே பயம் கொள்ள வைக்கிறான்.

## விளம்பரமின்றி 100 படங்கள்!

விளம்பர் இடையூறு இன்றி ஆண்டுக்கு 100 படங்களை ஒளிபரப்பவுள்ளது டாடா ஸ்கை நிறுவனம். விஜய் டி.வியுடன் இணைந்து இந்த திட்டத்தை டாடா ஸ்கை நிறுவனம் செயல்படுத்த இருக்கிறது. ஏற்கெனவே மராத்தி, தெலுங்கு, பஞ் சாபி உள்ளிட்ட பல மொழிகளில் இந்த திட்டத்தை டாடாஸ்கை நிறுவனம் செயல்படுத்தி வருகிறது. தற்போது டாடா ஸ்கை தமிழ் சினிமா என்ற பெயரில் தமிழில் செயல்படுத்த இருக்கிறது. குடும்ப டிராமா, ஆக்சன், காமெடி, பேண்டசி, என பல வகையான படங்களை வாரத்திற்கு இரண்டு படங்கள் என்ற வகையில் ஒளிபரப்பாக இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு பிரிமியர் படம் இருக்கும். பாகுபலி, தீரன் அதிகாரம் ஒன்று, துப்பாக்கி, விஸ்வரூபம் உள்ளிட்ட படங்கள் பிரிமியர் வரிசையில் திரையிடப்பட இருக்கிறது. இந்த மாதம் பிரிமியர் படமாக விஜய் ஆண்டனி நடித்த காளி ஒளிபரப்பாகிறது.






## சுதா ரகுநாதன் சின்னத்திரையில்!

பிரபல கர்நாடக இசைப் பாடகி சுதா ரகுநாதன் முதன் முறையாக தற்போது ஒளிபரப்பாகி வரும் நந்தினி சீரியலில் சிறப்புத் தோற்றத்தில் நடித்திருக்கிறார். அவ்னி சினிமேக்ஸ் சார்பில் சுந்தர்.சி தயாரிக்கும் தொடர் நந்தினி, ராஜ்கபூர் இயக்கி வருகிறார். தினா இசை அமைக்கிறார். மாளவிகா வேல்ஸ், நித்யா ராம், ராகுல், சச்சு, ராணி கவிதா உள்பட பலர் நடிக்கிறார்கள். இந்த தொடரில் நவராத்திரியை ஒட்டி ஒரு சிறப்பு பகுதிய்ய இணைத்திருக்கிறார்கள். இதுகுறித்து இயக்குனர் ராஜ்கபூர் கூறியதாவது: நந்தினி வீட்டில் வைக்கப்படும் கொலுவில் இருக்கும் பொம்மைகள் 9 நாளும் 9 கதைகள் சொல்கிறது. அந்த கதை மெயின் கதையோடு தொடர்புடையதாக இருக்கும். அதோடு நவராத்திரி ஏன் கொண்டாடப்படுகிறது, அதன் மகத்துவம் ஆகியவையும் சொல்லப்படும். இதில் பாடகி சுதா ரகுநாதன் சிறப்பு தோற்றத்தில் இந்த எபிசோட்களில் நடிக்கிறார். ஒரு பாடலும் பாடுகிறார். இதற்காக பிரமாண்ட நவராத்திரி கொலு செட் போட்டு திரைப்படத்துக்கு நிகராக படமாக்கி வருகிறோம் என்றார்.

## கபடி வர்ணனையாளராகிறார் பாவனா!

சின்னத்திரையின் நட்சத்திர தொகுப்பாளினி பாவனா. திரைப்படம் தொடர்பான பிரமாண்ட நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்குவார். இடையிடையே மியூசிக் ஆல்பமும் வெளியிடுவார். தற்போது பாவனா நடைபெற்றுக் கொண்டிருக்கும் புரோ கபடி போட்டியின் நேரடி வர்ணணையாளர் ஆகியிருக்கிறார். சென்னையில் தொடங்கிய கபடி போட்டியில் பாவனாதான் ஸ்டார் அட்ராக்ஷன். களத்தில் நேரடியாக நின்று கொண்டு வர்ணணை செய்தார். பாவனாக ஏற்கெனவே ஐபிஎல் கிரிக்கெட் போட்டியையும் வர்ணணை செய்திருக்கிறார். இதற்கிடையில் மாஷ்அப் என்ற தனது இரண்டாவது இசை ஆல்பத்தையும் முடித்து விட்டார். அதை விரைவில் யு டியூப்பில் வெளியிடப்போகிறார்.





## சரவணன் மீனாட்சி பிரச்சனை!

சரவணன் மீனாட்சி மூன்றாவது சீசனில் நடித்தது தவறான முடிவு என குமுறியிருக்கிறார் சீரியலின் ஹீரோயின் ரச்சிதா. ஷூட்டிங் தொடங்கிய நாளில் இருந்தே பிரச்சனைகள் இருந்தன என்கிறார். செந்தில் ஸ்ரீயா நடித்த முதல் சீசன் முடிய, அடுத்த சீசனில் ரச்சிதா கமிட் ஆனார். சீரியல் தொடங்கிய சிறிது காலத்தில் ஹீரோ இர்பான் மாறினார். இரண்டாவது ஹீரோ பிரேம் அடுத்த சில மாத்த்தில் விலகினார். ஒருவரை காதலிப்பதாக காட்டிவிட்டு, அவர விலக இன்னொருவரை காதலிப்பதாக காட்டுவது தன்னுடைய இமேஜை கெடுக்கிறது என ரச்சிதா புகார் கூறியும் அதை யாரும் கேட்கவில்லையாம். இப்படி மூன்று காதலர்களை மாற்ற வைத்துள்ளனர். இதனால் வெளியில் திரிவதற்கே சங்கப்பட்டாராம். திட்டமிடாத சூட்டிங், திகதிகளில் குறுக்கீடு என ஏகப்பட்ட புகார் கூறுகிறார் ரச்சிதா. சரவணன் மீனாட்சி முடிந்தபோதுதான் மனதில் நிம்மதி ஏற்பட்டதென்கிறார்.



# வண்ணத் திரை

## திருமணம் பற்றி வரலட்சுமி

வரலட்சுமி, முதன் முறையாக தனது திருமணம் குறித்து வெளிப்படையாக பேசியிருக்கிறார். "திருமணம் மட்டுமே ஒரு பெண்ணின் இலக்கு இல்லை. அதையும் தாண்டி அவள் சாதிக்க வேண்டியதும், செய்ய வேண்டியதும் நிறைய இருக்கிறது. திருமணம் செய்து கொள்வதற்கு தகுதியான ஆண்மகனை சந்திக்க வேண்டும், சில காலம் அவரை காதலிக்க வேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகே திருமணம். அப்படியான ஒரு சூழல் வரும்போது கண்டிப்பாக எனது திருமணம் பற்றி வெளிப்படையாக அறிவிப்பேன். இப்போது கை நிறைய படங்கள் இருக்கிறது. மன நிறைவோடு நடித்துக் கொண்டிருக்கிறேன். ஒருபுறம் நடிப்பு, இன்னொருபுறம் பெண்களுக்கான பணி என எனது பாதையை தெளிவாக வகுத்துக் கொண்டிருக்கிறேன். பெண்கள் பாதுகாப்புக்கு என்ன வேண்டுமானலும் செய்வேன். அரசியலில் சேர்ந்தால் அதை செய்ய முடியும் என்றால் அரசியலிலும் குதிப்பேன்" என்றார்.

## திருமணத்தால் சீரியசான நடிகர்!

முண்டாசுப்பட்டி படத்தில் முனீஷ்காந்த் என்ற காமெடி வேடத்தில் நடித்து பிரபலமானவர் ராமதாஸ். அதையடுத்து தொடர்ந்து காமெடியனாக நடித்து வந்த அவர், சமீபத்தில் திரைக்கு வந்த ராட்சசன் என்ற படத்தில் சீரியசான போலீஸ் வேடத்தில் நடித்திருந்தார். இதுபற்றி ராமதாஸ் கூறுகையில், சினிமாவில் காமெடியனாகத் தான் நான் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானேன். எனது திருமணத்திற்கு பிறகு என்னை சீரியசான வேடங்களுக்கும் ஒப்பந்தம் செய்கிறார்கள். ஒருவேளை திருமணத்திற்கு பிறகு என்னை பார்க்க சீரியசாக தெரிகிறதோ என்னவோ தெரியவில்லை. நான் ராட்சசன் படத்தில் சீரியசான போலீசாக நடித்ததையும் ரசிகர்கள் ஏற்றுக் கொண்டார்கள் அதனால், இனிமேல் காமெடி மட்டுமின்றி வித்தியாசமான கேரக்டர்களிலும் நடிப்பேன் என்றார்.

## சம்பளம் வாங்காமல் நடித்த சூரி

பாலா இயக்கிய தாரைத்தப்பட்டை படத்தில் வில்லனாக நடித்தவர் தயாரிப்பாளர் ஆர்.கே.சுரேஷ். தொடர்ந்து வில்லனாக நடித்த அவர், தற்போது பில்லா பாண்டி படத்தில் நாயகனாக நடித்துள்ளார். இந்த படம் தீபாவளிக்கு வெளியாகிறது. ராஜ்சேதுபதி இயக்கியிருக்கிறார். அஜித்தின் ரசிகராக ஆர்.கே.சுரேஷ் நடித்துள்ள இந்த படத்தில் இந்துஜா, சாந்தினி மற்றும் தம்பிராமையா உள்பட பலர் நடித்துள்ளனர். சூரியும் ஒரு ரோலில் நடித்துள்ளார். இந்த படத்தில் நடிக்க அவர் சம்பளம் வாங்கவில்லையாம். பில்லா பாண்டி படப்பிடிப்பு தளத்திற்கு ஆர்.கே.சுரேஷை பார்க்க சென்றிருக்கிறார் சூரி. அப்போது அவரை நடிக்குமாறு கூற உடனே நடித்துக் கொடுத்துள்ளார். ஒரு கிராமிய பாடலில் அவருடன் இணைந்து சூரி சிறிது நேரம் நடனமாடியிருக்கிறார். ஒரேயொரு நாள் மட்டுமே நடித்த சூரி, அதற்காக சம்பளமே வாங்கவில்லையாம். நட்புக்காக நடித்துக் கொடுத்துள்ளாராம்.

## விஜயலட்சுமியின் புதுப்படம்!

வெங்கட்பிரபு இயக்கிய சென்னை 28 படத்தில் அறிமுகமானவர் விஜயலட்சுமி. இயக்குநர் அகத்தியனின் மகளான இவர், அதன்பிறகு பல படங்களில் நடித்தார். வெண்ணிலா வீடு படத்திற்கு பிறகு திருமணம் செய்து கொண்டார். வெங்கட்பிரபு இயக்கிய சென்னை 28 படத்தின் இரண்டாம் பாகத்திலும் நடித்தார். இந்தநிலையில், பிக்பாஸ்2 நிகழ்ச்சியில் பங்கேற்ற விஜயலட்சுமி, தற்போது வெங்கட்பிரபுவின் பிளாக் டிக்கெட் கம்பெனி தயாரிப்பில் சிம்புதேவன் இயக்கும் படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இந்த தகவலை தனது இணைய பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## மடோனாவிற்கு வாய்ப்பு வந்த கதை

2012ம் ஆண்டு எஸ்.ஆர்.பிரபாகரன் இயக்கத்தில், சசிகுமார் நடிப்பில் வெளியான படம் சுந்தர பாண்டியன். இந்தப் படத்துக்குப் பிறகு உதயநிதி நயன்தாரா நடித்த இது கதிர்வேலன் காதல், விக்ரம் பிரபு, மஞ்சிமா மோகன் நடித்த சத்ரியன் ஆகிய இரண்டு படங்களை இயக்கினார் எஸ்.ஆர்.பிரபாகரன். இந்த இரண்டு படங்களுமே எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. எனவே, மறுபடியும் தன்னுடைய முதல் பட ஹீரோவான சசிகுமாருடன் கொம்பு வச்ச சிங்கம்டா என்ற படத்தில் இணைகிறார் எஸ்.ஆர்.பிரபாகரன். சூரி, யோகி பாபு காமெடியன்களாக நடிக்கின்றனர். கதாநாயகியாக கீர்த்தி சுரேஷ் நடிக்க இருப்பதாக முதலில் தகவல் வெளியானது. அவர் அதிக சம்பளம் கேட்டதையடுத்து நிக்கி கல்ராணியை அணுகினார்கள். அவரை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யவிருந்த நிலையில் திடீரென மடோனா செபாஸ்டியனுக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. படத்தின் நாயகனான சசிகுமார், மடோனாவை ஒப்பந்தம் செய்ய சொன்னாராம். அதனாலேயே மடோனாவை ஒப்பந்தம் செய்ததாக கூறப்படுகிறது.



அஸ்மிதா

## இன்னும் பெயர் வரலாம்!

மீ டூ விவகாரம் தமிழ்த் திரையுலகத்தை பலமாக உலுக்கிக் கொண்டிருக்கிறது. வைரமுத்து மீது சின்மயி தொடர்ந்து அடுக்கடுக்கான பாலியல் குற்றச்சாட்டுக்களைக் கூறிக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஆதரவாக திரையுலகத்தில் ஒரு சிலர் குரல் எழுப்பி வருகிறார்கள். நடிகர் சித்தார்த்தும் மீ டூ குறித்து அவருடைய கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார். அதில், "கடலில் மீன் ஒன்று அழுதா, கரைக்கு செய்தி வந்து சேருமோ..?, மீ டூவுக்காக மேலும் ஒரு நாள் அமைதி. தமிழ் சினிமாவுக்கான நேரம் வந்துவிட்டது. மேலும், சில பெயர்கள் வெளிவரலாம், பார்ப்போம். இங்குள்ள முறைகள் மாற வேண்டும். அதற்கான வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக இடம்பெற வேண்டும். பாதுகாப்பான வேலை செய்யும் இடமாக உருவாக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

## பூர்ணாவின் திருமணம் தள்ளிப் போவது இதனால்தான்!

பூர்ணா, 2008ல் முனியாண்டி விலங்கியல் மூன்றாமாண்டு படத்தில் அறிமுகமானார். இப்போதுவரை கதையின் நாயகியாக அல்லது வில்லியாக என முக்கியமான கேரக்டர்களில் நடித்து வருகிறார். இவருக்குப்பின் சினிமாவுக்குள் வந்த பல நடிகைகள் திருமணம் குடும்ப வாழ்க்கை என செட்டிலாகிவிட்டனர். ஆனால் பூர்ணா தனது திருமண விஷயம் குறித்து இதுவரை பேசியதில்லை. சமீபத்தில் மலையாள சேனல் ஒன்றில் "என் அம்மா எனது திருமண பேச்சை எடுக்காத நாளில்லை. ஆனால் திருமணத்திற்கு எனது ஜாதி மிகப்பெரிய தடையாக இருக்கிறது. அதையும் மீறி சம்பந்தம் பேச வருபவர்களும், திருமணத்திற்குப்பின் நான் நடிப்பு, நடனம் ஆகியவற்றை விட்டுவிட வேண்டும் என்கின்றனர். காதல் திருமணம் என்றால் கூட அங்கேயும் இதுபோல எதிர்பார்ப்பு இருக்கத்தானே செய்யும். இதனாலேயே எனது திருமணம் தள்ளிபோகிறது" என்றார். இவரது நிஜப்பெயர் ஷாம்னா காசிம் என்பதும் இவர் இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## கொரியாவின் கதை #1

# யுத்தம் வளர்த்த ரத்தபூமி

*1. மூன்று முடி அரசுகள்!*

'குட்டிநாட்டில் அப்பன் மகன் அட்டகாசம்' என்று 1990களில் மாலை முரசு பத்திரிகை ஒரு கட்டுரைத் தொடர் வெளியிட்டது. அந்த நாடு வடகொரியா. அப்பா பெயர் கிம் இல் சுங். மகன் பெயர் கிம் ஜோங் இல்.

நிஜமாகவே அவர்கள் அட்டகாசம் செய்தார்களா? அப்படி செய்திருந்தால் 1948 தொடங்கி அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வடகொரியா இன்றுவரை போராடுகிறதே எப்படி?

வடகொரியாவை காணாமல் செய்துவிடுவோம் என்று அமெரிக்காவின் அதிபர்களாக பொறுப்பு வகித்த அனைவருமே மிரட்டியிருக்கிறார்கள். ரவுடி நாடு என்று முத்திரை குத்தி, அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க காரணமாக இருந்தார்கள்.

அவ்வளவு மிரட்டல்களையும், தடைகளையும் தாண்டி, இதோ, கிம் குடும்பத்தின் மூன்றாம் தலைமுறைத் தலைவரான கிம் ஜோங் உன் அமெரிக்காவை பாடாய் படுத்தி அதிபர் ட்ரம்ப்பை பேச்சுவார்த்தை டேபிளுக்கு அழைத்து வந்து ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இருக்கிறார்.

எல்லா தடைகளையும் மீறி, இரண்டு கொரியாக்களின் மக்களுடைய விருப்பம் நிறைவேறப் போகிறது. ஆம், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு இரண்டாக பிரிக்கப்பட்ட கொரியா மீண்டும் இணையப் போகிறது. இதற்கான முடிவை வடகொரியா அதிபர் கிம் ஜோங் உன் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

கொரியாவின் பூர்வோத்திரத்தை தெரிந்துகொண்டால் இன்றைய அதன் நிலைமையை புரிந்துகொள்ள எளிதாக இருக்கும்.

கொரியாவில் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே மனித இனம் வாழ்ந்ததற்கு ஆதாரம் இருப்பதாக கூறுகிறார்கள். எரிமலைக் குழம்பில் சிக்கிய மனித உயிர்களின் படிமங்கள் இருப்பதாகவும், நவீன மதிப்பீடுகளின் அடிப்படையில் அந்த படிமங்களின் காலம் 3 லட்சம் ஆண்டுகளாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.




சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மண்பாண்டங்களை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன.

பொதுவாக புராணக் கதைகளின்படி டங்கன் என்பவரால் கி.மு.2333 ஆம் ஆண்டு கோஜோசியோன் என்ற பேரரசை நிறுவினார் என்று கூறப்படுகிறது. சீனாவை ஆண்ட ஹான் பேரரசு, கோஜோசியோன் பேரரசை கிமு 108 ஆம் ஆண்டு கைப்பற்றியது. அதைத் தொடர்ந்து, கொரியாவின் வடக்குப் பகுதியில் நான்கு இடங்களில் அதிகார மையங்களை கட்டினார்கள். அவற்றில் லீலாங் என்ற இடத்தில் கட்டப்பட்ட அதிகார மையம் மட்டுமே இப்போதும் பாதுகாப்பாக இருக்கிறது.

கிபி.313 ஆம் ஆண்டுசீன ஆளுகைக்கு உட்பட்ட கொரியாவின் பகுதிகளை கோகுரியோ பேரரசு கைப்பற்றியது. இந்தப் பேரரசு வடக்கு மற்றும் மத்திய கொரியாவை உள்ளடக்கியதாக இருந்தது. கோகுரியோவின் தென் பகுதியில் பயேக்ஜே, ஸில்லா, கயா என்ற முடியரசுகள் இருந்தன.

காலப்போக்கில் மஞ்சூரியாவின் தென்பகுதியும் கொரியாவின் வடக்குப்பகுதியும் இணைந்த பகுதிகளில் ஏராளமான குட்டி அரசுகள் தோன்றின. இந்தக் காலகட்டத்தில் தென்கொரியாவில் சம்ஹன் ஆட்சிக்காலம் உருவானது. சம்ஹன் என்பது மஹன், ஜின்ஹன், பையோன்ஹன் ஆகிய மூன்று கூட்டமைப்பும் இணைந்த அரசாகும். மஹன் கூட்டமைப்பில் மொத்தம் 54 குட்டி அரசுகள் இருந்தன. மூன்று கூட்டமைப்பிலும் மொத்தமாக 78 குட்டி அரசுகள் இடம்பெற்றிருந்தன.

இந்த மூன்று கூட்டமைப்பும்தான் பயேக்ஜே, ஸில்லா, கயா என்ற முடியரசுகளாக அமைந்தன. ஆனால், இந்த மூன்றும் தென்னிந்தியாவில் இருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகளைப் போல அடிக்கடி தங்களுக்குள் சண்டையிட்டு வந்தன. இந்த மூன்று முடியரசுகளில் ஸில்லா மிகச் சிறியது. ஆனால், அரசியல் ரீதியாக தந்திரமாக செயல்படும். அது சீனாவை ஆட்சி செய்த டாங் பேரரசுடனும் கொரியாவின் சக்திவாய்ந்த முடியரசுகளுடனும் சந்தர்ப்பவாத உடன்படிக்கைகளை வைத்துக்கொள்ளும்.

கொரியா தீபகற்பத்தின் வடபகுதியான கோகுரியோ அந்தக் காலத்திலேயே ராணுவ பலமிக்க நாடாக இருந்திருக்கிறது. கிழக்காசியாவில் சக்தி வாய்ந்த அரசாக இருந்திருக்கிறது. வடக்கே மஞ்சூரியாவின் பெரும்பகுதியையும், மங்கோலியாவின் உள்பகுதிகளையும், ரஷ்யாவின் பகுதிகளையும், தெற்கே சியோல் பிரதேசம்வரை கோகுரியோ கைப்பற்றியிருக்கிறது. க்வான்கயேட்டோ தி கிரேட் மற்றும் அவருடைய மகன் ஜாங்சு ஆகியோர் காலத்தில் பலம்பொருந்திய நாடாக கோகுரியோ இருந்திருக்கிறது.

சீனாவின் பல பேரரசுகளுடன் கோகுரியோ போர் புரிந்திருக்கிறது. கோகுரியோ சூய் யுத்தம் இதில் குறிப்பிடத்தக்கது. 10 லட்சம்பேர் கொண்ட படையை கோகுரியோ தோற்கடித்தது. கி.பி.642 ஆம் ஆண்டு யியோன் கேயஸோமுன் என்ற ராணுவ தளபதி கோகுரியோவின் ஆட்சியை கைப்பற்றினார்.


இதையடுத்து, கோகுரியோ மீது சீனப்பேரரசர் டாங் டாய்ஸோங் யுத்தம் தொடுத்தார். ஆனால், சீனப் படைகளை கோகுரியோ மீண்டும் விரட்டியடித்தது. பேரரசர் டாங் மரணத்துக்கு பிறகு, அவருடைய மகன் டாங் கவோஸோங் கொரிய முடியரசுகளில் ஒன்றான ஸில்லாவுடன் கூட்டணி அமைத்து கோகுரியோவை தாக்கினார். அதுவும் தோல்வியில் முடிந்தது. சில காலம் கழித்து, தளபதி யியோன் காயேஸோமுன் மரணம் அடைந்தார். அதைத்தொடர்ந்து பதவிப்போட்டிகள் அதிகரித்தன. கோகுரியோ தனது பலத்தை இழந்தது. தளபதியின் மகன்களுக்கும், அவருடைய இளைய தம்பிக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. இதில், தளபதியின் மூத்த மகன் சீனப் பேரரசர் டாங் உடன் சேர்ந்துகொண்டார். தளபதியின் தம்பியோ, ஸில்லா முடியரசுடன் சேர்ந்துகொண்டார்.


இந்த இருவரும் சேர்ந்து கோகுரியோவை தாக்கினர். அதில் கோகுரியோ வீழ்ந்தது. கோகுரியோவை கைப்பற்றியவுடன் சீனப் பேரரசுடன்

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

# “என்னங்க... நான் லவ் பண்ண பொண்ணையே ராஜகுமாரனும் லவ் பண்ணிருக்காரு” புலம்பிய விக்ரம்!

## ரமேஷ் கண்ணா எழுதும் ‘திரையிடாத நினைவுகள் 9’








தமிழ் சினிமாவில் பெரும்பான்மையான ஹீரோக்களின் வெற்றி படிப்படியாக நடந்திருக்கும், ஆனால் தொடர்ந்து அதை நோக்கிய படங்கள் வந்துகொண்டிருக்கும். எம்.ஜி.ஆர், ரஜினிகாந்த், கமல்ஹாசன், இப்போ அஜித், விஜய், விஜய் சேதுபதி வரை அப்படித்தான். இவர்களுக்கு முதல் படத்திலேயே வெற்றி கிடைக்கல. அதே நேரம் சினிமா இவர்களை வெளியே அனுப்பிவிடவும் இல்லை. அப்பப்போ ஒரு வெற்றி, ஒரு முன்னேற்றம் என்று இப்போ இவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தார்கள். பெரும்பாலும் பின்னே செல்லும் நிலைமை ஏற்படவில்லை. இன்னொரு வகையாக, சிலருக்கு முதல் படத்திலேயே சிறப்பான அறிமுகம் கிடைத்து பெரிய வெற்றியும் அமைந்திருக்கும். சிவாஜி, கார்த்திக், கார்த்தி என இப்படியும் சிலர் இருக்காங்க. முதல் படமே நல்ல அறிமுகமாக அமைந்து அதன் பின் வெற்றி தோல்வி என மாறி மாறி வந்தாலும் நிலைத்துவிடுவார்கள்.

இந்த இரண்டுமே இல்லாமல், நாயகனாக அறிமுகமாகி அதுவும் ஸ்ரீதர் என்ற பெரிய இயக்குனர் படத்தில். பின் படங்கள் தோல்வியடைந்து, தொடங்கப்பட்ட படங்கள் கைவிடப்பட்டு, வாய்ப்பு கிடைக்காம, தொடங்கிய இடத்துக்கே திரும்ப வந்து, மற்ற ஹீரோக்களுக்கு டப்பிங் பேசி, இப்படி ஆகியும் விடாம முயன்று, ஒரு படத்தில் தன் நடிப்புத் திறமையை முழுமையாக வெளிப்படுத்தி, தொடர் வெற்றிகள் கொடுத்து, கமர்ஷியலாகவும் நம்பர் 1 ஹீரோவாகி, நடிப்புக்காக தேசிய விருது பெற்று, இன்னைக்கும் கதாபாத்திரத்துக்காக தன் உடலை



வருத்திக்கொள்ள, மாற்றிக்கொள்ள தயாராக என... இப்படி ஒரு கிராஃப் தமிழ் சினிமாவில் ஒரே ஒருத்தருக்கு மட்டும்தான் இருக்கு.

அவர் சீயான் விக்ரம்.

நான், வாழ்க்கையில ஒரு கட்டம் வரைக்கும் தோல்விகளை மட்டுமே பார்த்தவன். பாகுபலி 1ல ஷிவு அந்த மலை மேல ஏற முயற்சி பண்ணிப் பண்ணி கீழ விழுவது போல விழுந்தவன். எனக்கே ஒருவரின் தன்னம்பிக்கையைப் பார்த்து ஆச்சரியம் வருதுன்னா அது விக்ரமைப் பார்த்துதான். தமிழ் சினிமாவில், ஹீரோவா அறிமுகமாகி, பின்னாடி தோல்விகளால் வெளியே போய்ட்டு திரும்ப வந்து ஹீரோவாகவே இவ்வளவு பெருசா ஜெயிச்சவங்க யாருமில்லை.

புதுக்காவியம்... இது கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் விக்ரம் நடிப்பதாக இருந்த படம். ஆர்.பி.சௌத்ரி சாரின் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிப்பதாக இருந்தது. புதுவசந்தம், புரியாத புதிர்னு வெற்றிப் படங்களைக் கொடுத்திருந்தது சூப்பர் குட் ஃபிலிம்ஸ். இன்னொரு பக்கம் கே.எஸ்.ரவிக்குமார் புரியாத புதிர் வெற்றிக்குப் பிறகு இயக்கவிருந்தார். இப்படி எதிர்பார்ப்போட, நம்பிக்கையோட தொடங்க இருந்த இந்தப் படம், என் ராசியா இல்லை விக்ரம் ராசியானு தெரியல கைவிடப்பட்டது. அந்தப் படத்தில் நான் அஸோசியேட்டா வேலை பார்த்திருந்தா அப்போவே விக்ரம் கூட பணியாற்றி இருப்பேன். அந்த வாய்ப்பு பல வருடங்கள் கழிச்சு 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தில் அமைந்தது. ராஜகுமாரன் இயக்கத்தில் 'நீ வருவாய் என' வெற்றிக்குப் பிறகு வந்த படம். அதன் பிறகு இயக்குனர் சரண் காதல் மன்னன், அமர்க்களம் போலவே ஜெமினி படத்திலும் என்னை நடிக்க அழைத்தார். அதற்குப் பிறகு சாமி, இப்போ சாமி ஸ்கொயர் வரைக்கும் விக்ரம் கூட பணியாற்றுகிறேன், பழகுகிறேன்.

'விண்ணுக்கும் மண்ணுக்கும்' ஷூட்டிங் சமயத்திலெல்லாம் நாங்க ஒன்னாவேதான் இருந்தோம். எங்க கூடவேதான் தங்கினார், ஒன்னாவே தான் சில மாதங்கள் வாழ்ந்தோம். அந்தப் படத்தில் தேவயானிதான் ஹீரோயின். கதைப்படி தேவயானி நடிகை தேவயானியாகவே இருப்பாங்க, அவுங்கள ஒரு கிராமத்து இளைஞரான விக்ரம் லவ் பண்றார். படம் முடிஞ்சு தேவயானிராஜகுமாரன் காதல் விஷயம் வெளியே வந்து அவங்க திருமணம் செஞ்சப்போ விக்ரம் என்கிட்டே சிரிச்சுக்கிட்டே சொன்னார், "என்னங்க... 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' டைம்ல நான் மட்டும்தான் தேவயானியை லவ் பண்றேன்னு நெனச்சேன். நான் லவ் பண்ணுன தேவயானியை ராஜகுமாரனும்லவ்பண்ணியிருக்காரு" என்று.

'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படம் வெற்றி பெறவில்லை, ஆனால் தேவயானிராஜகுமாரன் காதல் வெற்றி பெற்றது. அந்தப் படத்தின் டைட்டிலே தங்கள் காதலை மனதில் வைத்துதான் ராஜகுமாரன் வைத்தார்னுலாம் பேசிக்கிட்டாங்க. அது உண்மையானு தெரியல, ஆனால் அவுங்க காதல் செய்தி வந்தபொழுது தமிழ்நாடே ஆச்சரியப்பட்டது உண்மை. யாருமே எதிர்பார்க்கல. அப்போ தேவயானி பெரிய ஹீரோயின், ராஜகுமாரன் ஒரு படம் மட்டுமே எடுத்த இயக்குனர். காதலே அப்படித்தானே? அதற்கு காரணம், தர்க்கம்லாம் இருக்கா என்ன? ஆனால், இன்று வரை அவுங்க ஒருவருக்கொருவர் பெரிய சப்போர்ட்டா சந்தோஷமா வாழுறாங்க, எனக்கும் அது ரொம்ப சந்தோஷம்.

விக்ரம், 'புதுக்காவியம்' டைம்ல இருந்த அதே மனநிலையில்தான் இப்பவும் இருக்கார். தன் தோல்விகளை எப்படி அமைதியாக, உறுதியாக தாங்கினாரோ வெற்றியையும் அப்படித்தான் பார்த்தார். "எப்போ நரைச்ச முடியை கிசர்ல கட் பண்ணுனாலும் எனக்கு உங்க ஞாபகம்தாங்க வருது"னு சொல்வார். நான் அதை ரெகுலரா செய்வேன். சின்ன விஷயத்தையும் கவனிச்சு, அதைத் தாண்டி அதை என்னிடம் சொல்லி, இதெல்லாம் விக்ரமின் அன்புக்கு அடையாளம். வெற்றியின் போதும் அதிக படங்கள் பண்ணி சம்பாரிக்கணும்னு அவசரமெல்லாம் படாம நல்ல படங்கள் செய்தார்.

சாமி ஸ்கொயர் படம் ஷூட்டிங்குக்குப் போனப்போ எனக்கு நரை முடி வைத்து வயசான கெட்அப். விக்ரம் என்னடான்னா இளமையாவே வந்தார். "என்னங்க இது அநியாயம், எனக்கு வயசாயிடுச்சு சாமிக்கு மட்டும் வயசாகாதா?"ன்னு கேட்டேன். "இல்லை சார், இது சாமி இல்லை, சாமியோட பையன். நீங்க சாமி ஃப்ரெண்ட் என்பதால 'அவருக்கு ஹெல்ப் பண்றீங்க"ன்னு டைரக்டர் சொன்னார். "அப்போ எனக்கும் பையன் கேரக்டர் வைங்க, நானும் இளமையா நடிக்கிறேன்"னு சொன்னேன். "சும்மா இருங்க நீங்க" என்று விக்ரம் சிரிச்சுகிட்டே சொன்னார். இப்படி, கொடுக்கல் வாங்கல் என்பது எங்க நட்பில் அன்பை மட்டும்தான். அதுனால ரொம்ப அக்கறையான, நல்ல நட்பா இருக்கு எங்களோடது. காதல் அப்படின்னா, நட்பு இப்படித்தானே. **(தொடரும்)**




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

என்னிடம் மருத்துவ ஆலோசனைக்காக வந்த தம்பதிக்கு திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தன. அவர்கள் மனதில் இருந்த விரக்தி முகத்திலும் படர்ந்திருந்தது. 'டாக்டர்... தாம்பத்யத்தில் ஒண்ணும் குறையில்லை. ஆனா, குழந்தையில்லை. வெறுப்பா இருக்கு' என்றார் கணவர். அந்தப் பெண்ணிடம் தனியாகப் பேசினேன். 'குடும்பத்தாரோடு கணவரும் சேர்ந்து தன்னை அவதூறாகப் பேசுகிறார்கள்' என்று சொல்லி அழுதார். கணவன், மனைவி இருவரையும் ஒன்றாக அமரவைத்து ஆலோசனைகள் கூறி அனுப்பிவைத்தேன்.

திருமணம் செய்துகொண்ட பிறகு நல்லதோ, கெட்டதோ எந்த சந்தர்ப்பத்திலும் தன் துணையை விட்டுக்கொடுக்கக் கூடாது. குழந்தையின்மை என்பது பொதுவான பிரச்னை. அதில் இன்பமோ, துன்பமோ எது வந்தாலும் இருவருக்கும் பங்குண்டு. இதற்காக ஒருவரை மட்டுமே குறை சொல்வது, அதற்காக அவரைப் பழிவாங்குவது, அவமானப்படுத்துவது நல்லதல்ல.

பொதுவாக, குழந்தை இல்லாவிட்டால் 'அதற்கு மனைவிதான் காரணம்' என்ற எண்ணம் பெரும்பாலான ஆண்களிடம் இருக்கிறது. இது தவறு. முதலில் மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்ய வேண்டும். கணவனும் மனைவியும் மனம்விட்டுப் பேசினால்தான் குடும்பத்தில் பிரச்னை ஏற்படாது. இந்த தம்பதியைப் பொறுத்தவரை குழந்தையின்மைக்குக் காரணம் ஆண்தான். ஆனால், அவர் மனைவி மீது பழிபோடுகிறார்.

ஆண்களைப் பொறுத்தவரை, உயிரணுக்களின் உற்பத்தி நன்றாக இருக்க வேண்டும். எத்தனை நாளைக்கு ஒரு முறை தாம்பத்யம் வைத்துக்கொள்கிறார்கள் என்பதும் முக்கியம். இவை தவிர, ஒரு பெண் கர்ப்பம் தரிக்க 20 மில்லியன் உயிரணுக்கள் தேவைப்படும். தாம்பத்யம் உணர்வுபூர்வமாக இருக்க வேண்டும். உடலியக்கம் (Movement) சரியாக இருக்க வேண்டியதும் அவசியம். ஆண்களுக்கு, தாம்பத்யக் குறைபாடு ஏற்பட, விதைப்பையில் ஏற்படும் பாதிப்புகள் முக்கியக் காரணங்களாக இருக்கின்றன. விதை சேதமடைந்திருந்தாலோ, காயம்பட்டிருந்தாலோ அது குழந்தைப்பேற்றைப் பாதிக்கும். சிலருக்கு பிறவிக்கோளாறு (Hypospadias) காரணமாக ஆணுறுப்பு வளைந்து இருந்தால் தாம்பத்யத்தில் முழுமையாக ஈடுபட முடியாது. அவர்களுக்கு விதை சற்றுக் கீழிறங்கி காணப்படும். இதன் காரணமாக உயிரணுக்கள் உற்பத்தியாகாது.

கன்னத்தில் ஏற்படும் புட்டம்மை காரணமாகவும், கொனோரியா போன்ற (Gonorrhea) பால்வினை நோய்கள் காரணமாகவும்கூட உயிரணுக்கள் உற்பத்தியாவதில் பிரச்னை ஏற்படும். முறையான சிகிச்சை பெற்றால் இவையெல்லாம் ஒரு வாரத்தில் சரியாகிவிடும். ஆனால், தகுதியான மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற வேண்டும். பாலியல் மருத்துவத்தில் ஏராளமான போலிகள் ஊடுருவிவிட்டார்கள். அதனால் கவனம் தேவை.

அதிக வெப்பமுள்ள இடங்களில் வேலை செய்பவர்களுக்கு விதைகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இறுக்கமான ஜீன்ஸ் பேன்ட் அணிவது, டெனிம் வகை ஆடைகள் அணிவதைத் தவிர்க்க வேண்டும். இன்றைக்கு இளைஞர்கள் ஜீன்ஸ் அணிந்தபடியே தூங்குகிறார்கள். அது தவறு. இரவில் ஜீன்ஸ் அணியக் கூடாது. உறங்கும்போது உடைகள் தளர்வாக இருக்க வேண்டும். கொட்டன் ஆடைகள் அணியலாம். சாரம், வேட்டி, பிஜாமா நல்லது.

**(இன்னும் கற்றுத் தருகிறேன்...)**


---

13-ம் பக்க தொடர்ச்சி...

போலீஸ் ஸ்டேஷனுக்கு அறுபதாயிரம், எழுபதாயிரம் மாமூல் வெட்டுவேன். ஒவ்வொரு போலீஸ்காரரும் வாங்கற சம்பளத்தை விட, ரெண்டு மடங்கு தொகை நான் தருவேன். அந்த ஸ்டேஷனைப் பொறுத்தமட்டிலும் நான்தான் கவர்மெண்ட். ஏட்டு, ரைட்டர், எஸ்.ஐ., இன்ஸ்பெக்டர், எஸ்.பின்னு... அத்தனை பேருக்கும் 'கட்டகரி'யைப் பொறுத்து சம்பளம் தந்தேன்.

நான் ஸ்டேஷனுக்குப்போய் மாமூல் கட்டின நிலைமாறி, என்னைத்தேடி வரும்படி வச்சேன். வீடு தேடி வர ஒவ்வொரு போலீஸ்காரரும், ஐ.ஜி.க்குத் தர்ற மரியாதையை எனக்குத் தந்தாங்க. சோபாவிலே கால் மேல கால் போட்டு தர்பாரா உட்கார்ந்திருப்பேன். இடப் பக்கம் வாள் சொருகிக்காத இளவரசன் கணக்கா செம பந்தா! கையிலே விஸ்கி கிளாஸ் வேற... கைகட்டி, வாய் பொத்தி நிப்பாங்க சுகுமாரும், மற்ற போலீஸூம். திருவான்மியூர்லே கொடிகட்டிப் பறந்தேன்.

சாராயத்தை ஒரு இடத்திலே கொடுத்துட்டு வியர்வையும் களைப்புமா திரும்பி வந்திருந்தேன். தம்பி



மோகன் வந்து, யாரோ எனக்காக ரொம்ப நேரமா காத்திருப்பதாகச் சொன்னான். போய்ப் பார்த்தேன். அவன் எழுந்து நின்றான். அப்ப மெட்ராஸ்லே இருந்த பெரிய பெரிய தாதாக்கள் பேரெல்லாம் சொன்னான். பேரைக் கேட்டாலே நான் மிரளுகிற பெயர்கள். அவர்களெல்லாம் தனக்கு மிகவும் நெருக்கமென்றான்.

"நீங்க என்னைப் பார்க்க வந்திருக்கிற காரணம்?"

"இந்த வட்டாரத்திலேயே நீங்கதான் பெரிய சாராய வியாபாரின்னு சொன்னாங்க... அதான் பார்த்துட்டு போகலாம்னு வந்தேன்! நான் உங்களுக்கு ரொம்ப உபயோகப்படுவேன்!"

"எப்படி?"

அவன் சொன்ன பதில்கள்ல எனக்கு செம அதிர்ச்சி. கொஞ்சம்கூட எதிர்பாராத மிருகத்தனமான யோசனைகள் சொன்னான் அவன்.

"இப்படி மனிதாபிமானமில்லாம இருக்கீங்களே"ன்னு சொல்லிட்டு சிரிச்சேன்.

நான் செய்த சாராய வியாபாரம் ஒன்றும் புனிதமான பணி இல்லே! அதே சமயம் சன்னமா ஒரு தொழில்தர்மம் வச்சிருந்தேன் நான்.

ரெண்டு பேரோட குணமும் பொல்லாததுதான்! அதே சமயம் நான் திருட்டுத்தனமா மாட்டுகிட்டேயிருந்து பாலை கறந்தேன்... அவன் கழுத்தை அறுத்து ரத்தத்தைக் கறந்தான்னு சொல்லலாம். விரிவா எல்லாத்தையும் பின்னாலே சொல்றேன். பேரைக்கேட்டேன். "பாபு"ன்னு சொல்லி சிரிச்சுகிட்டே கை குலுக்கினவன் மெல்ல "என் மேலே ஒரு கொலைக் கேஸ்... நடந்துக்கிட்டிருக்கு" என்றானே பார்க்கலாம். பதறிப் போனேன். "கொ...கொலை....கேஸா?" எனக்குக் குலை நடுங்கியது.

பின்னாளில் என் மீதே ஆறு கொலைகள் பண்ணினதா கேஸ் வரப்போகுது, அதற்கு இந்த பாபுதான் அப்ரூவராகி எனக்கெதிரா சாட்சி சொல்லுவான்னு அப்ப சுத்தமா எதிர்பார்க்கல! **(தொடரும்)**

# ஜெர்மனியின் மிகப் பெரும் கொலையாளி


ஜேர்மனியைச் சேர்ந்த ஆண் செவிலியான நில்ஸ் ஹோகல் 2005இல் ஒருநோயாளிக்கு மருத்துவரால் அனுமதிக்கப்படாத மருந்து ஒன்றைக் கொடுக்கும்போது சக மருத்துவமனை ஊழியர் ஒருவராக கவனிக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டார். அது நோயாளியின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய மருந்தென்பதால் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஏழரை வருடச் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது.

அதே மருத்துவமனையில் தனது தாய் சந்தேகத்துக்கு இடமான முறையில் இறந்துவிட்டதாகச் சந்தேகப்பட்ட ஒரு பெண்மணிக்குள் நில்ஸ் அந்த மரணத்திற்கும் காரணமாக இருக்குமோ

உலக யன்னல்

தேசமித்ரன்

என்ற கேள்வி எழவே அவர் அதுபற்றி அதிகாரிகளிடம் கேள்விகளை எழுப்ப ஆரம்பிக்கவே இறந்து அடக்கம் செய்யப்பட்ட அவரது தாயாரின்



உடல் வெளியெடுக்கப்பட்ட மீண்டும் ஆராய்ந்ததில் அது ஒரு கொலை என்று தெரியவந்தது. இதனால் நில்ஸ் ஹோகல் வேலைசெய்த இடங்களில் நிகழ்ந்த சந்தேகத்துக்குரிய மரணங்களைப் பற்றி ஆராயும்படி பல உறவினர்கள் குரலெழுப்பவே அதிகாரிகள் அதைச் செய்தனர்.

*1999 - 2005* காலத்தில் நில்ஸ் வேலை செய்த அவசரச் சிகிச்சை மருத்துவ மனைகள் இரண்டிலும் பல முதியவர்களுக்கும், பலவீனமான இருதயமுள்ளவர்களுக்கும் நில்ஸ் இருதய இயக்கத்தைத் தாக்கும் மருந்தொன்றைக் கொடுத்துவிட்டு அவர்கள் கடுமையாகச் சுகவீன முற்றதும் அவர்களைக் காப்பாற்றுவது போலப் போராடிப் பலரின் கவனத்தையும் கவர்ந்து வந்தது தெரிய வந்தது. அவரது நடத்தைகளில் சந்தேகமடைந்து வேலையிலிருந்து அவரை விலக்கிய மருத்துவமனைகளோ அவருக்கு நல்ல பாராட்டுப் பத்திரங்கள் வழங்கி வந்திருந்ததால் இன்னொரு மருத்துவமனையில் வேலை பெறுவது நில்ஸுக்கு இலகுவாக இருந்தது.

புதிய கொலைகள் கண்டுபிடிக்கப் பட்டதால் 2015 இல் மீண்டும் வழக்கொன்று நடாத்தப்பட்டு 5 கொலைகளுக்காக நில்ஸுக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன் நில்ஸ் வேலைசெய்த இடங்களில் நில்ஸ் கவனித்த நோயாளிகளில் இறந்தவர்கள் அத்தனை பேரின் மரணங்கள் பற்றியும் ஆராய்வது ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாரத்தில் நில்ஸ் மீதான மூன்றாவது வழக்கு நடக்கவிருக்கிறது. மொத்தமாக 99 கொலைகளுக்காக வழக்கு நடக்கவிருக்கிறது. ஜெர்மனியின் சரித்திரத்திலேயே எந்த ஒரு தனி நபர் மீதும் இத்தனை கொலைகளுக்காக வழக்கு நடாத்தப்படவில்லை. இதே சமயத்தில் உண்மையில் நில்ஸ் கொலைசெய்தவர்களின் எண்ணிக்கை சுமார் 300 வரை இருக்கலாம் என்று கணிக்கப்பட்டு மேலும் விசாரணைகள் நடாத்தப்படுகின்றன.

இப்போது 41 வயதான நில்ஸ் ஹோகல் வேலை செய்த மருத்துவப் பகுதிகளில் எப்போதுமே இறப்பவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கிறது. ஆனாலும், அதை அதிகாரிகள் உன்னிப்பாகக் கவனிக்காததையிட்டும் விமர்சனங்கள் எழுப்பப்படுகின்றன. எவரும் காணாத நேரத்தில் நோயாளிகளுக்கு ஆபத்தான இருதய மருந்தைச் செலுத்திவந்த நில்ஸின் நோக்கம் கொலைசெய்வதல்ல, என்கிறார்கள் அவரை விசாரித்த மனோதத்துவ ஆராய்வாளர்கள். குறிப்பிட்ட மருந்தால் நோயாளி அவஸ்தைப்படும்போது அவரைக் காப்பாற்றுவதுபோலப் போராடிப் பலரின் கவனங்களையும் ஈர்ப்பது நில்ஸுக்கு ஒரு போதையாகிவிட்டது என்கிறார்கள் அவர்கள்.

## விசாரணைகளில், பலஸ்தீனச் சித்திரவதைகள்

பலஸ்தீன ஆட்சி அதிகாரமும், ஹமாஸ் இயக்கத்தினரும் தமது மக்கள் மீது பலாத்காரத்தையும், திட்டமிட்ட சித்திர வதைகளையும் மேற்கொள்வது வாடிக்கையானது என்று ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு ஆதாரங்களுடன் அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது.

ஹமாஸ் தான் அதிகாரத்திலிருக்கும் காஸா பகுதியில் பலஸ்தீன அதிகாரத்திலிருக்கும் அல் பத்தா இயக்கத்துக்கு ஆதரவானவர்கள் என்று கருதப்படுகிறவர்களைக் கைது செய்து சித்திரவதை செய்ய, பலஸ்தீன அதிகாரமோ தான் ஆட்சியிலிருக்கும் பகுதியில் ஹமாஸ் இயக்கத்தினரின் ஆதரவாளர்கள் என்று கருதப்படுகிறவர்களைச் சித்திரவதை செய்கிறது. பலஸ்தீன அதிகாரம் மட்டுமே 2017 முதல் 37 பத்திரிகையாளர்களைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருக்கிறது.

பலஸ்தீனப் பத்திரிகையாளர் தாரிக் அபுஸாய்த் அவர்களில் ஒருவர். பலஸ்தீன அதிகாரத்துக்குள் இருக்கும் நப்லுஸ் நகரில் வசிக்கும் இவர் ஹமாஸ் இயக்கத்தின் தொலைக்காட்சி சேவையான அல் அக்சாவின் பத்திரிகையாளர். இவரை பலஸ்தீன அரசு நான்கு தடவைகள் கைதுசெய்திருக்கிறது.

தான் பலஸ்தீன அதிகார இரகசியப் பொலீஸால் கைதுசெய்யப்பட்டபோது எப்படியெல்லாம் சித்திரவதை செய்யப் பட்டிருக்கிறார் என்பதை விபரித்திருக்கிறார் அதனால் உண்டான விளைவுகளை ஹுயூமன் ரைட்ஸ் வாட்ச்சும் பரிசீலித்திருக்கிறது. கைது செய்யப்பட்டவர்களை வழக்கத்துக்கு மாறான வகைகளில் நிலத்தில் இருக்கவைத்துக் கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்திக் கட்டிவிட்டு மின்சாரத் தாக்குதல்கள் உட்பட்ட பல விதங்களில் தாக்குவது அவர்களது வழக்கம் என்கிறார் தாரிக். "இனிமேல் உன்னால் ஒழுங்காக உன் மனைவியைத் திருப்திசெய்ய முடியாது," என்று சொல்லித் தன் ஆண்குறியைக் குறிவைத்துத் தாக்கியதையெல்லாம் விபரித்திருக்கிறார் 42 வயதான தாரிக்.

தொடர்ந்தும் வழக்கம்போல பலஸ்தீன அதிகாரத்தின் அரசியல் நடவடிக்கைகளை விமரித்து வரும் தாரிக் தன்னை அவர்கள் மீண்டும் கைதுசெய்து சித்திரவதைக்கு உட்படுத்தக்கூடும் என்று அஞ்சினாலும் தான் தனது விமர்சனங்களை நிறுத்தப்போவதில்லை என்கிறார்.



## ஐ.நா-வின் இன்னொரு பல்லில்லாத புலி




சரித்திரம் காணாத நிகழ்வு என்று ஐக்கிய நாடுகள் சபையால் விபரித்து விளம்பரம் செய்யப்பட்ட குடிபெயர்பவர்கள்–அகதிகள் சம்பந்தமான மாநாடு [மார்கழி 11] நடக்க ஒரு மாதத்தின் முன்னரே அங்கத்துவ நாடுகள் சில அதிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக அறிவிக்கின்றன.

தமது நாடுகளைவிட்டுக் குடிபெயர்ந்து வருகிறவர்கள் இன்னொரு நாட்டுக்கு பல நன்மைகளைக் கொண்டுவருவார்கள் என்ற அடிப்படைக்கருத்துடன் திட்டமிடப்பட்ட இந்த மாநாட்டில் இருந்து ஆரம்பத்திலேயே ஐக்கிய அமெரிக்காவும், ஹங்கேரியும் விலகிக்கொண்டன. இப்போது ஆஸ்திரியா, போலந்து, செக் குடியரசு ஆகிய நாடுகளும் தாம் விலகிக்கொள்ளச் சிந்திப்பதாக அறிவிக்கின்றன. டென்மார்க் இன்னும் கலந்துகொள்வதா இல்லையா என்று முடிவுசெய்யவில்லை.

ஒப்பந்தமொன்றில் கையெழுத்திட முன்னரே அதிலிருந்து சிலர் விலகிக்கொள்வது என்பது ஒப்பந்தத்தைப் பேரம் பேசுபவருக்குக் கிடைக்கும் பலத்த அடி என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னரே பெருமளவு தயாராகியிருக்கும் குடிபெயர்பவர்களைக் கையாளுதல் பற்றிய ஒப்பந்தம் அதில் கைச்சாத்திடுபவர்களைக் கட்டாயப்படுத்துவதாக அமையவில்லை. 23 முக்கிய குறிக்கோள்களைக் குறிப்பிட்டு அவைகளை நிறைவேற்ற எதிர்காலத்தில் முடிந்தளவு முயற்சிசெய்யவேண்டும் என்று குறிப்பிடுகின்றது ஒப்பந்தம்.

அகதிகளின் உரிமைகளைப் பேணி நிலைமையைச் சீர்ப்படுத்துதல், எல்லைப் பாதுகாப்பு, மனிதக் கடத்தல்காரர்களைச் செயற்படாமல் செய்தல், தமது நாட்டிலிருக்கும் போர் போன்றவைகளால் வெளியேறுபவர்கள் மனிதக் கடத்தல்காரர்களின் வலைகளில் சிக்காமல் புதிய நாடுகளுக்கு வரக்கூடிய சட்டபூர்வமான வழிகளை உண்டாக்குதல் போன்ற எதிர்காலக் குறிக்கோள்களை இந்த மாநாட்டில் குறிப்பிட்ட நாடுகள் ஏற்றுக்கொள்ளவிருக்கின்றன.

ஒப்பந்தத்தின் வரிகள் அதில் கையெழுத்திடும் ஒவ்வொரு நாடுகளும் தமக்கு ஏற்றபடி புரிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், போலந்து அவை தமது நாட்டின் குடிமக்களின் பாதுகாப்புக்கு ஒவ்வாமல் இருப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பல பல்லில்லாத புலிகள் போன்ற திட்டங்கள் போலவே இந்த ஒப்பந்தமும் வெறும் காகிதப்புலியாக ஆகிவிடும் ஆபத்து இருக்கிறது.





# காட்டுப் பிரதேசத்தில் நிறைவடைந்த பயணம் 16

களைப்புடன் நடுநிசியில்தான் தூங்கப் போயிருந்தாலும் காலையில் ஏழு மணியளவிலேயே எழும்பிவிட்டேன். ஆழமான நித்திரையிலிருந்த கதிரை எழுப்ப விரும்பவில்லை. மெதுவாக வெளியே வந்து தங்கியிருந்த வீட்டு வராந்தாவுக்கு வந்தேன். நேற்றிரவு எதையுமே கவனிக்க முடியாதபடி இருட்டாகவும், களைப்புடனும் இருந்ததால் நாங்கள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றி எப்படியிருக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் நிறையவே இருந்தது.

அந்த நேரத்திலும் அப்பகுதியெங்கும் பனி மூட்டத்துக்குள் இருந்தது. வீட்டைச் சுற்றிப் பெரிய முற்றம். முற்றத்தில் நிறையப் பூச்செடிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒரு பகுதியில் உயரமாக வளர்ந்திருந்த பூக்கும் கொடிகள் டிகளை அழகாகப் பந்தலாக அமைத்து அதன் கீழே இருக்க கதிரை, மேசைகள் வைக்கப்பட்டிருந்தத. உயரமான மரமொன்றில் பிள்ளைகள் ஆடுவதற்கான ஊஞ்சலும் கட்டப்பட்டிருந்தது. வீட்டுக்கு வெளியே ஒரு மண் பாதைதான் போனது. அதுதான் தூரத்தில் பிரதான வீதிவரை போகிறது என்று புரிந்துகொண்டேன். பக்கத்தில் வீடுகள் எதையும் காணமுடியவில்லை. வெளியே போகும் பாதையின் இருபக்கங்களிலும் அப்பிள், பேரை போன்ற மரங்கள் வைக்கப்பட்டிருந்தது. மொத்தத்தில் அந்த வீடு ஒரு அழகான கன்வுலகத்துக்குள் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்கியது.

அழகாக வெட்டப்பட்டிருந்த தோட்டத்துப் புற்றரையில் வெறுங் காலுடன் நடக்கும்போது சுகமாக இருந்தது. வீட்டிலிருக்கும் மற்ற அறைகளில் ஒன்றிலிருந்து சுற்றுலாப் பயணிகள் சிலர் வாசலிலிருந்த தங்கள் கார்களுக்குள் தமது பயணப் பொதிகளை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களது காரின் இலக்க அட்டையிலிருந்து அவர்கள் நெதர்லாந்திலிருந்து வந்தவர்களென்று புரிந்துகொள்ள முடிந்தது. தங்கள் அறையைக் காலை செய்துவிட்டுக் காலையிலேயே புறப்பட்டுத் தங்கள் அடுத்த சுற்றுலா நகருக்குப் போகிறார்கள். அவர்களது வாகனம் அவ்விடத்தை விட்டு அகன்றபின் மீண்டும் அழகான கானக நிசப்தம் அப்பிரதேசத்தில் நிலவியது.

பனிப்படலத்துக்கு ஊடாக வெயில் மெதுவாக வெட்டிக்கொண்டு பரவ ஆரம்பிக்கும்வரை ரசித்துக்கொண்டிருந்தேன். அப்போது நிக்கோ தனது காரில் வீட்டு வாசலில் வந்திறங்கினார். வணக்கம் சொல்லிக்கொண்டு, கையில் நிறைந்த ஒரு பிரம்புக் கூடையுடன் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்தார். அதைச் சமையலறைக்குள் வைத்துவிட்டு என்னருகில் வந்தார்.

"காலை உணவு எல்லோருக்கும் கொண்டுவந்திருக்கிறேன், நீங்கள் எப்போ வெளியே போகிறீர்கள்?, என்றார். அவரிடம் அப்பகுதியில் இருக்கும் வசதிகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியிருந்தது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி அது ஒரு காட்டுப்பகுதி. அரசினால் பாதுகாக்கப்படும் காட்டுப்பகுதி என்பதால் அப்பகுதியில் அதிக வசதிகள் இல்லை. ஆங்காங்கே நாங்கள் இருந்ததுபோன்ற சிறிய விடுதிகள் இருந்தன. அங்கே தங்குகிறவர்கள் தங்களுடன் வாகனங்களைக் கொண்டுவந்து அங்கிருந்த தேசிய வனத்தைப் பார்க்கப் போவதுதான் வழக்கம். நாங்கள் விசயம் தெரியாமல் பொதுப் போக்குவரத்தைப் பாவித்து அங்கு வந்திருந்தோம். அவ்வழியோ மணிக்கொருமுறை போகும் பேருந்துகளில் தான் நாங்கள் எங்காவது போகவேண்டும். ஒரு கடையும், அதையடுத்து ஒரு உணவுச்சாலையும் அவ்விடுதியிலிருந்து சில கி.மீற்றர்கள் தூரத்தில் பிரதான சாலையோரமாக இருந்தது.

கடைக்குப் போய் ஏதாவது வாங்கிக்கொண்டு வருவதானால் எங்களைக் கூட்டிப் போவதாகச் சொன்னார் நிக்கோ. அந்த உதவி எங்களுக்குத் தேவையாக இருந்தது. மற்றப்படி பிரதான வீதிவரை நடந்து போய் அவ்வழியே போகும் வாகனங்களில் உதவி கேட்டால் பிளிட்வீட்சே தேசிய வனத்தைப் பார்க்கப் போகலாம் என்று நிக்கோ சொன்னார். அவ்வனத்துக்குப் போகப் பேருந்த வசதிகள் இருப்பினும் அதைப் பாவிப்பதை விடத் தனியார் வாகனங்களில் உதவி கேட்பது இலகுவானது என்றார் அவர்.

கதிர் எழும்பி வந்தபின் இருவரும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காலையுணவைச் சாப்பிட்டோம். அதன் பின்பு நாங்கள் தங்கியிருந்த சுற்றுப்புறத்தை அறிமுகப்படுத்திக்கொள்ள வெளியே நடந்து வரப் புறப்பட்டோம். பனியெல்லாம் சூரியக்கதிர்களால் கரைக்கப்பட்டிருந்தன. எங்கள் விடுதிக்கு வெளியே இருந்த மண்வாசனை வீசும் வீதியில் நடந்தோம்.


எங்கே நோக்கினாலும் பச்சைப் பசேலென்று இருந்தது. அப்பிள், பேரை, பீச் பழ மரங்கள் சாலையின் இரண்டு பக்கங்களிலும் ஆங்காங்கே பழுத்துத் தொங்கின. அவைகள் யாரும் பறிக்க இல்லாததால் அணில்களும், பறவைகளும்தான் கொத்திக் கொண்டிருந்தன. அடர்ந்த காட்டுப் பகுதிகளின் எல்லைகளிலோ பிளாக்பெரி பழங்கள் செடிகள் நிறையப் பழுத்துக் கிடந்தன. சுவீடனில் நாங்கள் வாழும் பகுதிகளில் பிளாக்பெரி பழங்கள் இல்லாததால் நாங்கள் அப்பழங்களைச் செடிகளில் முதன்முதலாகக் கண்டோம். கதிர் கைகள் நிறைய அப்பழங்களைப் பிடுங்கி வாயில் திணித்துக்கொண்டிருந்தார். காட்டுப் பழங்கள் எப்போதுமே ருசியானவை. அவை நல்ல இனிப்பாகவும் இருந்தன. உயரமாக வளர்ந்திருந்த அப்பிள் மற்றும் மரங்களிலும் ஏறி மகிழ்ந்தான் கதிர்.

எப்போதாவது ஒரு வாகனம் எங்களைக் கடந்துபோனது என்பதைத் தவிர எவ்வித இடையூறுமில்லாமல் அனுபவிக்கக் கூடிய சூழலில் ஓரிரு மணிகள் கழிந்தன. பழங்களை வயிறு நிறையச் சாப்பிட்டதில் பசியோ, நேரம் போனதோ தெரியவில்லை.

அதையடுத்து எங்கள் கருத்தைக் கவர்ந்தது காட்டுப் பகுதியின் ஊடாக ஓடிய அருவியொன்று. தூரத்திலிருக்கும் பிரதான வீதியில் இருந்து கவனித்தால் தெரியாத வகையில் இருந்த அந்த அருவியில் குடும்பம் ஒன்று மட்டும் நீந்திக் குளித்துக்கொண்டிருந்தது. பளிங்கு நிறத்தில் கூழாங்கற்கள் உள்ள நிலப்பிரதேசத்தின் ஊடாக ஓடிக் கொண்டிருந்தது அந்த அழகிய அருவி.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# தென்மராட்சியில் தொழில்நுட்ப கல்லூரி



மீசாலையில் தொழில்நுட்பக்கல்லூரி அமைக்கப்படுவதற்கு இதுவரை நிலவி வந்த சட்டரீதியான குழப்பங்கள் தீர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம், மீசாலையில் விரைவில் தொழில்நுட்பக்கல்லூரி அமையுமென எதிர்பார்க்கலாம்.

யாழ் மாவட்டத்தில் வருடாந்தம் சுமார் 8,000 மாணவர்களிடமிருந்து தொழிற் பயிற்சி விண்ணப்பங்கள் கிடைக்கிறது. ஆனால் யாழ் தொழில்நுட்ப கல்லூரியில் 1,500 மாணவர்களே கல்வி கற்க வசதியுள்ளது. இந்த குறை பல தரப்பாலும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, தொழில்நுட்பக்கல்வி பயிற்சி திணைக்களம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தியது.

தொழில்நுட்பக்கல்வி பயிற்சி திணைக்களத்தன் பணிப்பாளர் நாயகம் பி.என்.கே.மலலசெகரவால் இந்த வருடம் ஜனவரி மாதத்தில் சாவகச்சேரி பிரதேச செயலாளரிற்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தது. அதில் மீசாலையில் தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு முறைப்படியான அனுமதியை பெற்றுத் தருமாறு கோரப்பட்டிருந்தது. இந்த விடயத்தை உடனடியாக எழுத்து மூலம் பாடசாலைக்கு அறிவித்தார் பிரதேச செயலாளர்.

பாடசாலைக்கு சொந்தமான காணியை தொழில்நுட்ப கல்லூரி அமைக்க வழங்குவதை பற்றி பாடசாலை அறங்காவலர்சபை கூடி விவாதித்து, காணியை வழங்க சம்மதித்தது. கடந்த மார்ச் மாதம் தமது சம்மதத்தை, வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பினார்கள். மாகாண பணிப்பாளரின் சிபாரிசுடன், மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டது. ஆனால் ஏனோ கல்வியமைச்சு இந்த விடயத்தில் நீண்ட இழுபறியை ஏற்படுத்தியது. கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் தேங்கி கிடந்தது இந்த விடயம்.

560 மில்லியன் ரூபா மதிப்பில் 2020ஆம் ஆண்டுக்குள் அமைத்து முடிக்கப்பட வேண்டிய திட்டம் இது. மாகாண கல்வியமைச்சின் இழுபறியால் இந்த விவகாரம் நிறைவேறாமல் செல்லும் அபாயமிருந்தது.

இந்த நிலையில், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெயசேகரன் இந்த விடயத்தில் தலையிட்டிருந்தார். மாகாணசபை அமர்வில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். பின்னர் வடக்கு கல்வியமைச்சின் செயலாளரிடம் நேரில் சென்று, நிலைமையை சுட்டிக்காட்டி, அவசரமாக அனுமதி கொடுக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். இதன் பின்னரே வடக்கு கல்வியமைச்சு துரிதமாக செயற்பட்டு, காணியை விடுவிக்கும் அனுமதி கடிதத்தை பிரதேச செயலாளரிற்கு அனுப்பி வைத்துள்ளது.

விரைவில் மீசாலையில் தொழில்நுட்ப கல்லூரி அமையும் பணிகள் ஆரம்பிக்குமென எதிர்பார்க்கலாம்.

# தமிழ் மக்கள் பேரவைக்குள் அதிருப்தி!



முன்னாள் வடக்கு முதலமைச்சர் தனிக் கூட்டணியொன்றை அண்மையில் அறிவித்தார். தமிழ் மக்கள் கூட்டணியென்பது அதன் பெயர். தெற்கு அரசியல் குழப்பங்கள் ஏற்படும் வரை இலங்கை அரசியலில் அதிகம் பேசப்பட்ட விவகாரம் இதுதான்.

இந்த விவகாரத்தில் அதிகம் வெளிவராத சங்கதிகள் சில உள்ளன. அவற்றை வாசகர்களிற்காக தருகிறோம்.

முதலமைச்சரின் தனிக் கூட்டணி அறிவித்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை. இன்னும் சரியாக சொன்னால், புறக்கணித்தது என்றும் சொல்லலாம்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை அன்றைய கூட்டத்திற்கு அழைத்து வருவதற்கு தமிழ் மக்கள் பேரவையின் வைத்தியர்கள் பகீரத பிரயத்தனத்தில் ஈடுபட்டனர். கூட்டத்திற்கு முதல்நாள் இரவுவரை முயற்சிகளை செய்தார்கள். ஆனால், முன்னணி அசைந்து கொடுக்கவில்லை. ஆரம்பக் கூட்டத்திற்கே முன்னணி வராவிட்டால் மக்களிடம் அவநம்பிக்கை ஏற்பட்டு விடும் என பேரவை தரப்பினர் கூறினார்கள். ஆனால் முன்னணி ஏற்கவில்லை. "கூட்டத்தில் விக்னேஸ்வரன் என்ன பேசப் போகிறார் என்பது எமக்கு தெரியாது. எதையும் தெரியாமல் எப்படி வந்து கூட்டத்தில் அமர்வது? அவர் எமது கொள்கைக்கு உடன்பாடில்லாத ஒரு விசயத்தை பேசிவிட்டால், அரங்கில் இருக்கும் நாமும் அதை ஆமோதிப்பதாக அமைந்து விடும்" என முன்னணி தரப்பில் கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் தனது கூட்டணியை அறிவிப்பது, அதன் பெயர் பற்றியெதுவுமே தமிழ் மக்கள் பேரவையினருக்கு தெரிந்திருக்கவில்லை. மேடையில் முதலமைச்சர் உரையாற்றிய போதே விசயத்தை அறிந்து கொண்டனர். இது பேரவை உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பேரவையின் முக்கியஸ்தர்களாக இருந்தும் விக்னேஸ்வரனின் முடிவுகளை பற்றிய ஒரு தகவலும் நமக்கு தெரியவில்லையே என பேரவை முக்கியஸ்தர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ●

அதைக் கண்டவுடன் அதில் குளிக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கும் வந்தது. ஆனால், எங்களிடம் நீச்சலுடைகள் இருக்கவில்லை. அத்துடன் நிக்கோ எங்களைக் கடைக்குக் கூட்டிப்போவதாகச் சொல்லியிருந்தார். எனவே, நாங்கள் திரும்பி விடுதிக்குப் போக முடிவுசெய்தோம்.

நிக்கோவைக் கண்டதும் உற்சாகத்துடன் "நாங்கள் நீந்தப் போகிறோம்," என்றான் கதிர். எங்களைக் கடைக்குக் கூட்டிச் செல்வது அவருக்கு எந்த நேரம்வரை சாத்தியமாகும் என்று கேட்டேன். மாலை எட்டு மணிவரை தான் விடுதியில் நிற்பேன் என்றார் அவர். எனவே கதிரின் விருப்பப்படி அருவியில் குளிப்பது என்று முடிவுசெய்துகொண்டு அதற்குத் தேவையான உடைகளை எடுத்துக்கொண்டு மீண்டும் வெளியே புறப்பட்டோம்.

கால்பந்து மைதானமளவுக்குப் பரந்த ஒரு புல்வெளியின் நடுவே



பளிங்குப் பச்சை நிற நீர் சலசலத்தபடி ஓடிக்கொண்டிருந்தது. சில பகுதிகளில் அகலமாகவும், ஆழமாகவும் இருந்தது. இளம் வெளிநாட்டுத் தம்பதிகள் இருவர் மட்டும் நீந்திக் குளித்துக்கொண்டிருந்தார்கள். அந்த நிறத்தில் பாயும் அருவிகளின் மூலமான மலைப்பகுதி அதிக தூரத்திலில்லை.

நீச்சலுடைகளுக்கு மாறிக்கொண்ட கதிர், நீருக்குள் இறங்கலாமா என்று கேட்டான். நீரின் அடிப்பாகத்தில் கற்களாக இருந்ததால் "ஆளமான இடமாகப் பார்த்து, நீந்து!" என்று சொன்னதும் அவன் அப்படிப்பட்ட இடமொன்றாகப் பார்த்துக் கைகளை விரித்துக்கொண்டு உள்ளே பாய்ந்தான்.


கடற்கரையில் சுகமான சூடான நீரில் அதுவரை குளித்திருந்ததால் அதுவும் அதேபோன்ற நீராக இருக்கும் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால், அதுவோ குளிரான நீர். நான் வேண்டுமென்றே அதைச் சொல்லவில்லை. வெளியே வெயிலில் நன்றாகச் சூடாகியிருந்த உடலில் சில்லென்ற அந்த நீர் பட்டபோது ஏற்பட்ட அதிர்வுடன் "பப்பா, நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டீர்கள்," என்று கத்திக்கொண்டே வெளியே ஓடிவந்தான் அவன்.

நான் புல்வெளியில் ஓட அவன் துரத்திக்கொண்டு வந்தான். உடம்பு சூடாகியவுடன் நான் ஓடிப்போய் நீருக்குள் குதிக்கப் பின்னால் ஓடிவந்து குதித்தான் அவன். மீண்டும் சிறு பிராயத்துக்குத் திரும்பியதுபோல உற்சாகமாக இருந்தது. இருவரும் ஆசைதீர நீந்திக் குளித்தோம். **தொடரும்.**





சர்ச்சைக்குரிய வழிபாட்டு தலம்





# கல்முனை மாநகரசபையில் தொடரும் களேபரம்!

## மேயர் - கூட்டமைப்பு உறுப்பினர்கள் மோதல்

**நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டால் சபையில் பேசமுடியாதெனக் கூறமுடியாது. முன்னைய அமர்வுகளின் போது கூட்ட நிகழ்ச்சிநிரல் இல்லாத விடயங்களை பேசி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளோம் எனவும் கூட்ட மைப்பு உறுப்பினர்கள் வாதிட்டனர்.**

**அனார்கலி**

கல்முனை மாநகரசபையின் புதிய ஆட்சிப் பொறுப்பை முஸ்லீம் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் ஏற்ற காலம் முதல் இடம்பெற்றுவரும் சபையின் மாதாந்த செயலமர்வுகளில் எதிரணியினருடன் ஏற்படும் பெரும் வாதப் பிரதிவாதங்களும் களே பரமும் இன்னும் தொடர்கதை யாகவேயுள்ளது.

இந்த நிலமையை தீபம் கடந்த வாரம் "கல்முனைமாநகர சபை களேபரசபையா?" எனும் தலைப்பி லான பத்தி எழுத்து மூலம் சுட்டிக் காட்டியிருந்த நிலையில் கடந்த 16 ஆம் திகதி மாநகரசபையின் மாதாந்த செயலமர்வு நடைபெற்றுள்ளது.

முலீநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில், சபாமண்டபத்தில் நடைபெற்ற இந்த மாதாந்த செயலமர்வு மிக நீண்டநேரம் மிகவும் சுமூகமாகவே நடைபெற்று வந்தமை பலருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

குறிப்பாக உபகுழுக்களின் தீர்மானங்கள் குறித்த குழுக்களின் தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது.

ஒரு கட்டத்தில் 2019 ஆம் ஆண்டுக் கான சபையின் வரவுசெல்வுத் திட்டம் தயாரிப்பது தொடர்பில் சபைக்கு தெரிவித்த மேயர் றகீப், உறுப்பினர்களும் இதற்கு ஆலொசனையாக முன்மொழிவு களைத் தரலாமெனக் கூறியதுடன், நீங்கள் வரவுசெலவுத் திட்டத்தைப் பின்னர் தோற்கடியுங்கள் இப்பொழுது முன்மொழிவுகளை தாருங்களென எதிரணியினரைப் பார்த்து நகைச்சுவையாகவும் கூறி சபையில் கலகலப்பை ஏற்படுத்தினார்.

இந்தமகிழ்ச்சிப் பிரவாகமும் சுமூக நிலையும்நீண்டநேரம்நிலைக்கவில்லை.

### களேபரம்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் (தமிழரசுக்கட்சி) உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் (ராஜன்) சபையில் எழுந்து கல்முனை தமிழ் உப பிரதேச செயலக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்துக்களுக்கான வணக்க ஆலய விவகாரம் தொடர்பாகப் பேசத் தொடங்கினார்.

அவ்வளவுதான் மேயர் றகீப் உடனே குறுக்கிட்டார். இந்த விடயம் நிகழ்ச்சி நிரலில் இல்லை. இது நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரம். எனவே சபையில் இது பற்றிப் பேசமுடியாது. நீங்கள் அமருங்களெனப் பணித்தார்.

உடனே கூட்டமைப்பு உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் ஆக்ரோசத்துடன் எழ ஏனைய கூட்டமைப்பு உறுப்பி னர்களும் எழுந்து நின்று மேயருடன் வாதிட்டனர். அப்போது உறுப்பினர் ஹென்ரி மகேந்திரன் உணர்வு மேலிட்டவராக 'நாங்கள் தமிழ் உறுப்பினர்கள் சபையிலுள்ளோம். இந்தவிடயம் தொடர்பில் எம்முடன் மேயர் பேசியிருக்கலாம். ஆனால் தன்னிச்சையாக மேயர் நீதிமன்றம் சென்று வழக்கு தாக்கல் செய்திருக்கக் கூடாது. தமிழ் முஸ்லீம் உறவைப் பாதிக்கும் செயல் இது. எனவே வழக்கை வாபஸ் பெறவேண்டும்' என குரல் எழுப்பினார்.

நிகழ்ச்சி நிரலில் இல்லாவிட்டால் சபையில் பேசமுடியாதெனக் கூற முடியாது. முன்னைய அமர்வுகளின் போது கூட்ட நிகழ்ச்சிநிரல் இல்லாத விடயங்களை பேசி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளோம் எனவும் கூட்ட மைப்பு உறுப்பினர்கள் வாதிட்டனர்.

ஆனாலும் மேயர் றகீப் விடயத்தில் விடாப்பிடியாகவே நின்றதாலும் மேயருக்கு ஆதரவாக ஆளும் தரப்பு உறுப்பினர்கள் குரலெழுப்பியதாலும் சபையில் அமைதியின்மை ஏற்பட்டு பெரும் களேபர நிலை தோன்றியது.

குறித்த தமிழ் உதவி பிரதேச செயலகத்தில் நிர்மாணிக்கப்படும் கட்டிடம் (வழிபாட்டுத்தலம்) மாநகர சபை அனுமதி பெறாது நிருமாணிக் கப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே வழக்கு தொடரப்பட்டுள்ளதாக கூறிய மேயர் றகீப், இது விடயமாக பேச வேண்டுமானால் சபை அமர்வு முடிந்து வெளியில் பேசலாமெனவும் கூறினார்.


அதேவேளை தமிழ் முஸ்லீம் இனமுறுகலை ஏற்படுத்தும் செயல் களில் ஈடுபடுவது யார் என்பது மக்களுக்குத் தெரியும் எனவும் குறிப்பிட்ட மேயர் றகீப், இங்குள்ள சிலரது (கூட்டமைப்பினரைச் சுட்டி) வகிபாகம் இதில் எவ்வாறுள்ளது மக்களுக்குத் தெரியுமெனவும் விசனத்துடன் கூறினார்.

இந்நிலையில் வாதப் பிரதிவாதங் களும், தர்க்கங்களும் அதிகரிக்க "சபையை விட்டும் வெளிநடப்பு செய் வோம்" என்ற குரல்களும் கூட்டமைப்பு உறுப்பினர்களிடமிருந்து கேட்கத் தொடங்கிய போதும் ஏனைய எதிரணி உறுப்பினர்கள் சிலர் அவர்களை சமாதானப்படுத்துவதில் ஈடுபட்டி ருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

ஒருசமயம், கூட்டமைப்பு உறுப்பினர்களை நோக்கி "அமருங்கள், சபையை குழப்பாதீர்கள், மீறினால் சபையை விட்டும் வெளியேற்றுவேன், முப்பதுநாள் தடையும் விதிப்பேன்" என மேயர் றகீப் எச்சரிக்கவும் தவறவில்லை. அமைதிதென்படாத நிலையில் அமர்வை முடிவுறுத்துவதாகக் கூறிய மேயர் றகீப், சபாமண்டபத்திலிருந்து சென்றார்.

கல்முனை மாநகரசபையே இதுதான் உன் தலைவிதியா? கேட்கிறார்கள் வாக்களித்த மக்கள்! இந்த அவலம் இன்னும் தொடர்கதைதானா?

# நிலத்தை பிளந்து, கட்டாரை தனிமைப்படுத்துமா சவுதி?




அரேபிய தீபகற்பத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது கட்டார். அதனுடைய நில எல்லையாக இருப்பது சவுதி அரேபியா. கடலைத் தாண்டினால் எதிர்ப்புறத்தில் ஈரான் இருக்கிறது. மூன்று புறமும் கடலால் சூழப்பட்டிருக்கும் தீபகற்ப நாடான கட்டார், பிரிட்டனின் ஆளுகையில் இருந்து 1971ல் சுதந்திரம் பெற்றது. சிறிய நாடு என்றாலும் மிகவும் பணக்கார நாடு. தனிநபர் வருமானம் உச்சத்தில் இருக்கிறது. காரணம், இங்கு வற்றாது சுரக்கும் பெட்ரோலியக் கிணறுகள்தான். இந்த நாட்டுக்கு இப்போது ஒரு பெரிய பிரச்சினை உருவாகியுள்ளது. அது தீபகற்பமாக இருக்கும் இது, தீவு நாடாக மாறும் நிலை தோன்றும் வாய்ப்பு உண்டாகி இருக்கிறது!

ஏதாவது இயற்கைப் பேரிடர் வரப்போகிறதா? இல்லை. இது செயற்கைப் பேரிடர். சவுதி அரேபிய அரசு ஒரு பெரிய கால்வாயைத் தோண்ட திட்டமிட்டிருக்கிறது. இது செயல்படுத்தப்படும்போது கட்டார் ஒரு தீவு ஆகிவிடும். இதற்கு 'சல்வா கால்வாய்த் தீவு திட்டம்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. கடந்த ஓரிரு ஆண்டுகளாகவே சவுதி அரசுக்கும், கட்டாருக்கும் உள்ள தீவிர உரசல்கள்தான் இப்போது கால்வாய்த் திட்டமாக வெளிப்பட்டிருக்கிறது.

கட்டாருக்கும் சவுதிக்கும் இடையேயான 37 மைல் எல்லைக்கு இந்தக் கால்வாய் விரியும். இந்தக் கால்வாயின் அகலம் 650 அடி. இந்தக் கால்வாயின் மூலம் அதிக கப்பல்களால் பயணிக்க முடிந்து சவுதியின் சுற்றுலா வருமானம் அதிகரிக்கும் என்று சிலர் கூற, தனது அணு ஆயுதக் கழிவுகளை முடிந்தவரை கட்டாருக்கு அருகில் கொட்ட சவுதி திட்டமிடுகிறது என்கிறார்கள் சிலர்.

ஜூன் 2017ல் கட்டாருடனான தனது தூதரக உறவை சவுதி அரேபியா துண்டித்துக் கொண்டது. என்ன காரணம்?

தீவிரவாதிகளுக்கு கட்டார் ஆதரவு அளிக்கிறது என்பதுதான் வெளிப்படையாகக் கூறப்பட்ட காரணம். அதில் உண்மை உண்டுதான். முக்கியமாக, தீவிரவாதத்துக்கு நிதியுதவி செய்யும் பலரையும் கட்டார் தனது எல்லைக்குள் சுதந்திரமாக அனுமதிக்கிறது. பாலஸ்தீன அணியை ஆதரிக்கும் 'ஹமாஸ்' என்ற தீவிரவாத இயக்கத்தை கட்டார் ஆதரிக்கிறது.


ஆனால், தீவிரவாதிகளைத் தங்க விடுவது, தீவிரவாதத்துக்கு நிதியுதவி செய்வது என்ற குற்றச்சாட்டை எதிர் தரப்பு நாடுகளின் மீதும் சுமத்த முடியும். உலக மகா தீவிர அமைப்புகளில் ஒன்றான ஐ.எஸ். அமைப்புக்கு பல அரேபிய நாடுகள் நிதியுதவி செய்கின்றன என்பது தெரிந்ததுதான். பின் பகைமைக்கு என்னதான் காரணம்? ஈரானின் நண்பனாக கட்டார் இருக்கிறது என்பதுதான் முக்கிய காரணம்!.

'முஸ்லிம் ப்ரதர்ஹுட்' என்ற அரசியல் இயக்கம் தனது குடும்ப வாரிசு ஆட்சிக்கு எதிரானது என்று கருதுவதால் சவுதி அரேபியா இந்த அமைப்பைக் கிள்ளி எறியத் துடிக்கிறது. எகிப்தின் பிரதமர் முகம்மது மோர்ஸி என்பவரும் இந்த அமைப்பின் உறுப்பினர். அவரை, கட்டார் ஆதரிப்பது சவுதிக்குப் பிடிக்கவில்லை. நாளடைவில் தங்கள் நாட்டிலுள்ள முஸ்லிம் ப்ரதர்ஹுட் அமைப்பினரில் கணிசமானவர்களைக் கட்டார் வெளியேற்றிய பிறகுதான் சவுதி அமைதி அடைந்தது.

தாலிபனோடும், அல்காய்தாவுடனும் கட்டார் கொண்டுள்ள நல்லுறவு பிற அரேபிய நாடுகளுக்குப் பிடிக்கவில்லை. கட்டார் நாட்டின் தேசிய தொலைக்காட்சி சனலுக்கு பெயர் அல் ஜசீரா. அது ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களை ஆதரிக்கிறது. ஏமன் அரசை சவுதி அரேபிய அரசு ஆதரிக்கிறது. சவுதி கூறும் குற்றச்சாட்டுகளை கட்டார் மறுக்கிறது. எனினும் சவுதியின் குற்றச்சாட்டுகளுக்குப் பல ஆதாரங்கள் புலப்படுகின்றன.

இந்தக் கால்வாய் திட்டத்தை இப்போது முன்னெடுக்கப் போவதில்லை என்று தற்போது அறிவித்திருக்கிறது சவுதி அரேபியா. எனினும் இது கட்டாரின் தலையில் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தியாகத்தான் இருக்கப் போகிறது. ஒரு நாட்டை பொருளாதாரத் தடைகள், அரசியல் ரீதியான. அணுகுமுறை போன்றவற்றின் மூலம்தான் இதுவரை தனிமைப் படுத்திப் பார்த்ததுண்டு. ஒரு கால்வாயின் மூலம் ஒரு நாட்டைப் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்துவது என்பது வித்தியாசமான 'வேற லெவல்' அணுகுமுறையல்லவா!.





# தோட்ட தொழிலாளர் வேதன அதிகரிப்பு

## பின்னணியும் பிரச்சனைகளும்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன உயர்வு உடன்படிக்கை கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவடைந்த குறித்த உடன்படிக்கை 19 மாத கால இழுபறியின் பின்னர் முதலாளிமார் சம்மேளனத்திற்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையில் சர்வதேச முதலீட்டு வர்த்தக அமைச்சில் மீண்டும் உடன்படிக்கை கைச்சாத்தானது.

இந்த உடன்படிக்கையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியன கைச்சாத்திட்டன.

புதிதாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி, தேயிலை மற்றும் ரப்பர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட 620 ரூபாய் தினசரி வேதனம் 730 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

அத்துடன், வருடத்தில் 300 நாட்கள் வேலையும் இந்த உடன்படிக்கையில் உறுதி செய்யப்பட்டது. அத்துடன், மேலதிகமாக பறிக்கப்படும் ஒரு கிலோகிராம் தேயிலை கொழுந்துக்கு வழங்கப்பட்ட 25 ரூபாய் கொடுப்பனவும், றப்பருக்கான 30 ரூபாய் கொடுப்பனவும் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது.

மேலும், குறிப்பிட்ட 6 மாத காலத்திற்குள் தேயிலை தோட்டங்களை தோட்ட நிர்வாகங்கள் துப்பரவு செய்து கொடுக்க வேண்டும் என்றும், அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டது. அத்துடன், தொழிலாளர்களுக்கான 1000 ரூபா வேதனமும், அதற்கான நிலுவையும் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டபோதும், குறித்த 2016 ஆம் ஆண்டின் புதிய உடன்படிக்கையில் நிலுவை கொடுப்பனவு பற்றி எந்த விடயமும் குறிப்பிடப்படிருக்கவில்லை.

தேயிலை உற்பத்தி வீழ்ச்சி, உலக சந்தையில் தேயிலை விலை வீழ்ச்சி போன்ற காரணங்களை முன்வைத்து தோட்ட நிர்வாகங்களின் சம்மேளனம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிராகரித்திருந்தது.

முழுமை பெறாத இந்த உடன்படிக்கை, தொழிலாளர்கள் நலன்சார்ந்த தங்களின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை புதிய உடன்படிக்கை முழுமையாக கொண்டிருக்கவில்லை என தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்தியிருந்தன.

கடந்த 2016 ஆம் ஆண்டு பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லையென கடந்த காலங்களில் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்க்ள் முன்வைக்கப்பட்டன.

பெருந்தோட்டங்களை சுத்தம் செய்வதாக பெருந்தோட்ட நிறுவனங்கள் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக பெருந்தோட்டப் பணியாளர்கள் குளவிக்கொட்டு, சிறுத்தை தாக்குதல் உள்ளிட்ட தொழில்சார் நெருக்கடிக்கு முகம் கொடுத்ததுடன், உயரிய பயிர் விளைச்சலை பெற முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.பெருந்தோட்ட பணியாளர்கள் நாளாந்தம் 18 கிலோகிராம் தேயிலையை பறிக்க நிர்ப்பந்திக்கப்பட்டதுடன், நிறையை காரணம் காட்டி வேதனம் குறைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தன.

அத்துடன் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் 300 நாட்கள் வேலை என்ற உடன்பாடு பின்பற்றப்படவும் இல்லை. இவை தவிர்ந்த மேலும் பல நெருக்கடிகளை எதிர்நோக்கிய பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு தொடர்பிலான உடன்படிக்கை 14.10.2018 அன்று நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

இந்நிலையில் தொழிலாளரகள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுப்பட்ட வண்ணமே உள்ளனர். முதலாளிமார் சம்மேளனத்துடன் அண்மையில் நடந்த பேச்சிலும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை கோரி தோட்ட தொழிலாளர்கள் இன்றுவரை வீதியிலேயே நிற்கிறார்கள்.

அரசு உடனடியாக இந்த விசயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



# சொல்லேர் உழவு

# திருக்குறளில் உள்ள இந்த சொல், தமிழ்ச் சொல்லா? 5

**கவிஞர் மகுடேசுவரன்**

சொற்களை அறிவதற்கு அகர முதலிகளைப் புரட்டுவது தான் தலைசிறந்த ஒரே வழி. அகரமுதலி என்றால் அகராதிதானே என்று கே ீர்கள். ஆம். அகராதி என்றாலும் அகரமுதலி என்றாலும் ஒன்றே. 'அகர முதல எழுத்து' என்பது ஐயன் வள்ளுவனின் தொடக்கம். அகரத்தைத் தொடக்கமாகக் கொண்ட, அகர வரிசைப்படி அமைக்கப்பட்ட சொற்பொருள் களஞ்சியம்தான் அகராதி. அகரத்தை ஆதியாக தொடக்கமாகக் கொண்ட நூல் என்பதே அகர ஆதி அகராதி என்ற சொல்லின் தோற்றுவாய்.

இடைக்காலத்தில் ஆதி என்பது வடசொல் என்று சிலர் கூற முனைந்தனர். செந்தமிழ்ச் சொற்கள் தொகுக்கப்படும் பெருநூலின் தலைப்பிலேயே வடசொல் இருப்பது தகாது என்று கருதிய தனித்தமிழ் அறிஞர் பெருமக்கள் ஆதி என்பதற்கு முதல் என்ற தமிழ்ச்சொல்லை நேராகக் கொண்டனர். அகரத்தை முதலாகக்கொண்ட நூல் என்னும் பொருளில் அகரமுதலி என்று கூறத்தொடங்கினர். இதுதான் அகராதி அகரமுதலி ஆன வரலாறு.







என்னுடைய அறியாச் சிறுவத்தில் நான் அகராதிக்கும் அகரமுதலிக்கும் வேறுபாடு தெரியாமல் விழித்திருக்கிறேன். இன்றும் இவ்விரண்டையும் கேட்பவர்கள் அகராதி, அகரமுதலி ஆகிய சொற்களால் தடுமாறி நிற்பதுண்டு. பிற்பாடு தொடர்ச்சியான ஆய்வுகளின் வழியாக 'ஆதி' என்பதற்கும் தமிழ் வேர்த்தன்மை உண்டு என்று நிறுவினர். திருக்குறளில் இடம்பெற்றுள்ள எச்சொல்லும் பிறமொழிச் சொல் இல்லை, அவை அனைத்தும் தூய தமிழ்ச்சொற்களே என்று நிறுவுகின்ற ஆய்வு முடிவுகளும் இருக்கின்றன.

அகராதி எனப்படுகின்ற அகரமுதலியை நாடுவதுதான் நம் சொல்லறிவைப் பெருக்கிக்கொள்ள நல்ல வழி. ஓர் அகராதியை எப்படி அணுகுவது என்று நான் சொல்வதற்கு முன்னால் தமிழில் வெளிவந்துள்ள அகராதிகளைப் பற்றிய ஒருவரலாற்றுப் பார்வையைச் செலுத்திவிடுவோம்.

என்னிடம் எல்லாரும் தவறாமல் கேட்கின்ற வினாக்களில் ஒன்று ஐயா... நல்ல தமிழ் அகராதியைப் பரிந்துரைக்க முடியுமா?' என்பதே. ஒரு மொழியில் எழுதப்பட்ட நூல்களில் இலக்கியமானாலும் சரி, இலக்கணமானாலும் சரி, சொற்பொருள் தொகுப்பானாலும் சரி காலத்தால் பழையவையே சிறப்பானவை என்பதை முதற்கண் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மொழிப்பிரிவு நூல்களில் காலத்தால் முந்தியவற்றின் தகைமை குறித்து நாம் புதிதாக எதையும் கூற வேண்டியதில்லை.

அகராதியைப் பொறுத்தவரையில் வீரமாமுனிவர் தொகுத்த 'சதுரகராதி' என்னும் நூல்தான் காலத்தால் பழையது. அந்நூல் கிபி. 1732இல் வெளியாயிற்று. அதற்கும் முன்பாக எட்டாம் நூற்றாண்டு வாக்கிலேயே நிகண்டுகள் எனப்படுகின்ற நூல்கள் தமிழில் தோன்றி வழங்கின. திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு ஆகியவை முறையே எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. நிகண்டுகள் எனப்படுபவை ஒரு சொல்லுக்கு வழங்கப்படுகின்ற பல பொருள்களையும் ஒரு பொருளுக்கு வழங்கப்படுகின்ற பல சொற்களையும் தொகுத்துக் கூறுபவை. அகராதி என்னும் நூலில் செய்யப்படும் செயலும் அதுதான். அதனால் நிகண்டுக்ள் என்றதும் அஞ்சி ஒதுங்க வேண்டா.

சதுரகராதி முதற்று அண்மைக் காலத்தில் வெளியாகியுள்ள கிரியா தற்காலத் தமிழ் அகராதி வரைக்கும் ஏறத்தாழ ஐம்பது அகராதி நூல்கள் தமிழில் வெளியாகியிருக்கின்றன. அந்நூல்கள் வெளியான காலம், பொருட்படுத்தத்தக்கவெளியீட்டாளர், தொகுப்பாசிரியர் ஆகியவற்றின் வழியே இவ்வெண்ணிக்கை கொள் ளப்படுகிறது. அண்மைக் காலத்தில் அகராதி தொகுக்கும் முயற்சியில் தனிப்பட்ட ஆர்வலர்கள்தாம் ஈடு பட்டார்களேயன்றிப் பல்கலைக் கழகங்களோ தமிழ் அமைப்புகளோ அரசோ ஈடுபடவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இவற்றிடையே நமக்கு வேண்டிய அகராதி நூல் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். எதைத் தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும்? **தொடரும்...**

---

**16-ம் பக்க தொடர்ச்சி...**

உறவை முறித்தது ஸில்லா. பின்னர் கோகுரியோவை இயன்ற அளவுக்கு தன் வசம் கைப்பற்றியது. கொரியா தீபகற்பத்தின் பெரும்பகுதியை ஸில்லா தன்வசப்படுத்தியது.

சீனப் பேரரசர் டாங் கொரியா தீபகற்பத்தின் வட பகுதியை கைப்பற்றினார். ஸில்லா தென்பகுதியை கைப்பற்றியது.

கோகுரியோ வீழ்ச்சியடைந்தபிறகு 30 ஆண்டுகள் கழித்து டாயே ஜோயேங் என்பவர் பால்ஹே என்ற அரசை அமைத்து, கோகுரியோ பிரதேசங்களில் இருந்து டாங் ஆட்சியாளர்களை வெளியேற்றினார். அதன்பிறகு, கோகுரியோ பேரரசரின் மகன்களில் ஒருவர் இப்போதைய சியோல் நகரைச் சுற்றிலும் பயேக்ஜே என்ற முடியரசை நிறுவினார். பின்னர் அந்த பேரரசு கொரியாவின் மேற்குப் பகுதியில் இருந்த சிறு அரசுகளை தன்னுடன் இணைத்துக்கொண்டது.

புதிய பயேக்ஜே முடியரசு விரிவடைந்த சமயத்தில் சீன கலாச் சாரத்தையும், அந்த தேசத்தின் தொழில் நுட்பத்தையும், கடல் கடந்த தொடர்புகளையும் பெற்றுக்கொண் டது. இதையடுத்து பயேக்ஜே முடியரசு கடல்கடந்து தனது ஆதிக்கத்தை வளர்த்தது. புத்தமதத்தை ஜப்பான் வரை கொண்டு சென்றது. ஜப்பானிய கலாச்சாரத்தையும், கலை, மொழியையும் கொரியாவுக்கு கொண்டுவந்து சேர்த்தது.


கொரியா தீபகற்பத்தில் மிகப்பெரிய ராணவபலத்துடன் இருந்த பயேக்ஜே முடியரசு, கோகுரியோ பேரரசர் மகா க்வாங்கேடோவால் தோற்கடிக்கப்பட்டது.

அதன்பிறகு, ஸில்லா முடியரசு மிகச்சிறியதாக இருந்தாலும், பக்கத்தில் இருந்த சக்திவாய்ந்த முடியரசுகளுடனும், சீனாவின் டாங் பேரரசுடனும் தந்திரமான ஒப்பந்தங்களைப் போட்டு,



ஆட்சிக்கு ஆபத்து இல்லாமல் பார்த்துக்கொள்வதில் கவனமாக இருந்தது. கி.பி.660ல் ஸில்லா அரசர் முயேயோல் கோகுரியோவையே தாக்கத் திட்டமிட்டார். அவருடைய தளபதி கிம் யு ஷின், சீனப் பேரரசின் படையின் உதவியோடு கோகுரியோவை தாக்கினார். ஆனால், கைப்பற்ற முடியவில்லை. அடுத்தடுத்த ஆண்டுகளில் நடைபெற்ற சண்டைகளில் கோகுரியோவை ஸில்லா தனது கட்டுப்பாட்டில் முழுமையாக கொண்டுவந்தது.

ஆனாலும் கொரியா தீபகற்பம் முழுமையாக ஒரு குடையின் கீழ் வரவே இல்லை. பிறகு எப்போதுதான் வந்தது? அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். **(இன்னும் வரும்...)**


19
மூன்று கில்லாடிகள்!
கதை, படம்: ராஜே
முன்கதை: இரண்டாம் உலகப் போரின்போது பிரெஞ்சுப் படைக்கும் ஜெர்மன் படைக்கும் கடும் மோதல். இரண்டு நாடுகளும் தங்கள் விமானப் படையை விண்ணில் இறக்கிவிட்டனர். பிரெஞ்சுப் படையில் இருந்த ஹெலன் தன்னால் முடிந்த அளவுக்கு ஜெர்மனிய விமானங்களை தேடித் தேடி சுட்டு வீழ்த்தினான்... அப்போது அவனை அறியாமல் ஜெர்மனிய விமானியின் கண்ணில் சிக்கினான்...
ஹெலன் சுட்டுத்தள்ளியதில் பலத்த சேதமான ஜெர்மனி விமானம் முதலில் லேசாகத் தீப்பற்றியெரிந்த நிலையில், விமானம் விமானியின் கட்டுப்பாட்டையிழந்து மளமளவென்று மேலும் தீப்பற்றியெரிந்தவாறு தரையை நோக்கி இறங்கியது.
ஜெர்மனி விமானி சுதாரித்தான்.
இனி இதிலிருந்து தப்பிவிட வேண்டியதுதான்.
பிரெஞ்சு படையினரிடம் சிக்கிக்கொள்ளக் கூடாது.
அவசர வழிக் கதவைத் திறந்து கொண்டு பாராசூட் உதவியுடன்வெளியே குதித்தான்.
ஜெர்மனி விமானம் தரையில் விழுந்து நொறுங்கி பற்றியெரிந்தது.
தொழிற்சாலைகளில் அவசர கால ஒலி எழுப்பியதால் தொழிலாளர்கள் தொழிற்சாலையை விட்டு வெளியேறி ஓடினர். ஜெர்மனி விமானங்களும் தொடர்ந்து குண்டு மழை பொழிந்து கொண்டிருந்தது.
தொழிற்சாலைகளை தகர்த்து விட்டால், நாட்டின் பொருளாதாரத்தை சீர் குலைத்து பிச்சைக்கார நாடாக்கி விடலாம் என்று ஜெர்மனி படை முடிவு செய்து விட்டது.
ஹெலனும் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதிக்கு வந்து சேர்ந்தான்
ஜெர்மனி விமானங்கள் பிணந்தின்னிக் கழுகுகள் போல் வட்டவடித்துக் கொண்டிருந்தன.
குண்டு மழை பொழியும் மிகப்பெரிய ரக விமானங்கள்தாம். மிகவும் ஆபத்தானவை.
இந்த வகை விமானங்களை முதலில் சுட்டு வீழ்த்த வேண்டும்.
சுபாஷ் நமது பிரெஞ்சு விமானங்களும் ஜெர்மனி விமானங்களை மோப்பம் பிடித்து வந்து விட்டன.
ஜெர்மனி விமானங்கள் நான்கு திசைகளிலிருந்தும் வந்து கொண்டிருந்தன.
அடேங்கப்பா இவ்வளவு விமானமும் நம்மைத் தாக்கினால் நாடு சுடுகாடாகி விடுமே!
ஜெர்மனி விமானத்தை கண்காணித்தவாரே சென்றான்.
அடப்பாவிகளா தொடர்ந்து குண்டுகளை வீசிக்கொண்டிருக்கிறார்களே இவர்கள் அடுத்த இலக்கை குறிவைப்பதற்குள் நாம் இவர்களைத் தீர்த்துக்கட்ட வேண்டும்.
ஹெலன் ஜெர்மனி விமானங்களை சுட்டு வீழ்த்த தயாரானான் அதற்கேற்றார்போல் விமானத்தைத் திருப்பினான்.
ஆனால், அவனுக்குப் பின்னால் வந்த ஜெர்மனி விமானியின் கழுகுப்பார்வையில் ஹெலன் சிக்கினான். தனக்குப் பின்னால் ஆபத்து வருவது ஹெலனுக்குத் தெரியாது.
(தொடரும்...)




1

இந்த விளையாட்டுப் பையன்களில் வித்தியாசமான ஒரு பையன் யாருன்னு தெரியுதா? சட்டுனு ஏமாந்துடாமல் லாஜிக்கா யோசிச்சுச் சொல்லுங்க!


3

எத்தனை டைனோசர்ஸ் இங்கே இருக்கு? எண்ணிப் பார்த்துச் சொல்லு கணக்கு!




2

வெளியே இருக்கும் வண்ண மீன்களில் ஒன்று தொட்டிக்குள்ளே குறையுது... அதைக் கண்டுபிடிச்சு சரியாக வண்ணம் தீட்டி தொட்டியிலே விடுங்க!



5


பனிச்சறுக்கிலே பறக்கும் இவங்ககிட்டே 10 வித்தியாசங்கள் கண்டுபிடிக்க முடியுதா பாருங்க!




4

சுட்டி விகடனின் பிறந்தநாளை கேக் வெட்டிக் கொண்டாடணுமா? 1 முதல் 30 வரை புள்ளிகளை இணையுங்க. பிறந்தநாள் பார்ட்டியிலே கலந்துக்கங்க!

மாணவர் பூங்கா






## விடைகள்:

1



2



3




5



# தீபாவளி வாழ்த்துக்கள்
























# தீபாவளி வாழ்த்துக்கள்

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

DS - 589

அரச அங்கிகாரம் பெற்ற வடக்கின் முதல் தர
சாரதிப் பயிற்சி பாடசாலை

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




0777 22 5292
www.kirubalearners.com
fb.com/kirubaalearners
kirubalearners@gmail.com

**தலைமைக் காரியாலயம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200

| | | | | |
|---|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | சித்தங்கேணி 021 225 2500 | பருத்தித்துறை 021 226 1100 | நெல்லியடி 021 226 0700 | சாவகச்சேரி 021 227 0700 |
| ஆவரங்கால் 021 222 6688 | திருநெல்வேலி 021 221 4488 | கச்சேரி 021 222 6699 | தெல்லிப்பளை 021 224 3737 | முழங்காவில் 021 300 6544 |
| விசுவமடு 021 320 1515 | பூநகரி 021 320 1818 | கிளிநொச்சி 021 228 5505 | மன்னார் 023 225 1656 | வவுனியா 024 222 7777 |

# சியன் ரெயிலறிங்



“ஆண்கள் பெண்களுக்கான
அனைத்து ஆடைகளும் நவீன
டிசைன்களில் தைத்து கொடுக்கப்படும்”
“ஆண்களுக்கான விசேட சினிமா
ஸ்ரைலில் தைத்து கொடுக்கப்படும்”



மல்லாகம், சங்கானை வீதி, மாகியப்பிட்டி. தொ.பே: 0769136849

றெஜிபோம் வடிவமைப்புத் துறையில் 10 வருடங்கள் கடந்து...
அதியுச்ச வடிவமைப்புடன்

# சித்தா றெஜிபோம்

“அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது மனம் நிறைந்த இனிய தீபாவளி நல் வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்”

“H - D Quality யான றெஜிபோமில் Quality யான டஸ்ற் கொண்டு 3D - 2D
டிசைன்களாக குறித்த நேரத்தில் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.”

NO 65A. அச்சுக்கூடவீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், 0755445901, வைபர் : 0750394357





இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி,
கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 04.11.2018 அன்று வெளியிடப்பட்டது.